# VARAVU
## 2008

# வரவு








**வர்த்தக மாணவர் ஒன்றியம்**
**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

# வரவு

## இதழ் 10
## 2008

இதழாசிரியர்

**செல்வன் க.அஜித்**

**வர்த்தக மாணவர் ஒன்றியம்**
**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

# VARAVU

Volume : 10

Published on : 2008 January

Editor : K.Ajith

Published by : Commerce Students' Union
Jaffna Hindu Collage
Jaffna

Design & Print : Smart Printers
717, K.K.S Road, Jaffna

# பொருளடக்கம்


- கல்லூரி கீதம் i
- அதிபரின் வாழ்த்துச் செய்தி ii
- எமது அதிபர் iii
- பொறுப்பாசிரியர் ஆசிச்செய்தி v
- இதழாசிரியர் ஆசிச்செய்தி vii
- தலைவர் சிந்தனையில் ix
- செயலாளர் உளளத்திலிருந்து xi
- முன்னாள் ஒன்றிய பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி xiii
- இலச்சனை xv
- வர்த்தக மாணவர் ஒன்றிய செயற்குழு xvii
- க.பொ.த உ/த வர்த்தக மாணவர்கள் - 2008 xix
- வர்த்தக ஆசிரியர் குழாம் xxi
- முகாமைத்துவத்தில் பயிற்சியில் முக்கியத்துவம் 01
- சந்தைப்படுத்தல் கலவை 05
- மாணவர் கல்வியில் அதிபர் ஆசிரியரின் அர்ப்பணிப்பு 10
- தற்போதைய வாழ்க்கை பயணத்திலே மக்கள் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கும் சிக்கனமாக எதிர்வதற்கும் சிக்கனக் கல்வியே சிறந்தது 13
- 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டம் 17
- 2007ம் ஆண்டு 7ம் இலக்க புதிய கம்பனிச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் கம்பனி சார்ந்த எண்ணக்கரு 20
- கம்பனித் தொகுதிக் கடன்கள் 24
- தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் 27
- வரையறுக்கப்பட்ட மக்கள் குத்தகைக் கம்பனி 30
- கடன் அட்டைகள் 35
- நிதியியல் இடைத்தரகர்களை வகைப்படுத்தல் 40
- இலங்கையின் வரிமுறை 45
- பண வீக்கம் 48
- பெறுமதி கூட்டப்பட்ட வரி 52
- அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகளும் சவால்களும் உபாயங்களும் 56
- சர்வதேச பொருளாதார கட்டமைப்பு மாற்றம் 58
- கணக்கீட்டு விகிதங்கள் - ஒரு நோக்கு 62
- முகாமைக் கணக்கீட்டில் முதலீட்டு தீர்மானம் எடுத்தல் / செயற்திட்ட மதிப்பாய்வு 68
- எல்லைக் கிரயவியல் 74
- நாணயத் தளம் 81
- மின் வணிகம் 85

- மத்திய வங்கியின் நாணயத் தாள்கள் 90
- ஆசியாவின் ஆலயங்களும் அமெரிக்காவின் அலைகளும் 94
- ஹற்றன் நஷனல் வங்கியின் கடன்திட்டங்கள் 96
- Swot ஆய்வு 98
- வணிக துளிகள் 100
- காசுப் பாய்ச்சல் கூற்று 106
- தலைமையின் சில துளிர் 113
- உள்ளக கணக்காய்வு 115
- Commercial Related URLs 118
- நிதிச்சந்தை 121
- நன்றி

# கல்லூரிக்கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக்கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒரு பெருங்கலையகம் இதுவே
இளைஞர்கள் உளமகிழ்ந்தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே - பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மண்ணை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள் கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவை பயில் கழகமும் இதுவே
ஓங்கு நல்லறிஞர்கள் உவப்பொடு
காத்திடும்
ஒரு பெருங்கழகமும் இதுவே
உயர்வுறு கழகமும் இதுவே
உயிரன கழகமும் இதுவே

தமிழரெம் வாழ்வினில் தாயென மிளிரும்
தனிப்பெரும் கலையகம் வாழ்க
வாழ்க!வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு

# அதிபரின் வாழ்த்துச்செய்தி

மாணவர்களின் வெற்றியாய் சகபாடிகளின் பங்களிப்பு பிரதானமானது என்பதற்கேற்ப எமது கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தினர் ஒருங்கிணைந்து வரவு சஞ்சிகையை வருடந் தோறும் வெளியிடும் முயற்சி நிலையான பயன்பாட்டினை அளித்து வருகின்றது.

மாறிவரும் காலச் சூழலுக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் ஏற்ப பரவுகின்ற தரமான கருத்துகள் வரவில் தரவுகளாக பதியப்பட்டு வருகின்றன. பாடசாலைகளின் வளர்ப்பகிர்விலே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளையும் பாடப்பரப்புகளில் காணப்படும் முரண்பாடுகளையும் நீக்கி, மாணவர்களின் பரிணாமத்தை வளர்த்து இச்சஞ்சிகை பரிணமிக்க உதவுகிறது. சஞ்சிகையை வெளியிடும் பட்டறிவும், ஆற்றலும் எதிர்காலத் தொழிலுக்கும் கல்விக்கும் துணிவை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. வரவு தடையின்றி ஊற்றெடுத்து உலாவர வாழ்த்துகிறேன்.

**வீ.கணேசராஜா**
**அதிபர்**

# எமது அதிபர்





# பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி

எமது கல்லூரியின் "வர்த்தக மாணவர் ஒன்றியம்" தனது பத்தாவது இதழாக வரவு சஞ்சிகையை வெளியிடுவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மாணவர்கள் கற்றலினால் மட்டும் ஆளுமை விருத்தியைப் பெற முடியாது. கல்லூரியில் ஏனைய இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும். அவற்றின் மூலம் தமது திறமைகளை வெளிப்படுத்தி தம்மை வளப்படுத்திக் கொள்ள முடியும். அவ்வகையில் ஒரு மலரை உருவாக்கி அச்சிட்டு வெளியிடுவது என்பது இன்றைய கால கட்டத்தில் சாமானிய விடயமல்ல. மாணவர்கள் தமது கற்றல் நேரம் தவிர்ந்த ஏனைய நேரத்தில் பல்வேறு அர்ப்பணிப்புக்களைச் செய்து கடின உழைப்பினூடாகவே இம்மலரை அவர்கள் வெளியிட்டுள்ளனர் என்பதை நான் நன்கறிவேன். எண்ணிக்கையில் குறைந்த மாணவர்களைக் கொண்ட வர்த்தகதுறை ஏனைய கணித விஞ்ஞானத் துறைகளோடு இணையாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இதற்கு இம்மலர் வெளியீடு சிறந்த எடுத்துக்காட்டென்றால் அது மிகையாகாது.

எனவே இம்மலரை வெளியீடு செய்வதற்கு காரண கர்த்தாக்களாகிய அம் மாணவர்களை பொறுப்பாசிரியர் என்ற வகையில் மனமுவந்து பாராட்டுவதுடன் அவர்கள் சகல செல்வங்களையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறேன்.

எம் மன்றம் தொடர்ந்து வரவுகளைப் பெற்று "வரவு"களை வெளியிட இந்து அன்னையின் ஆசியும் ஸ்ரீஞான வைரவப் பெருமானின் அருளும் கிடைக்கட்டும்.

**பா. ஜெயரட்ணராஜா**
**பொறுப்பாசிரியர்**

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து.....



யாழ் இந்துக்கல்லூரியின் வர்த்த கப்பிரிவினரால் வெளியிடப்பட்டு வருகின்ற “வரவு” சஞ்சிகையின் மலர் வெளியிடப்படு வதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின் றேன். இவ்வரவு மலர் சஞ்சிகையானது வளர்ந்து வருகின்ற வர்த்தக துறையிலுள்ள பல புதிய நடைமுறை விடயங்களையும் வர்த்தக துறையில் புதிதாக சேர்க்கப்பட்ட பாடப்பரப்புக்களின் விடயங்களையும் கொண்டுள்ளன. இத்தகைய புதிய பாடத்திட்டத்திற்கமைவாக பரீட்சை எழுதும் மாணவர்கள் தனியே பாடப் பரப்புக்களில் மாத்திரம் தங்கியிருக்காது. இன்றைய வளர்ந்து வரும் வர்த்தக துறையில் புதிதாக அறிமுகமாகிக் கொண்டிருக்கும் விடயங்களையும் அறிந்து கொள்வதன் மூலமே பரீட்சையில் வெற்றியடையக் கூடியதாகவுள்ளது. எனவே இத்தகைய விடயங்கள் அனைத்தையும் இந்த ”வரவு” சஞ்சிகையானது கொண்டிருக்கும் என நம்புகின்றேன். இது வர்த்தக மாணவர் களுக்கு பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

எனவே, இந்த வரவு சஞ்சிகையினை வெளியிடுவதற்கு மன்ற உறுப்பினர்களோடு உதவியாக நின்ற பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், இந்த “வரவு” சஞ்சிகைக்கு ஆக்கங்களைத் தந்து உதவிய பல்கலைக்கழக விரிவுரையாளர் களுக்கும்,எமது கல்லூரி மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வர்த்தக மாணவர் ஒன்றியம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**இதழாசிரியர்**
**க. அஜித்**

# தலைவரின் சிந்தனையில்.....



"எத்துறை எனினும் அத்துறை செல்வோம்" என்றவாறு கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக என்றுமே முதலிடம் வகிக்கும் யாழ் இந்து அன்னையின் மடியில் தவழுகின்ற பல்வேறு மன்றங்களின் மத்தியிலும் தனக்கென தனியிடம் பெற்ற எம்மன்றத்தின் வெளியீடான "வரவு" எனும் சஞ்சிகை தசாவதாரம் பெற்றுள்ளதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

இவ் "வரவு" என்ற வணிக மலர் நூற்கல்வியுடன் நின்ற மாணவர்களை யதார்த்த உலகினுள் காலடிவைக்க செய்யும். இத்தகைய செயற்பாடுகளின் மூலம் வர்த்தக மாணவர்கள், தம்மை சார்ந்துள்ள வர்த்தக மயமான உலகினை இனங்கண்டு கொள்ள முடிகின்றது. இவ்வாறான சஞ்சிகை வர்த்தக மாணவர்களுக்கு பேருதவியாக இருக்கும் என்பது வெள்ளிடைமலை.

வணிகமே வாழ்க்கை என்றாகி, பூகோளமே ஓர் கிராமமாகி தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை அனுபவித்து கொண்டிருக்கும் இவ்வேளையில் எனது மன்றத்தினரின் அஞ்சாத மனவுறுதியும், தேடல்களும், அறிவுப்பசியும் தூண்களாக உருவாகி இன்று உறுதியான, வளமூட்டவல்ல நூலாக உங்கள் அன்பு க்கரங்களில் மிளிர்கின்றது.

இனிவரும் இளைய சந்ததியினர் மலருக்கு அழகூட்டி, மணம் சேர்த்து, முத்தான இதழ்களில் தேனிலும் இனிய கருத்துக்களை ஊற்றி மலர வைத்து அறிவு த்தாகத்தை தீருங்கள்! இதுவே எனது பேரவா.....

"வணிக கல்வியை பாரெல்லாம் பைந்தமிழில்
பரப்பி வளமுற வழி செய்வோம்".

வர்த்தக மாணவர் ஒன்றியம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**இ. சஞ்சயன்**
**தலைவர்**

# செயலரின் உள்ளத்திலிருந்து சில கனிகள்



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றிய உறுப்பினர்களின் ஒன்றுபட்ட உழைப்பினாலும், அவர்களது முயற்சியினாலும் வெளியிடப்படுகின்ற "வரவு" என்ற இந்த மலரை உங்கள் கரங்களில் தவழ விடுவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றோம். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அன்னையின் கரங்களில் தவழுகின்ற பல்வேறு மன்றங்களின் மத்தியிலும் தனக்கென ஓர் சிறப்பினதும், முதன்மையினதுமான இடத்தைப் பிடித்துள்ள எமது மன்ற உறுப்பினர்களின் திறமைகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதாக இந்நூல் அமைகின்றது.

1998ம் ஆண்டு எமது மன்றத்தின் முதலாவது மலரை மலர்வித்த எமது மன்றமானது இன்று பல்வேறு பரிமாண வளர்ச்சி ஊடாக இம்மலரை வெளியிடுவதில் உள்ளம் பூரித்து நிற்கின்றோம். தற்போதைய நவீன உலக மாற்றத்திற்கு ஏற்ப பல புதிய நடைமுறை விடயங்களையும், புதிய பாட திட்டத்திற்கு அமைவாக பல்வேறு புதிய ஆக்கங்களையும் தாங்கி இந்த மலரானது வெளியிடப்படுகின்றது. எமது மலரானது வணிகத்துறை கற்கும் உயர்தர மாணவர்களுக்கு மட்டுமன்றி பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கும், இன்னும் ஏனைய வணிக மாணவர்களுக்கும் உதவியாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும். இம் மலர் பாடத்திட்ட பரப்பை மட்டும் கொண்டிருக்காது பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆக்கங்களையும் தாங்கி வருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

எனவே, இந்த வரவு சஞ்சிகையினை வெளியிடுவதற்கு முன்நின்று உழைத்த அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும், அத்தோடு எமக்கு வழிகாட்டியாக நின்ற பொறுப்பாசிரியர்களுக்கும், எமது சஞ்சிகைக்கு திறமையான ஆக்கத்தை தந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

வர்த்தக மாணவர் ஒன்றியம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அ. அன்ரன்
செயலாளர்

உ

# முன்னாள் ஒன்றியப்பொறுப்பாசிரியரின் ஆசி



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியம் வெள்ளிவிழாக் கண்ட பெருமன்றம். இந்த ஒன்றியத்துடனான என் தொடர்பு பொறுப்புடன் கூடிய ஒன்று.

ஒன்றியத்தின் சிரகதைையத்தில் சாட்சியம் பகிர்ந்தவன் என்ற பெருமை என்சக்திக்கு அப்பால் எனக்குக் கிட்டியது. அந்தப் புனித உறவை பொறுப்புடன் காப்பாற்றி வருகின்றேன். என்ற நினைவு கல்விக் கடவுளின் அனுக்கிரகமாகும்.

ஆரம்ப கால ஒன்றிய மாணவர்களின் அடுத்த பரம்பரை யாழ். இந்துக் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர் என்பதை அறியும் காலை உடலில் விபரிக்க முடியாத ஒரு புல்லரிப்புத் தோன்றுகின்றது.

வரவு ஆண்டாண்டு தோறும் வெளிவரக் கல்லூரி வளாகத்தில் அமர்ந்து அருள் பாலிக்கும் ஞான வைரவப் பெருமானை உளமார வேண்டி வாழ்த்துகின்றேன்.

**சே. சிவசுப்பிரமணியசர்மா**
**(முன்னாள் ஒன்றியப் பொறுப்பாசிரியரும்,**
**(முன்னாள் உப அதிபரும்)**

Rs £

$

COMMERCE STUDENTS' UNION

JHC

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றிய பதவியாளர்கள் 2008-2009

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | வீ. கணேசராஜா |
| பொறுப்பாசிரியர் | : | பா.ஜெயரட்ணராஜா |
| தலைவர் | : | இ. சஞ்சயன் |
| துணைத்தலைவர் | : | வி. அனுரதன் |
| செயலர் | : | அ. அன்ரன் |
| உபசெயலர் | : | சி. டுஷ்யந்தன் |
| பொருளாளர் | : | ம. சரிதாஸ் |
| இதழாசிரியர் | : | க.அஜித் |
| விளம்பர நிர்வாகி | : | ந. சுதாகரன் |
| ஆட்சிக்குழு | : | கு. வினோஜன்<br>உ. தமோனுதன்<br>கி. கபிலன்<br>ச. வாகீசன்<br>சி. மதுஷன்<br>சு. பிரசன்னா<br>கு. மகிந்தன் |

# வர்த்தக மாணவர் ஒன்றிய செயற்குழு



**இடமிருந்து வலம் அமர்ந்திருப்பவர்கள்**

(1) க. அஜித் (இதழாசிரியர்) (2) பா. ஜெயரட்ணராஜா (பொறுப்பாசிரியர்) (3) இ. சஞ்சயன் (தலைவர்)
(4) பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்) (5) வி. கணேசராஜா (அதிபர்) (6) அ. அன்ரன் (செயலர்)
(7) பொ. ஸ்ரீஸ்கந்தராஜா (பகுதித்தலைவர்) (8) ம. சரிதாஸ் (பொருளாளர்) (9) கி. சண்முகராசா (பொறுப்பாசிரியர்)

**இடமிருந்து வலம் நிற்பவர்கள்**

(1) வி. அனுரதன் (2) சி. டுஷ்யந்தன் (3) கி. கபிலன் (4) கு. வினோஜன் (5) க. வாகீசன் (6) ந. சுதாகரன்
(7) கு. மகிந்தன் (8) சு. பிரசன்னா (9) உ.தமோனுதன்

## க.பொ.த. (உ/த) வர்த்தக மாணவர்கள் - 2008



# வர்த்தக ஆசிரியர் குழாம்



**இடமிருந்து வலம்**
(1) சி. சிவராஜா (2) இ. சண்முகராஜா (3) பொ.ஸ்ரீஸ்கந்தராஜா (4) பொ. மகேஸ்வரன் (பிரதி அதிபர்)
(5) வீ.கணேசராசா (அதிபர்) (6) ச. ஜெயரட்ணராஜா (7) ந. சிவஞானசுந்தரம்பிள்ளை (8) சி. செல்வராஜா

# முகாமைத்துவத்தில் பயிற்சியின் முக்கியத்துவம்

# Importance of Training in Manegment

**க. தேவராஜா**
பீடாதிபதி
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்
யாழ். பல்கலைக்கழகம்.



## 1.0 அறிமுகம்

நிறுவனங்களின் இலக்கை அடைவதற்கு அங்கு கிடைக்கும் வழங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முகாமைக் கருமத்திற்கு மிக அவசியமான செயற்பாடாக பயிற்சியளித்தல் விளங்குகின்றது. நிறுவனங்களில் காணப்படும் எல்லாப் பௌதீக வளங்களும், மனித வளமும் உச்சப் பயன்பாட்டினை அடைந்து கொள்வதற்கு பயிற்சியே வலியுறுத்தப்படுகின்றது. பழைய காலத்தில் எந்தவொரு நிறுவனத்தினாலும் பயிற்சிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கவில்லை மாறாக விஞ்ஞான முகாமைத்துவ கருத்துக்கள் முன்வைக்கப்பட்டமையைத் தொடர்ந்து நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் ஆளணியின் உச்சப்பயன்பாட்டிற்கும் பயிற்சி வளங்கப்படுதல் இன்றியமையாததாகி விட்டது. பயிற்சி என்பது ஒரு பணியாள் தான் இணைந்திருக்கும் நிறுவனத்திற்கும் அதன் விருத்திக்கும் தனது முழுத்திறனையும் பங்களிப்புச் செய்யத்தக்க வகையில் அவருக்குக் கற்றல் அனுபவங்களை வழங்கும் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்திய செயற்பாடாகும். இப்பயிற்சியின் மூலமே பணிக்கென அமர்த்தப்பட்ட பணியாளர் தத்தமது கடமைகளை வினைத்திறன் கொண்டதாகவும் அதனூடாக உற்பத்திப் பொருட்களும் சேவைகளும் உயர்ந்த அளவிலும் தரத்திலும் வெளியீடு செய்யப்படக்கூடியதாகவும் இடம்பெற முடிவதனை அவதானிக்கலாம்.

## 2. பயிற்சியின் வரைவிலக்கணம்

பயிற்சியென்றால் என்ன என்பது பற்றிப் பல்வேறு ஆய்வாளர்கள்

வரைவிலக்கணங்களை வழங்கியுள்ளனர். "றிச்சார்ட் கல்கூன்" என்பவரது கருத்துப்படி "பணியாளர்கள் தற்காலத்திலும், எதிர்காலத்திலும் செயற்திறன் மிக்கவர்களாக மாற்றப்பட உதவும் செயற்பாடு பயிற்சியளித்தல்" எனக் குறிக்கப் பட்ட தேவையை நிறைவேற்றிக் கொள்ள பணியாளர்களது அறிவு, திறன் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஒழுங்குபடுத்திய நடைமுறை பயிற்சியளித்தல்" என வரை யறுக்கப்படுகின்றது. அதே நேரம் "மைக்கல் ஆம்ஸ்றோங்" என்பவர் கொடுக்கப்பட்ட பணியைத் திறம்பட நிறை வேற்றுவதற்கு ஒரு பணியாளுக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வழங்கும் ஒழுங்குபடுத்திய விருத்தியே பயிற்சியாகும். எனக் கூறப்பட்டுள்ளது. மாறாக "றொபாட் மத்திஸ்ஜோன் ஜக்சன்" என்போர் நோக்கங்களை அடைவதற்கென பணியாளருக்கு அறிவு, எண்ணக்கரு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வழங்கும் கற்றல் செயன்முறை பயிற்சியாகும் என வரைய றுத்துள்ளனர். இத்தகைய பயிற்சிய ளித்தலினால் பணியாளர் அறிவுத்திறன், மனப்பாங்கு, நடத்தை என்பனவிருத்தி பெறுவது மட்டுமன்றி எத்த கைய பயிற்சி பெற்ற ஒருவர் நிறுவனத்தின் பிரதான வளமாக மாற்றம் பெறுவார். இதன் காரணமாகவே பயிற்சி ஒரு செலவல்ல என்றும் பதிலாக ஒரு முதலீடு தான் என்றும் கொள்ளப்படுகின்றது.

## 3.0 பயிற்சியின் முக்கியத்துவம்

பயிற்சியளிக்கும் செயற்பாடு இன்று சிறிய நிறுவனங்களில் இருந்து பல்தேசிய கம்பனிகள் போன்ற பெரிய நிறுவனங்கள் வரை வலியுறுத்தப்படும் முக்கிய தொழிற்பாடாக மாறிவிட்டது. இதற்குக் காரணம் பயிற்சியின் மூலம் பல நன்மைகள் கிடைக்கும் என் இருப்பத னாலாகும். குறிப்பாக,

1. பணியாளாரின் ஒழுக்கம், மனபபாங்கு, நடத்தை என்பவற்றை நிறுவனத்தின் வளர்ச்சிக்கேற்ப மாற்றியமைக்கவும் அதனூடே அவர்களது திறன், அறிவு என்பன விருத்தி பெறவும் பயிற்சி உதவும்.
2. நிறுவனங்களது உற்பத்தியின் அளவும், தரமும் அதிகரிக்கப்பட பயிற்சி உதவும்
3. இயந்திரங்களையும் மூலப்பொருட்களையும் திறனாகப் பயன்படுத்த பயிற்சி வகை செய்யும்
4. நிறுவனங்களில் விரயங்கள் இழிவுபடுத்தப் பட பயிற்சி ஏதுவாகும்.
5. நேரச்சிக்கனத்தைக் கடைப்பிடிக்கத்தக்க வகையில் முகாமையாளரின் மேற்பார்வை குறைக்கப்பட பயிற்சி வகை செய்யும்.
6. ஊழியர்களது வரவீனம் குறைக்கப்பட முடிவதுடன் தொழிலாளர் புரள்வையும் இழிவுபடுத்த பயிற்சி வகை செய்யும்.
7. மறைத்தாக்கம் இழிவுபடுத்தப்படவும் ஊழியர் விசுவாசம் உயர்த்தப்படவும் பயிற்சி வகைசெய்யும்
8. ஊழியர்களை ஊக்கப்படுத்தி அவர்களது உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கு பயிற்சி உதவும்.
9. **ஊழியர்களது** செயற்றிறன் அதிகரி க்கப்படவும் அதனூடே அவர்கள் பதவி யுயர்வு பெறவும் பயிற்சி வகை செய்யும்.
10. ஆளணி காலாவதியாவதைத் தடுப்பதற்கும் மறுபுறத்தில் மனிதவள விருத்தி ஏற்படுத் தப்படவும் பயிற்சியளித்தல் உதவும்.

என்ற வகையில் நிறுவனத்தினருக்கும் மனித சக்தி தேய்வடையாமல் விருத்தி செய்யப்படுவதற்கான பல நன்மைகளைப் பயிற்சியளித்தல் கொண்டிருப்பதனாலேயே பயிற்சியளித்தல் கருமம் நிறுவனங்களில் அவசியமாகின்றது.

## 4.0 பயிற்சியளிக்கும் முறைகள்

நிறுவனங்கள் தமது பணியாளர்களுக்கு பயிற்சியளிக்க பல திட்டங்களை பின்பற்றுவது வழக்கமாகும். இதில் பயிற்சியளிக்கும் முறைகள்

நிறுவனத்தின் தேவைக்கும் நிதிவலிமைக்கும் ஏற்றவாறே தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். பின்வரும் முறைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ பின்பற்றி நிறுவனங்கள் பயற்சியை வழங்க முடியும்.

**1. விரிவுரை**

இது பெரும் எண்ணிக்கை கொண்ட ஊழியர்களுக்கு குறைந்த செலவில் பயிற்சி வழங்கும் முறையாகும். விரிவுரை மண்டபத்தில் வைத்து வழங்கப்படும். வாய் மொழி அல்லது எழுத்து மூலமான தகவல்கள் இப்பயிற்சிக்கு அடிப்படையாகும். இதில் உள்வாங்கும் திறன் குறைவாக இருப்பதனாலேயே இப்பயிற்சியைப் பட்டறைப்பயிற்சி (Workshop) முறையாக மாற்றம் செய்து வருவதனைக் காணமுடியும். இது செய்து காட்டுதலுடன் இணைந்திருப் பதனாலேயே இது விரிவுரையை விட மிகப் பொருத்தமான பயிற்சியளிக்கும் முறையாக கொள்ளப்படுகின்றது.

**2. சுழலும் பயிற்சி**

நிறுவனமொன்றில் பணியாற்றும் ஊழியர்கள் அங்கிருக்கும் எல்லாப் பணிகளையும் கற்றுக் கொள்ள வகை செய்யும் பயிற்சி இதுவாகும். ஒழுங்கான கால இடைவெளியில் நிறுவனத்தில் பல்வேறு பகுதிகளுக்கும் பணியாளர்களை அமர்த்தி இப்பயிற்சி வழங்கப்படும் இந்நிறுவனத்தில் பணியாற்றும் எல்லா ஊழியர்களும் அதன் எந்தவொரு பயிலும் உள்ள பிரிவில் பணியாற்றும் ஆற்றலைக் கொண்டிருப்பர்.

**3. பயிலுநர் பயிற்சி**
**Apprenticeships Training**

ஒரு வேலை தொடர்பான கோட்பாடுகளையும் செய்முறைகளையும் சமகாலத்தில் கற்றுக்கொள்ள வசதியளிக்கும் பயிற்றுதல் முறை இதுவாகும். உயர்மட்ட ஊழியர்களுக்கென பட்டதாரிப் பயிலுநர் பயிற்சியும் நடுத்தர மட்ட ஊழியர்களுக்கென மாணவர்ப்பயிலுநர் பயிற்சி யும் கீழ்மட்ட ஊழியர்களுக்கென கைவினைப் பயிலுநர் பயிற்சியும் வழக்கப்படுகின்றன. இதன் காரணமாகவே நிறுவனத்திலிருக்கும் எல்லா மட்ட ஊழியர்களுக்கும் பயிற்சி வழங்கும் பொதுவான முறையாக பயிலுநர் பயிற்சி அமைந்துள்ளது.

**4. விடய ஆய்வு - Casetridy**

உயர்மட்டத்தவர்களுக்கென வழங்கப்படும் பயிற்றுதல் இதுவாகும் முகாமைத்துவ மட்டத்தில் தோன்றக் கூடிய பிரச்சினைகளை இனங் காணவும், அவற்றைத் தீர்ப்பதற்கான வழி முறைகளைக் கண்டறியவும் ஏற்ற பயிற்சி யளித்தல் முறை இதுவாகும். இதன்படி சிந்திக் கும் ஆற்றல், ஏனையோர் கருத்து க்களுக்கு மதிப்பளிக்கும் ஆற்றல், பிரச்சினை களைத் தீர்த்துவைக்கும் ஆற்றல் என்பவற்றைப் பணியாளருக்கு பயிற்றுவிக்க விடய ஆய்வுப் பயிற்சி உதவும்.

**5. கூடைக்குள் பயிற்சி -**
**In Basket Training**

இது நூல் நிலையத்தில் வைத்து வழங்கப்படும் பயிற்சியாகும். மிகக் குறைந்த செலவில் வழங்கக்கூடிய இப்பயிற்சியில் புத்தகங்கள், அறிக்கைகள், வெளியீடுகள் என்ப வற்றிலிருந்து தகவல்கள் பெறப்பட்டு பகுப் பாய்வு செய்யப்படும் முறை இதுவாகும்., சாத்திய அறிக்கைகள், வியாபாரத்திட்டங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான பயிற்சியளித்தல் முறையாக இது கொள்ளப்படும்.

**6. வகிபங்குப் பயிற்சி - Role playing**

ஒருவர் ஆற்றவேண்டிய பணியில் வைத்து வழங்கப்படும் பயிற்சி இதுவாகும். பணியாளர் எதிர்காலத்தில் ஆற்றவேண்டிய பணியில் வைத்து இப்பயிற்சி வழங்கப்படும். வேலையில் எதிர்நோக்கக் கூடிய பிரச்சினைகளை இனங்கண்டு உடனடியாக தீர்த்துக்கொள்ள இது

வகைசெய்யும். பெரும்பாலும் ஆசிரிய சேவை, வைத்திய சேவை என்பவற்றுக்கு வகிபங்குப் பயிற்சி வழங்கப்படுவது இயல்பாகும். இதன்படி எந்தவொரு பணியாளரும் தனது பணியைச் சரிவரக் கற்றுக்கொள்ள வகிபங்கு பயிற்சி வகை செய்யும்.

### 7. உணர்ச்சி பூர்வப் பயிற்சி Sensitivity Training

உளவியல் சார்பான அறிவை அதிகரிக்கும் நோக்கில் வழங்கப்படும். பயிற்சி இதுவாகும். உயர்மட்ட பதவிகளை வகிப்போர் மற்றையோர் நிலைக்குள்ளாகும் (Empothy) ஆற்றலை அதிகரிக்க இப்பயிற்சி உதவும் உயர்மட்ட தீர்மானங்கள் எடுக்கும் பொழுது அது தொடர்பாக எனையோர் கொண்டிருக்கும் சாதக, பாதக கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு இப்பயிற்சி உதவும். இதற்கென யோகரி யன்னல் (Yahar window) எனும் நுட்பம் பயன்படும். தனக்கு தெரிந்ததும் தெரியாததுமான விடயங்களும் இங்கு பயிற்சியாக வழங்கப்படும் ஏனையோரை முழுமையாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை அதிகரிப்பதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

### 8. முகாமைத்துவ விளையாட்டுக்கள் Management Games

உயர்மட்டத்தவருக்கென அறிமுகப் படுத்தப்படும் பயிற்சி இதுவாகும். முகாமைத்துவ கோட்பாடுகளை இலகுவாக பயிற்சியா ளரிடையே நிலைபெறச் செய்ய இப்பயிற்சி வழங்கப்படும். சில விளையாட்டுக்களினூடாக முகாமைத்துவ கோட்பாடுகளின் உண்மைத் தன்மை நிரூபிக்கப்பட இப்பயிற்சி உதவி செய்யும். இப்பயிற்சியில் இடம்பெறும் விளை யாட்டுக்களெல்லாம் முகாமைத்துவ கோட் பாடுகளின் யதார்த்தத்தினை விளங்கிக் கொள்ள பயன்படுத்தப்படும். வாய்மொழித் தொடர்பாடல் தவறைக் கொண்டுவரும் என்பதை விளையாட்டு மூலம் தெரியப்படுத்துவது இப்பயிற்சியின் பண்பாகும்.

## 8.0 முடிவுரை

பயிற்சியளித்தல் என்பது இன்றைய உலகில் மனிதவள அபிவிருத்தியுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். காரணம் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டவுடன் மட்டுமன்றி காலத்துக்குக் காலம் பயிற்சி வழங்கும் கருமம் மேற்கொள்ளப்படுவதனால் ஒரு முறை மட்டுமன்றி நிறுவனங்களில் தொடராக இடம்பெறும் கருமமாக பயிற்சியளித்தல் கொள்ளப்படுகின்றது இப்பயிற்சியளித்தல் வெற்றியளித்திருக்கின்றதா இல்லையா என்பதனை மதிப்பிடுவதும் பயிற்சியின் இறுதியில் இடம் பெறுதல் வேண்டும். பரீட்சை மீள்பரீட்சை முறை மூலமோ பின்னூட்டி முறை மூலமே, பிரதி பலிப்பின் மூலமோ கற்றறிதல் மூலமோ, அன்று நடத்தையில் ஏற்படும் மாற்றம் மூலமே, பரீட்சையின் வெற்றி மதிப்பிடப்பட முடியும். இத்தகைய பயிற்சிகளை வேலையில் பயிற்சி (On the Training) வகையிலும் வேலைக்கு வெளியே பயிற்சி (off the JobTraining) மூலமும் மேற்கொள்ள முடியும். நிறுவனங்கள் தமது நிதிவலிமையை மையமாகக் கொண்டு பயிற்சித்திட்டங்களை வகிக்க முடியும். இப்பயிற்சித்திட்டங்களுக்கான பணக்கொடுப்பனவு, செலவாக அல்லாமல் முதலீடாக மாற்றம் பெறுவதனை உறுதிப் படுத்துவதே திறனுள்ள பயிற்சியளித்தல் திட்டத்தினை எடுத்துக்காட்டும். ஆதலால் எல்லா நிறுவனங்களும் பயற்சியளித்தலை ஆளணி யின் முதலீடாக முயற்சிக்க வேண்டுமெனக் குறிப்பிடலாம்.

- பண சந்தையின் பிரதான கருவி? திறைசேரி உண்டியல்
- மூலதன சந்தையின் முக்கிய அமைப்பு? பங்கு சந்தை
- வெளியிடப்படும் திறைசேரி உண்டியல்களின் உச்ச அளவை தீர்மானிப்பது ? பாராளுமன்றம்

# சந்தைப்படுத்தல் கலவை
# Marketing Mix

**S. Sivasan**
Asst. Lecturer (On contact basis)
Dept of commerce
University of Jaffna



சந்தைப்படுத்தல் கலவை என்பது எதிர்பார்த்த சந்தையில் எதிர்பார்த்த விற்பனை மேற்கொள்வதற்கு நிறுவனத்தினால் பொருள் (Product), இடம், (Place), மேம்படுத்தல் (Promotion), விலை (Price), மக்கள் (People), படிமுறை (Process), Physical evidence (பௌதிக சந்தை) ஆகிய காரணிகளை தந்திரோபாய முறையில் பயன்படுத்துகின்ற செயற்பாடே சந்தைப்படுத்தல் கலவை எனப்படும் (Marketing Mix)

## பொருள் *(Product)*

நுகர்வோன் தமது தேவைகள், விருப்பங்கள் என்பவற்றினை பூர்த்தி செய்வதற்காக சந்தையில் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள், சேவைகள் என்பன பொருட்களாகும். பொருட்கள் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியிருக்கும்.

1. பொருட்களின் காணப்படும் அம்சம் (Physical Characteristics of Goods)
2. பொருட்களின் தரம் (Product Quality)
3. பொருட்களின் விலை (Price of Product)
4. பொருட்களின் பண்டப் பெயர் (Brand Name)
5. பொதிகட்டல் (Packaging)

**பொருட்களின் வகைகள் *Classification of Products.***

பொருட்களினை அதனுடைய அருவத்தன்மை, உறுதித்தன்மை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**பொருட்கள்**
- திடமான பொருள்
- திடமற்ற பொருள்
- சேவை

### 1. திடமற்ற பொருள்

ஒரு தடவை அல்லது சில தடவைகள் நுகர்வோர் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்படும் பொருட்களையே திடமற்ற பொருள் என்பர். உதாரணம் : சவர்க்காரம், ஐஸ்க்கிறிம்

இத்தகைய பொருட்களுக்கு இலாபவீதம் குறைவாக இருக்கும் விளம்பரப்படுத்தும் நடவடிக்கைகள் அதிகமாயிருக்கும்

### 2. திடமான பொருள்

பல தடவைகள் அல்லது பாவனைக்காலம் கூடிய உருவமுற்ற பொருட்களையே திடமான பொருட்கள் என்பர் உதாரணம் இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி, புடைவைகள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இத்தகைய பொருட்களின் விற்பனை மேம்படுத்தலுக்கு நேரடி விற்பனையே உகந்தது. இத்தகைய பொருட்கள் இலாபவீதம் உயர்வானதுமாகவும், உயர் தொழில்நுட்பம் சார்ந்த பொருட்களாகவும் அமைந்திருக்கும்.

### 3. சேவைகள்

சேவைகள் என்னும் போது தொட்டுணர முடியாத, கண்ணால் பார்க்க முடியாத, சேமிக்க முடியாத, தரத்தில்வேறுபடுகின்ற தன்மை கொண்ட விற்பனைக்காக அளிக்கப்படும் செயற்பாடுகள் அல்லது பயன்கள் அல்லது திருப்தி சேவையாகும்.

**பொருட்கள்**
- நுகர்வு பொருட்கள் (Consumers products)
  - வசதிப்பொருட்கள் (Convenience)
  - கடையில் உள்ள பொருட்கள் (Shopping products)
  - விசேட பொருட்கள் (Specialty product)
- கைத்தொழில் (Induction / Products)
  - மூலப்பொருட்கள் (Row materials)
  - முதலீட்டுப் பொருட்கள்
  - சேவைகள்

## வசதியான பொருட்கள் *(Convenience product)*

இத்தகைய பொருட்களின் முக்கியமான இயல்பு என்னவென்றால் நுகர்வோர் குறித்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்னரே பொருட்கள் பற்றிய பூரணமான அறிவினை உடையவராக காணப்படுவார். குறைந்தளவு முயற்சியுடன் கொள்வனவு செய்ய கூடியதாகவும் காணப்படும்.

இத்தகைய பொருட்களுக்கு சிறந்த உதாரணமாக பலசரக்கு பொருட்கள், சஞ்சிகை பத்திரிகைகள் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

## கடையில் உள்ள பொருள் *(Shopping Products)*

பொருந்தும் தன்மை, தரம், வடிவம், போன்றவற்றிற்கு அமைவாக பொருளினை பல்வேறு பொருட்களுக்கு இடையே சுதந்திரமாக தெரிந்து எடுக்கக் கூடிய பொருட்களே கடையில் உள்ள பொருட்கள் என்பர் உதாரணமாக தளபாடங்கள், வீட்டுச்சாதனம், போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

## விசேட பொருள், அல்லது தனி சிறப்பு வாய்ந்த பொருட்கள் *(Specialty Goods)*

கொள்வனவாளர் குறிப்பிட்ட ஒரு பொருளையே கொள்வனவு செய்வதென முடிவு எடுத்த பின்பு. அப்பொருளை சந்தையில் தேடிக் கொள்வனவு செய்யப்படின் அதனையே தனிச்சிறப்பு வாய்ந்த பண்டம் என்பர். உதாரணமாக கொள்வனவு செய்ய வேண்டிய ஆடையினை நிர்ணயித்த பின் பல நிறுவனங்கள் தேடித் தெரிவு செய்வதனை குறிப்பிடலாம். இலாப வீதம் உயர்வாக இருக்கும். தேடுதல் அதிகமானதாக இருக்கும் விசேட பண்புகளை இப்பொருட்கள் கொண்டிருப்பதனால் கொள்வனவுக்கு விசேட குழுக்கள் அமைக்கப்பட்டு அவர் மூலமாகவே கொள்வனவு செய்யப்படும். இவை ஆடம்பர பொருட்களாகவே பெரும்பாலும் அமைந்திருக்கும்.

பின்வரும் அட்டவணை மூலம் கடையில் உள்ள பொருள், விசேட பொருள், வசதியான பொருள் ஆகியவற்றின் இயல்பினை விளக்கலாம்.

| | வசதியான பொருட்கள் | கடையில் உள்ள பொருட்கள் | விசேட பொருட்கள் |
|---|---|---|---|
| 1) நுகர்வோன் கொள்வனவு செய்வதற்கு செலவு செய்யும் நேரமும் முயற்சியும் | மிக குறைந்த நேரமும், செலவும் | கருத்தில் எடுக்கக் கூடிய நேரமும் செலவும் | பொருட்களின் கிடைப்பனவுக்கு மாற்றம் அடையும் |
| 2) விலை | குறைவான விலை | அதிகமான விலை | அதிகமான விலை |
| 3) கொள்வனவு செய்யப்படும் தடவை | வழமையாக அடிக்கடி | சிலவேளைகளில் | சில வேளைகளில் |
| 4) விநியோக வழிமுறை | நீண்ட | குறுகிய | குறுகியதும், மிகக் குறுகியதும் |
| 5) இருப்பு புரள்வு | அதிகளவு | குறைந்தளவு | குறைந்தளவு |

## கைத்தொழில் பொருட்கள் *(Industrial goods)*

மீள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்ற பொருட்களை பொதுவாக கைத்தொழில் பொருட்கள் என்பர். கைத்தொழில் பொருட்களை என்ன முறையில் உற்பத்திக்கு செல்கின்றது என்ற அடிப்படையிலும் கிரயத்தின் அடிப்படையிலும் கீழ்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

1. உற்பத்திப் பொருட்களும் அதன் உதிரிப்பாகங்களும்
2. முதலீட்டுப் பொருட்கள்
3. சேவைப்பொருட்கள்

### மூலப்பொருட்களும் அவற்றின் உதிரிப்பாகங்களும்

இவை உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் முழுவதும் உள்வாங்கப்படுவதாகும். மூலப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் உதிரிப்பாகங்களும் என இரு வகையாக வகுத்து நோக்கலாம்.

### மூலப்பொருட்கள் உற்பத்திக்கு உள்ளீடாக அமைகின்றது இவை இரண்டு வகைப்படும்.

1. பண்ணைப் பொருட்கள் (கோதுமை, பஞ்சு, கால்நடை, பழங்கள்)
2. இயற்கைப் பொருட்கள் (மீன் பெற்றோல், இரும்புத் தாதுப் பொருட்கள்)

இவ்வகையான பொருட்களை விநியோக வழிமுறையின் அளவு சிறிதாகவும், போட்டி விலைக்கு முக்கியத்துவமுடையதாகவும் போட்டிப் பொருட்களின் நியமப்படுத்தல் அதிகமாகவும் இருக்கும்.

### முதலீட்டுப் பொருட்கள்

நீண்ட காலம் பயன்படுத்தப்படுத்தக் கூடிய பொருட்களே முதலீட்டுப் பொருட்களாகும். இங்கு உதாரணமாக கட்டிடங்கள், இயந்திரங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். இத்தகைய முதலீட்டுப் பொருட்கள் விநியோகமானது நேரடியாகவே விநியோகிக்கப்படுகின்றது.இதனால் உற்பத்தியாளர்களிடம் அல்லது முகவரிடம் கொள்வனவாளர்கள் நேரடியாகவே கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கிறது.

## பண்டக்குறி *Product brand*

சந்தைப்படுத்துபவர் போட்டிப் பொருட்களிடமிருந்து தமது பொருட்களை வேறுபடுத்தி காட்டுகின்ற முக்கியமான ஆயுதமாக பண்டக்குறி பயன்படுகின்றது இலக்கு சந்தையில் போட்டிப் பொருட்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே நுகர்வுப் பொருட்கள் கைத்தொழில் பொருட்களின் வெற்றி தங்கியுள்ளது.

இது தனிப்பெயர், சின்னம் அல்லது குறி ஆக்க உரிமை அல்லது இவை அனைத்தும்உள்ளடங்கியதாக அமைந்திருக்கலாம். பண்டப் பெயரினை தெரிவு செய்து கொள்ளும் போதுகீழ் வரும் அம்சங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1) பண்டப் பெயரானது பொருட்களின் சிறப்புத் தன்மையினை அல்லது பயன்பாடு பற்றி எடுத்துக் காட்டக் கூடிய வகையில் அமைந்திருத்தல் வேண்டும்.

2) இலகுவாக ஞாபகப் படுத்தக் கூடியதாகவும், இலகுவாக உச்சரிக்கக் கூடியதாகவும் ஏனைய பொருட்களில் இருந்து வேறுபடுத்தி அடையாளம் காணக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்

3) சட்டத்தின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்

4) ஏனைய பண்டங்களின் பதிவு செய்யப்பட்ட பண்டப் பெயராக இருத்தலாகாது.

## வினைத்திறனான பண்டப்பெயரின் இயல்பு *(Features of effective brand name)*

ஒரு வினைத்திறனாக பண்டப் பெயர் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்

1. இலகுவில் நிறைவு படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்
2. இலகுவான முறையில் உச்சரிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.
3. மக்களால் இலகுவில் அங்கீகரிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.
4. சிறியதாயிருக்க வேண்டும்.
5. தனித்தன்மை (Unique) வாய்ந்ததாகவும், வேறுபடுத்தக் கூடியதாகவும் அமைந்திருக்க வேண்டும்.
6. பொருள் பற்றி கூறக் கூடியதாக இருக்க வேண்டும்.
7. பொருளின் பயன்பாடு பற்றிவிபரிக்க கூடியதாயிருக்க வேண்டும்


*Ajzen I, & Fishbein, M. (1980) Understanding attitudes and predicting social behavior Englewood cliffs, NJ: Prentice-Hall*
*Phillip kotler, (2007) Marketing management 13th Edition printed by peason publication*
*Johnsion and maten. M. (2005), Understandings of Marketing 4th Edition, DNM publication*

- அலகு பொறுப்பாட்சி ஸ்தாபனத்திற்கு அனுமதி வழங்கும் அமைப்பு?
  பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு
- இலங்கையின் கொடுகடன் தரமிடும் நிறுவனம்?
  Fifch Ratings Lanka Rtd.
- உலகிலேயே மிக பெரிய நூல் நிலையம் என வர்ணிக்கப்படுவது?
  Inter Net
- முதலாவது கணனியை வடிவமைத்த நிறுவனம்?
  IMB
- 'IPO Cycle" எனப்படுவது
  Input → Process → Output

# மாணவர் கல்வியில் அதிபர் ஆசிரியரின் அர்ப்பணிப்பு



N. Suthaharan
A/L 2008 Commerce
Jaffna Hindu College



கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினூடாக மாணவர்களின் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் பிரதான நிறுவனம் பாடசாலை ஆகும். இத்தகைய பாடசாலையின் வெற்றிக்கு பிரதானமாக மூன்று காரணிகளை குறிப்பிடலாம்.

அ) ஆசிரியர்களின் அர்ப்பணிப்புள்ள செயற்பாடு

ஆ) பெற்றோரின் ஒத்துழைப்பு

இ) மாணவர்களின் கற்க வேண்டும் என்ற ஊக்கம்

இவற்றுள் பெற்றோரின் ஒத்துழைப்பு, மாணவர்களின் ஊக்கம் சாதகமாக காணப்படினும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புள்ள செயற்பாடு பற்றி சற்று சிந்திக்க வேண்டியுள்ளது.

கற்றற் செயற்பாட்டிற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும் வசதிப்படுத்துனராக ஆசிரியர்கள் கருதப்படுகின்றனர் கற்பித்தலுக்கு அறிவு சார் பின்புலம் ஆசிரியர்களிடமே எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக ஆசிரியர்கள் தமது மாணவர்களது வெற்றிக்கான பொறுப்புகளை பெருமிதத்துடன் ஏற்றுக் கொள்ளுகின்றார்கள் ஆனால் தோல்வியடையும் மாணவர்களுக்கு மாணவர் அக்கறையின்மை, பெற்றோர் சமூகத்தினரையும் காரணம் காட்டி தப்பிவிடுகின்னர் ஒரு போதும் ஒரு பிள்ளையின் கற்றல் பின்னடைவிற்கு எனது வகுப்பறை ஒழுங்கமைப்பு காரணமாக இருந்ததா? என்னாற் பயன் படுத்தப்பட்ட கற்றல், கற்பித்தல் உத்திகள், கற்றல் உபகரணங்கள் பொருத்தமாக அமையவில்லையா? போன்ற சுய மதிப்பீட்டு வினாக்களை ஆசிரியர்கள் கேட்பதில்லை

ஆசிரியர்கள் தங்களைத் தாங்களே சுய பிரதிபலிப்பதற்கு உட்படுத்தவும் தமது கற்றல் கற்பித்தல் உத்திகளை மாற்றியமைக்கவும், வளங்களை உரிய முறையில் பயன்படுத்தவும், எல்லா மாணவர்களும் கற்கக் கூடியவர்கள் என்பதனை ஏற்றுக்கொண்டு தனியாள் வேறு பாடுகளுக்கு ஏற்ப செயற்பாடுகளை திட்ட மிடவும் ஆசிரியர் முனைதல் வேண்டும். இவற்றை சிறந்த முறையில் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை சிறந்த போதனைத் தலைவர் என்ற வகையில் முகாமை யாளரான அதிபர் மேற்பார்வை செய்வது அவரது பிரதான கடமை.

பாடசாலைத் தலைமைத்துவத்தில் அதிபர் எனப்படுபவர் அலுவலகம் சார் நிருவாக முகாமைத்துவ கடமைக்கு அப்பால் பாடசாலையில் ஆசிரியர்மாணவர்களுடன் அவர்களது கற்பித்தல் கற்றல் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு வகுப்பறைகளுக்குச் சென்று கற்றல் கற்பித்தல் நிலைமைகளை அவதானித்தல் அவர்களது பலம் பலவீன ங்களையும் அறிந்து தேவையான வழி காட்டல்களையும் மேற் கொள்ள வேண்டும். போதனாத் தலைவர் என்ற வகையில் பாடசாலையின் மையச்சக்கரமாக விளங்குபவர் அதிபர் ஒவ்வொரு ஆசிரியரதும் போதனை அளவானது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் தரம், மாணவர் சாதனையின் உச்ச எல்லை மற்றும் பாடசாலை தொழிற்பாட்டின் வினைத்திறனின் அளவு ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துபவராக அதிபர் உள்ளார். எனவே மாணவர்கள் மீது அக்கறை கொண்டுள்ள அதிபர் எனப்படுபவர் அலுவலகத்தில் இருந்தபடி ஏனையோர் மூலம் அறிந்து கொள்ளும் தகவல்கள் நம்பகத்த ன்மையினை கொண்டிருப்பதில்லை. இதனால் அதிபர் தமது நாளாந்த செயற்பாட்டில் வகுப்பறை தரிசிப்பு மிக அவசியம் அதன் மூலம் மாணவர் நிலை, ஆசிரியர் வாண்மை விருத்திகளையும் அவதானிக்கலாம்.

இன்று எமது பாடசாலைக் கல்வி அமைப்பிற்கு பெரும்சவாலாக விளங்குகின்ற இன்னொரு புறநிலை அமைப்பு தனியார் கல்வி நிலையங்கள் ஆகும். இத்தகைய தனியார் கல்வி நிலையங்களை வருமானம் உழைக்கும் வர்த்தக நிலையங்கள் என பல கல்வியாளர்கள் கூறுகி ன்றார்கள் அது மட்டுமல்லாமல் பாடசாலை க்கல்வியை வீட்டுச்சாப்பாட்டிற்கும் தனியார் கல்வியை ஓட்டல் சாப்பாட்டிற்கும் ஒப்பிடு கின்றார்கள் இத்தகைய தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்கள் சுயமாக கற்பதற்கும், சிந்திப்பதற்கும் அவகாசம் கொடுக்காததோடு படித்த அலகுகளை மீண்டும் மீட்டல் செய்து பார்க்க நேரம் இல்லாதவர்களாக அலைந்து திரிய வகை செய்கின்றது. எனவே இத்தகைய நிலையினை மாற்றி பாடசாலையினை முழுமையான கல்வி ஊடகமாக மாற்றியமைக்க போதனாத் தலைவராகிய அதிபரும் ஆசிரியர்களும் செயற்பட வேண்டும். மேலும் ஆசிரியர்களும் தமக்கிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, புரிந்துணர்வுகளை வளர்த்தல் வேண்டும் அத்துடன் புதிய விடயங்களை தேடி அறியும் ஆற்றலையும் வளர்த்தல் வேண்டும்.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் நடாத்தப்படும் விதமும் வினையாற்றலின் வெற்றி தோல்விகளுக்கு காரணமாகின்றது. இச் சந்தர்ப்பத்தில் ஓர் அதிபர் ஆசிரியர்களுடன் கொண்டிருக்கும் தொடர்புகள், வேலைகளை பகிர்ந்தளிக்கும் விதம், பொறுப்புகளை பகிரும் முறை, வெகுமதி, தண்டனை வழங்குவதில் நடுநிலமை பேணுதல், தொழிலின் அபிவிருத்திக்கான ஊக்குவிப்பு, பயிற்சிகளின் பங்கு பெறச் செய்தல் என்பவற்றுடன் குறைந்த மட்டத்தில் வினை யாற்றும் ஆசிரியர்களுடனான தொடர்பினை அதிபர் நாள்தோறும் அவதானித்து வருதல்

திட்டமிட்ட ஒழுங்கு முறையான மேற்பார்வை, கலந்துரையாடல், ஆலோசனை வழங்குவதை நடைமுறையாக கொள்ள வேண்டும். அத்துடன் நோய் வாய்ப்பட்டவர்கள், உணர்ச்சி வசப்படுபவர்கள், விரைவில் கோபப்படுபவர்கள் தமக்கு எவ்வித அதிகாரமும் இல்லை எனக் கருதுபவர்கள், தமக்கு, உரிய முறையான பதவிகளை தரவில்லை என நினைப்பவர்கள், எதிலும் எதிர்மறையான சிந்தனைப் போக்கு டையவர்கள் பாடசாலை முகாமைத்துவதற்கு சவாலாக இருப்பவர்கள் இவையாவற்றையும் கருத்திற் கொண்டு நடுநிலையுடன் அதிபர் செயற்படுதல் பயன்மிக்கது. இதன்மூலம் ஆசிரியர் வாண்மை அதிகரிக்கப்பட்டு அதன் மூலம் மாணவர் கல்வி தடையின்றி தொடர வழி செய்வதாக அமைகின்றது.

கல்வியின் அபிவிருத்திக்கு ஆசிரியர், அதிபர் மட்டும் காரணிகளாக நாம் முழுமையாக கொள்ள முடியாது. மாணவர்களாகிய நாமும் முழுமையான அர்ப்பணிப்புடன் செயற் படுவதில்லை. ஏனெனில் உலகில் காணப்படும் ஐந்து அறிவுள்ள சகல உயிரினங்களும் தமது கடமைகளை காலம் தவறாது செய்கின்றன ஆனால் ஆறு அறிவுள்ள மனித உயிர்களே தமது கடமைகள். பொறுப்புக்களில் இருந்து விலகுகின்றன. இந்த வகையில் மாணவர்களாகிய நாம் எமது கடமைகளையும் நன்கு உணர்ந்து கல்விக்கான அமையச் செலவினை கருத்திற் கொண்டு அதிபர், ஆசிரியர்களின் வெற்றிக்கு ஒத்துழைப்பு செய்ய வேண்டும். அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டல்களை கடைப்பிடித்து எமது நாட்டில் குன்றிய கல்வியை உயர்த்துவதற்கு வழி செய்தல் வேண்டும். ஏனெனில் இன்றைய கல்வி நிலையானது மாணவர்களையும் ஆசிரியர்களையும் இயந்திரமயப்படுத்தி பெறுபேறுகளைத் தயாரித்து வெளித்தள்ளுவது போன்று அமைகின்றது அதற்கு இசைவான சிறந்த இயந்திர சாதனமாக மாணவர்களாகிய நாம் செயற்படுதல் வேண்டும். இதற்கு ஏற்ப கல்வி நிர்வாகிகள் அதிகாரம் செலுத்துவதில் நம்பிக்கை வைக்காது. ஆசிரியர் மாணவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு. அவற்றை தீர்த்து வைப்பதுடன் அவர்களை கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளில் ஊக்குவிப்பதன் மூலமும் எமது கல்வியின் தனிச் சிகரத்தை தொடர்ந்தும் வலுவுடையச் செய்வோம் அது மட்டுமல்லாமல் மனிதவளக் கல்வி முகாமையால் நவீன அணுகுமுறைகள் எவை கொண்டு வரப்படினும் அவற்றை சவால்களாக ஏற்று வெற்றியடைய ஒத்துழைப்பு வழங்குதல் மாணவர்களது கடமையும் பயன்மிக்க அர்ப்பணிப்பும் ஆகும்.

**உசாத்துணை நூல்கள்**



1) கல்வியியலாளன் - நிர்மலா நல்லையா
2) கல்வியியற் சிந்தனைகள் - கலாநிதி ச. நா. தணிகாசலம்
3) இலங்கையில் முகாமைத்துவக் கல்வி - மா. சின்னத்தம்பி


- புளுசிப் கம்பனிகளின் சந்தை விலை அசைவு எந்த சுட்டியினால் கணிப்பிடப்படுகிறது
  மிலங்கா விலை சுட்டி
- கணனியில் இருந்து இன்னொரு கணனிக்கு மற்றொரு வெளியீட்டு அலகிற்கு தகவல் பரிமாற்றம்
  கீழிறக்கல் (Down Load)
- வெளிநாட்டு முதலீட்டுக்கான அரசின் நேரடி முகவராக தொழிற்படும் அமைப்பு
  இலங்கை முதலீட்டுச்சபை

# தற்போதைய வாழ்க்கை பயணத்திலே மக்கள் பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கும் சிக்கனமாக வாழ்வதற்கும் சிக்கன கல்வியே சிறந்தது



K.Nirujan
A/L 2008 Commerce
Jaffna Hindu College



நாம் தற்போது ஒரு பணப் பொருளாதாரம் கூடிய வாழ்க்கை சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதாவது அன்றாட வாழ்விற்கு தேவையான அனைத்தையும் பணத்தை வைத்தே பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிர்ப்பந்த சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பணத்தின் பயன்பாடு குறைந்து வருவதால் இந்த நிர்ப்பந்த சூழலை எம்மால் எதிர்கொள்ள முடியாது போகலாம். அவ்வாறு நேராமல் இருப்பதற்கு எமக்கு சிக்கனக் கல்வியே (Economics) ஒரு சிறந்த பயன்பாட்டினை பெற்றுத் தரும் என்று கூறுவதில் எந்தவித ஐயமும் இல்லை.

நாம் எல்லோரும் பண்ட பழக்க வழக்கங்களை கொண்டுள்ளவர்களாக காணப்படுகின்றோம். அதாவது அன்றாடவாழ்வில் கூடியளவில் பண்டங்களையே பயன்படுத்துகின்றோம். இவ்வாறு நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்துகின்ற பண்டங்களை அத்தியாவசிய பண்டம், ஆடம்பர பண்டம் என்று இரு வகைப்படுத்தலாம். அத்தியாவசிய பண்டங்கள் என்ற அடிப்படையில் நாம் கருதுவது நாம் அன்றாட நுகர்விற்காக வாங்கும் மிகவும் இன்றியமையாத பொருட்களாகும். உதாரணமாக அரிசி, கோதுமை என்பவற்றை கூறிக் கொள்ளலாம். இவ்வாறு எம்மால் நுகரப்படுகின்ற பொருட்கள் அன்றும் பயன்படுத்தப்படலாம் அல்லது ஓரிரு நாட்களுக்கு வைத்தும் பயன்படுத்துகின்றோம். இவ்வாறு பயன்படுத்தும் பொருட்களின் விலை உயர்வடைவதால் எமது அன்றாட நுகர்வு பாதிக்கிறது. அன்றாட உணவு தேவையை அல்லது எமது அத்தியாவசியமான தேவையை எம்மால் பூரணப்படுத்த முடியாது போதல் எவ்வளவு கவலைக்கிடமான ஒரு விடயமாகும்.

அடுத்ததாக நாம் ஆடம்பரப் பண்டங்களை எடுத்துக் கொண்டால், இதனை வருமானம் கூடிய ஒரு சமூகமே கூடுதலாகப் பயன்படுத்துகின்றது. இவற்றிற்கு விலை கூடக் கூடத்தான் இந்த பொருட்களின் கௌரவமும் அதிகரிக்கும். இந்த பண்டத்தை நடுத்தர வர்க்கத்து மக்களும் பயன்படுத்துகின்றனர். ஆதலால் இப்பண்டத்தில் விலையேறுவதென்பது ஒரு பிரச்சினையான விடயமில்லை.

அத்தியாவசியமான பொருட்களின் விலையேற்றத்தால் பாதிக்கப்படுவது, அடிமட்டத்து மக்களும், நடுத்தர வர்க்கத்து மக்களும் ஆவர். இவ்வாறு ஏற்படும் நிலையை எம்மால் தடுக்க முடியாது. ஆனால் தவிர்த்து கொள்ளலாம். அவ்வாறு தவிர்த்து கொள்வதற்கு ஏற்றதே இந்த சிக்கனக்கல்வி முறை எனப்படுகின்ற பொருளியலாகும். பொருளியல் அதாவது சிக்கனக்கல்வி என்றால் என்ன என்கின்ற கேள்வி பலரில் காணப்படுகின்றது. சிக்கனக்கல்வி என்பது நாம் எவ்வளவோ பொருட்களை கொள்வனவு செய்கின்றோம், விற்பனையும் செய்கின்றோம். இவ்வாறு நாம் கொள்வனவோ, அல்லது விற்பனையோ செய்யும் போது நாம் விற்பனை செய்கின்ற பொருளால் எமக்கு செலவு ஏற்படும். செய்யப்படும் செலவை கணக்கில் வைத்து அதனால் திரட்டப்படுகின்ற இலாபத்தை கூடுதலாக பெற வேண்டும். அவ்வாறு பெறுவதற்கு நாம் விற்பனைக்கு தயாராக்குகின்ற பொருட்களில் சேர்க்கப்படும் அல்லது பயன்படும் மூலப்பொருட்கள் என்பனவற்றின் அளவை குறைத்து அல்லது அதன் கிரயத்தை குறைத்து ஆரோக்கியமான தரமான பொருட்களை உற்பத்திசெய்து மக்களிடம் விற்பனைக்கு விடுவதால் எமக்கு இலாபம் கூடுதலாக கிடைக்கும். இவ்வாறு எப்படி சிக்கனமாக பொருட்களை பயன்படுத்தி உற்பத்தி செய்வது அல்லது கொள்வனவு செய்வது என்பதே சிக்கனக்கல்வியாகும்.

ஒவ்வொரு அரசாங்கத்தின் மாற்றத்தினாலும் உள்நாட்டு போரினாலும் பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற எமது நாட்டை போன்ற பல நாடுகளில் இந்த சிக்கனக்கல்வியே கைகொடுக்கின்றது. பொருட்களின் விலையேற்றத்தால் பாமரமக்கள் கவலைக்கிடமான நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். தாங்கள் ஈட்டும் வருமானம் உணவுக்கே செலவாகி விடுகின்றது என்ற நிலை. இவ்வாறு நடப்பதனால் அவர்களின் ஆரோக்கியம் குறைவதோடு மட்டுமல்லாது, பணத்தின் கேள்வியும் அதிகரிக்கின்றது. பணத்தின் கேள்வியை நாம் நிவர்த்தி செய்ய புதிய பணத்தை அச்சிடுகின்றோம். ஆனாலும் பணத்தின் கேள்வியை நிவர்த்தி செய்ய முடியவில்லை. இது ஒருபுறமிருக்க இலத்திரனியல் பணம் என்ற ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பணத்தின் கேள்வி மேலும் மேலும் அதிகரித்து செல்கின்றது. இலத்திரனியல் பணத்தை நடுத்தரவர்க்கத்து மக்களும் பணக்கார வர்க்க மக்களுமே பயன்படுத்துகின்றனர். இவர்கள் தங்களுடைய சிறிய தேவைகளுக்கும் இதனையே பயன்படுத்துகின்றனர். இதனால் பணத்தின் தேவை மேன்மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்படிப்பட்ட பல காரணங்களுக்கும் அடிப்படையாக இருப்பது இந்த பொருட்கள் சேவைகளின் விலையேற்றமாகும். பொருட்கள் சேவைகளின் விலையேற்றத்திற்கு முக்கிய காரணம், வளங்கள் குறைவடைந்து செல்வதாகும். வளங்கள் குறைவடைவதற்கு நாம் முக்கிய காரணமாக எடுத்துக் கொள்வது தேவையற்ற வளப் பயன்பாடு அல்லது சிக்கனமில்லாத, மிதமிஞ்சிய வளப்பயன்பாடு ஆகும்.

எமது வணிக உலகத்தில் வளங்கள் அழிவடைந்து செல்வது ஒரு புறம் இருக்க வளத்தினை சிக்கனமற்ற முறையில் பயன்படுத்துவது ஒரு கவலைக்கிடமான

நிலைக்கு எம்மை தள்ளுகின்றது. மூல வளங்களை சரியான அளவில் பயன் படுத்தினால் வளக் குறைபாடு என்ற பிரச்சினையே தோன்றியிருக்காது. வளங்கள் எனப்படுவது பயன்படுத்துவதனால் குறைவடையும். நாம் வீண்விரயம் செய்யாமல் உரிய முறையில் பயன்படுத்தினால் வளம் குன்றாது. அதற்கு சிறந்த முகாமைத்துவம் அவசியமாகும். சிறந்த முகாமைத்துவத்தை கொண்டிருந்தாலே வளத்தை சிக்கனமாக பயன்படுத்த முடியும். அதாவது ஒரு சிறந்த முகாமைத்துவத்தினால் அதற்கு கீழே பணி புரிகின்ற ஊழியர்களை சிறந்த முறையில் கட்டுப்படுத்தி மேற்பார்வை செய்து வளங்களை உரியமுறையில் பயன்படுத்தியிருக்கலாம். இதற்கு ஒரு சிறந்த முகாமைத்துவ திறனை நாம் வளர்க்க வேண்டியேற்படும். ஒரு சிறந்த முகாமைத்துவத்தினால் ஊழியங்கள் ஒழுங்காக மேற்பார்வை செய்யப்பட்டு வளங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டு வளம் குன்றாமல் இருக்கும். இதனால் பொருட்கள் சேவைகளின் விலை உயர்வடைந்திருக்காது. இதனால் மக்களின் வாழ்வில் ஒரு பிரச்சினையும் ஏற்பட்டிருக்காது. அரசிற்கும் புதிய பணத்தினை அச்சிடும் நிர்ப்பந்தநிலை ஏற்பட்டிருக்காது. பணத்தின் கேள்வியும் குறைவடைந்திருக்கும்.

பொது மக்களிடம் சிக்கனத்துவத்தை எவ்வளவு சுலபமாக புகுத்திவிட முடியுமோ அவ்வளவு சுலபமாக வளப்பயன்பாட்டை நாம் பெற்றுக் கொள்ளலாம். வளத்தின் குறைபாடு ஏற்படுவதற்கு காரணம் எமக்கு முன்னைய சமுதாயத்தினரின் கவலையீனமும், அவர்களுக்கு போதிய கல்வியறிவு இல்லை என்பன ஆகும். முற்காலத்தில் கல்விக்கு பெருந் தொகையான ஆதிக்கம் காணப்படவில்லை. தற்பொழுதே கல்விக்கு கேள்வி நிலை ஏற்படுகின்றது. கவலையீனம் முற்காலத்தில் கூடுதலாக காணப்பட்டது. இதனால் வளங்களை அவர்கள் வீண்விரயமாக்கினர். தேவையான அளவினை விடக் கூடுதலாக பயன்படுத்தினர். தங்களுக்கு பின்பு வரும் சமுதாயத்தினரைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. இதனால் வளங்கள் பல அழிவடைந்தன. கல்வியறிவு அவர்களுக்கு அன்றைய காலகட்டத்தில் முக்கியமான ஒன்றாக தோன்றவில்லை. இதனால் அவர்கள் சிக்கனக்கல்வியின் அறிவு இல்லாமல் வளங்களை வீண்விரயமாக்கினர். தாங்கள் மட்டும் நல்லபடியாக வாழ்ந்தால் போதும் என்ற நிலை காணப்பட்டது. கல்வியறிவின் முக்கியத்துவம் பின்னர் அறியப்பட்டபோது வளங்களின் குறைபாடு காரணமாக மக்களிற்கும் சமுதாயத்திற்கும் வேறுபாடுகள் பல காணப்பட்டது. இதற்கு அக்கால சமுதாயத்தினரின் ஒரு வழிப்போக்கே காரணம் என்று கூறலாம்.

தற்போது பலமாற்றங்களும் பல பிரச்சனைகளும் நிறைந்த உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியினால் நாம் பலமாற்றங்களை எதிர்கொள்கின்றோம். கல்வியறிவு தற்போது சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது என்றே கூறலாம். கல்வியறிவின் தேவையை உணர்ந்ததால் கல்வியை தேடி ஓடுகின்றனர். விஞ்ஞான வளர்ச்சியினால் ஒரு மேம்படுத்தப்பட்ட உலகம் காணப்பட்டாலும் ஒரு புறத்தில் ஏழைகள் இன்னமும் ஏழைகளாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். பணக்காரர்கள் இன்னும் பணக்காரர்கள் ஆகிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு கல்வியறிவு ஒரு முக்கிய காரணமாகும். வீட்டுக்கஷ்டத்தினால் சிறு வயதில் இருந்தே வேலைக்கு செல்லும் சிறுவர்களும் இதே உலகத்தில் இருக்கிறார்கள். பொருட்கள் சேவைகளின் விலையேற்றத்தால் வீட்டில் பொருளாதார கஷ்டம் காரணமாக வேலையை தேடி இளம் சமுதாயத்தினர் தேடி ஓடுகின்றனர். இவை ஒருபுறம் இருக்க வளத்தை வீணடிக்கும், நலத்தை அழிக்கும் சமூகம் இன்னொரு புறம்

வளர்ந்து கொண்டு இருக்கிறது. இதனை நாம் உணர்த்துவதற்கு சிறந்த வழி கல்வியாகும். கல்வியறிவின் மூலம் வள வீண்டிப்பை சுலபமாக தடுத்துக் கொள்ளலாம். இதனால் சமுதாயத்தி னரிற்கிடையில் காணப்படும் வேறுபாடுகள் குறைவடைந்து வளம் பாதுகாக்கப்படும்.

இவ்வாறு நாம் மேற்கூறியவற்றில் அறிந்தது சிக்கனக்கல்வியாகும். இவை நேரடியாக அதனை பிரதிபலிக்காது விட்டாலும், மறைமுகமாக இதனையே சுட்டிக்காட்டுகின்றது. தற்போதைய சூழலில் விலையேற்றத்தால் நாம் பாதிக்கப்படுவதை தவிர்க்க சிக்கனமான ஒரு வாழ்வு முறையினை நாம் தேர்ந்து எடுக்க வேண்டும். இவ்வாறு பல நன்மைகளை நாம் பெற எல்லோருக்கும் சிக்கனக்கல்வி முறை ஒரு சிறந்த வழியாகும். எனவே எல்லோரும் சிக்கனக்கல்வியை பெற்று ஒரு சிறந்த வாழ்வினை பெறுவோம்.

- இலத்திரனியல் வணிகம் இடம் பெறும் 4 அடிப்படை
  1) B + O B முறை
  2) B + O C முறை
  3) C + O C முறை
  4) B + O G முறை

- வணிக வங்கிகளுக்கிடையிலான அழைப்பு கடன் சந்தையில் வட்டி வீழ்ச்சியை தடுக்க உதவும் சந்தை?
  மீள் கொள்வனவு சந்தை

- இலங்கையில் கரைகடந்த வங்கி சந்தை எப்பெயரில் தொழிற்படுகிறது?
  அந்நிய நாணய வங்கி அலகு (FCBU)

- தன்னியக்க வரிவர்த்தனை நிலையம் தொழிற்படம் நேரம்?
  நாளாந்த வேலை நாட்களில் காலை 9.30 - 12.30

- மத்திய வைப்பு திட்ட கம்பனிக்கு மூலதன பங்களிப்பு செய்வது?
  கொழும்பு பங்கு சந்தை (100%)

- இலங்கையில் எந்த வகையான வட்டி பயன்படுத்துகின்றனர்?
  பெறுமானம் - நிலையிடப்பட்ட வட்டி

- மிலங்கா விலை சுட்டெண்ணின் அடிப்பருவம்
  1998 - 12 - 31

- மிலங்கா விலை சுட்டெண் எதற்கு பதிலாக அறிமுகம் செய்யப்பட்டது?
  உணர்திறன் விலை சுட்டிக்கு பதிலாக

# 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிச் சட்டம் (The Company Act No 7, in 2007)



S. Senthuran
A/L 2008- Commerce
Jaffna Hindu College

கூட்டிணைக்கப்பட்ட கம்பனி சார்பாக நடைமுறையில்அமுல் படுத்தப்படுவது 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிச்சட்டம் ஆகும். 2007மே 03ம் திகதி அமுல்படுத்தப்படும் இச்சட்டம் ஆனது இலங்கை கம்பனிச் சட்டமாகவுள்ளது.

கம்பனி அமைப்பின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஒன்று கூட்டிணைப்புக் கம்பனியாகக் கருதப்படும். கம்பனிச் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்படும் கம்பனி ஒன்று அது பதிவு செய்த பெயரின் கீழ் சட்டத்தின் தனித்துவமுடைய ஒன்றாகும்.

**2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிச் சட்டப்படி கூட்டிணைப்புக்கம்பனியின் வகுதிகள்**

**கூட்டிணைப்புக் கம்பனி**

- வரையறுக்கப்படாத கம்பனி
- பங்குகளால் வரையறுத்த கம்பனி
  - வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி
  - வரையறுக்கப்பட்ட கரைகடந்த கம்பனி
  - வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி
    - பட்டியல் படுத்தப்பட்ட கம்பனி
    - பட்டியல் படுத்தப்படாத கம்பனி
- உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனி

## 2007ம் ஆண்டு 07ம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் முக்கியத்துவங்கள்

1) தற்போது கம்பனிச் சட்டப்படி முன் வைக்கப்பட வேண்டிய கூட்டிணைப்புச் சான்றிதழ் அல்லது யாப்பு என்பன சம்பந்தமாக கம்பனி அமைப்பு அக விதிகள் மட்டும் முன் வைக்க முடியுமாக இருத்தல்

2) தனியான நபர் ஒருவருக்கு கம்பனியை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தமை (ஒற்றைப்பங்குதாரர் கம்பனியை ஆரம்பிக்கலாம்)

3) தனிக்கம்பனியின் தீர்மானம் எடுக்கும் விடயங்கள் இலகுவாக்கப்பட்டமை

4) சொந்தப் பொதுக் கம்பனிகள் தனிக் கம்பனியாக மாறக் கூடியதாக இருத்தல்

5) கணக்குகளை சமர்ப்பிப்பது சம்பந்தமான காலம் ஆறு மாதமாக குறைக்கப்பட்டுள்ளது.

6) மக்கள் கம்பனி இல்லாது ஒழித்தலும் அதற்குப்பதிலாக பொதுக் கம்பனிகளின் சட்ட ரீதியான தன்மைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்

7) இரு கம்பனிகள் நீதி மன்ற உத்தரவின்றியே ஒன்றிணைக்கப்படலாம்.

8) கம்பனி ஒன்றின் இயக்குனர்களின் கருமங்கள் உரிமைகள் தெளிவாக காட்டப்பட்டிருத்தல்

9) கம்பனி பிணக்குசபை அறிமுகம்

இந்தப் புதிய கம்பனிச் சட்டமானது **வியாபார மற்றும் வர்த்தக** அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது. அத்துடன் **அமைப்பு புறவிதி** நீக்கப்பட்டுள்ளது பங்குகள் வழங்கப்பட்டது தொடர்பில் கம்பனியால் பெறப்பட்ட அல்லது கம்பனிக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தொகைகளும் **கூறப்பட்ட மூலதனமாகும்.**

## 1982ம் ஆண்டு கம்பனிச் சட்டத்திற்கும் 2007ம் ஆண்டு கம்பனிச் சட்டத்திற்கும் இடையிலான வேறுபாடுகள்

| 1982ம் ஆண்டு கம்பனிச் சட்டம் | 2007ம் 07ம் இலக்க கம்பனிச் சட்டம் |
|---|---|
| 1) மக்கள் கம்பனி சார்பில் விதிகள் உள்ளன | மக்கள் கம்பனி சார்பில் விதிகள் இல்லை. அதன்படி மக்கள் கம்பனி என்ற பெயரில் கம்பனியொன்று கிடையாது |
| 2) வரையறுத்த பொதுக்கம்பனிகளுக்கு(பொது) என்னும் சொல் இட அவசியம் இல்லை அதனால் கம்பனியின் பெயரின் மூலம் பொதுக் கம்பனியை இனங் காணமுடியாது | பட்டியல் இட்ட கம்பனிகளில் கம்பனி என்ற சொல்லுக்கு முன் பொது என்ற சொல் இட வேண்டும் இதனால் இக்கம்பனியை இனங் காணலாம். |
| 3) கூட்டிணைப்பதற்கு விண்ணப்பிக்கும் போது புற விதிப் பத்திரம் மற்றும் கூட்டிணைப்பு அமைப்பு அகவிதிப் பத்திரம் என வேறு வேறாக சமர்ப்பித்தல வேண்டும். | அந்த இரண்டிற்கும் பதிலாக கூட்டிணைப்பு அகவிதியினை மட்டும் சமர்ப்பித்தால் போதுமானது. |

| | |
|---|---|
| 4) தனியார் அல்லா கம்பனி ஒன்று தனியார் கம்பனியாக மாற்ற முடியாது. | தனிக்கம்பனியல்லாத கம்பனிகள் தேவைப்படின் தனிக்கம்பனியாக மாற விதிகள் உண்டு |
| 5) பங்கொன்றுக்கு முகப்பெறுமதி யொன்று இருத்தல் அவசியம் | பங்கொன்றுக்கு முகப்பெறுமதி இருத்தல் அவசியமில்லை |
| 6) பங்கு வட்டத்துடன் அல்லது பங்கு கழிவுடன் பங்குகளை வழங்க முடியுமாக இருத்தல் | முகப் பெறுமதி இல்லாத வட்டம் அல்லது கழிவு இங்கு இல்லை |
| 7) பங்கு வழங்கல் மூலம் பெறப்படும் மூலதனம் பங்கு மூலதனம் என அழைக்கப்படும் | பங்கு வழங்கல் மூலம் பெறப்படும் மூலதனமானது கூறப்பட்ட மூலதனம் எனப்படும் |
| 8) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் இழிவளவு பங்கு தாரர் எண்ணிக்கை 02 அல்லது பொது கம்பனியின் இழிந்தளவு பங்குதாரர் எண்ணிக்கை 07 பேர் | வரையறுக்கப்பட்ட தனியார் அல்லது பொது இரண்டிற்கும் இழிந்தளவு பங்குதாரர் 02 அரச உடைமை கம்பனிகளில் 01. இவர் திறைசேரி செயலாளராக இருத்தல் வேண்டும் |
| 9) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஆயின் கணக்கு அறிக்கைகளை கம்பனி பதிவாளரிடம் முன் வைத்தல் கட்டாயமானது. | கணக்கு அறிக்கைகளை கம்பனி பதிவாளர் வேண்டினால் மட்டும் சமர்ப்பித்தல் போதுமானது |
| 10. பங்குகளை கழிவுடன் வழங்கல் சம்பந்தமாக நீதி மன்ற அனுமதி பெற்றிருத்தல்வேண்டும் | இங்கு கழிவுடன் வழங்கல் இல்லாமையினால் அதற்கான தேவைப்பாடு இல்லை |

**வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி மற்றும் தனியார் கம்பனிகளுக்கிடையிலான வேறுபாடுகள் (2007ம் ஆண்டு கம்பனிச் சட்டப்படி )**


| தனியார் கம்பனி | பொதுக்கம்பனி |
|---|---|
| 1) குறைந்த பங்குதாரர் - 01 பங்குதாரராகவுள்ள தொழிலாளராகவுள்ள நபர்கள் தவிர்ந்த அதிக பட்சமாக 50பேர் | குறைந்தது இருவர் கூடியது வரையறையற்றது |
| 2) பங்குகள் தொகுதிக் கடன்களை பொது மக்களுக்கு வழங்கி மூலதனம் திரட்ட முடியாது | பங்குகள் தொகுதிக் கடன்களை பொது மக்களுக்கு வழங்கி மூலதனம் திரட்ட முடியும் |
| 3) குறைந்த இயக்குனர் - 01 | குறைந்த இயக்குனர் - 02 |
| 4) கணக்கறிக்கைகள் கம்பனி பதிவாளருக்கு ஒப்படைத்தல் அவசியமில்லை | கணக்கறிக்கைகளை கம்பனி பதிவாளருக்கு சமர்ப்பித்தல் அவசியம் |
| 5) கடன் செலுத்துதல் பற்றிய ஆய்வு இன்றியே பங்குதாரர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கலாம் | பங்குதாரர்மீது பகிர்ந்தளிக்கும் எல்லா சமயங்களிலும் கடன் தீர்க்கும் ஆற்றலை பற்றிய ஆய்வு பூரணப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். |

Reference - New Company Act
தேசிய கல்வி நிறுவன வெளியீடு

# 2007ம் ஆண்டு 07ம் இலக்க புதிய கம்பனிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் கம்பனி சார்ந்த எண்ணக்கரு



K.Vinojan
A/L 2008- Commerce
Jaffna Hindu College



கூட்டிணைக்கப்பட்ட கம்பனி சார்பாக 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிச்சட்டம் 2007ம் ஆண்டு மே மாதம் 03ம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படும் சட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் கீழ் கம்பனி அமைப்பின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி ஒன்று கூட்டிணைப்புக் கம்பனியாக கருதப்பட்டு சட்டத்தனித்துவம் உடையதாகவும் காணப்படுகின்றது. இதற்கு அமைவாக கம்பனியுடன் தொடர்புடைய முக்கிய விடயங்கள் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகின்றது.

## 01. அகவிதி (Article of Association)

கம்பனிக்கும் கம்பனியின் பங்குதாரர்களுக்குமிடையிலான ஒப்பந்தமாகவும் நிர்வாகத்துக்குரிய ஏற்பாடுகளாகவும் ஆரம்ப பங்காளர் ஒப்பமிட்டு கம்பனி பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டிய முக்கிய ஆவணமாகும். அகவிதி பற்றிய விடயங்கள் கம்பனிச் சட்டத்தின் 13வது பிரிவில் கூறப்படுகின்றது.

### அகவிதியில் அடக்கப்படும் முக்கிய அம்சங்கள்

01. கம்பனியின் நோக்கம்
02. கம்பனியின் பங்காளர்களின் உரிமைகளும் கடமைகளும்
03. கம்பனியின் முகாமைத்துவமும் நிர்வாகமும்

அமைப்பு அகவிதியில் கம்பனிச் சட்டத்தின் 1வது துணை விதியின்படி பின்வரும் முக்கிய விடயங்களும் உள்ளடக்கப்படுகிறது.

- பங்குகள் வழங்கப்படும் முறைகள்
- பங்கின் அமைப்பு தொடர்பான விடயம்
- பங்கு பதிவேடுகள் பங்குச்சான்று பங்கு ஒப்படைப்பு
- இலாபப்பகிர்வு
- பங்கு மீட்டல்
- பங்குரிமையாளர்களது கஷ்டங்கள்

கூட்டம் தொடர்பான அறிவிப்பு
வாக்களித்தல்
இயக்குனர், செயலாளர், உரிமைகள், கடமைகள், செயற்பாடுகள்
கம்பனி கலைக்கப்படும் முறைகள்

**குறிப்பு:** புறவிதியில் காட்டப்படும் விடயங்களும் நீக்கப்பட்டு அமைப்பு அகவிதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

## 02. உருவாக்கற் பத்திரம் (Certificate of incorporution)

குறிப்பிட்ட சங்கம் அல்லது கம்பனி பதிவு செய்யப்பட்டது என அச்சங்கத்திற்கு அல்லது அக்கம்பனிக்கு பதிவாளரால் வழங்கப்படும் சான்று உருவாக்கற் பத்திரம் ஆகும்.

இது தனிநபரின் பிறப்புச் சான்று போன்று முக்கியத்துவம் உடையது என "லின்சே" என்ற பேரறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

### 2.1. உருவாக்கற் பத்திரத்தில் அடங்கியிருக்கும் விடயங்கள்

1) குறித்த கம்பனியும், பெயரும், முகவரியும், இலக்கமும்
2) கம்பனியின் உருவாக்கம்
3) கம்பனியின் இயல்பு (வரையறுத்த கம்பனியா, வரையறுக்கப்படாத கம்பனியா, உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியா)
4) கம்பனிகள் தனிப்பட்ட கம்பனிகளா, அல்லது பொதுக்கம்பனிகளா அல்லது கரைகடந்த கம்பனிகளா என்பது பற்றிய தெளிவான விடயங்கள் காட்டப்படும்.

## 03. முன்விபரணம் (Prospectus)

கம்பனி பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களை பொதுமக்களுக்கு வழங்கவதற்காக உண்மையானதும் சகல விபரங்களை உள்ளடக்கியதுமான அழைப்பு முன்விபரணம் எனப்படும். இத்தகைய முன் விபரணத்தில் கம்பனிச்சட்டத்தில் நான்காவது உப அட்டவணையில் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விடயங்கள் காட்டப்படுதல் வேண்டும்.

i. கம்பனி ஆரம்பித்து முதல் 5வருடங்களுக்கு முன் நிறைவேற்றவிருக்கும் வணிகக் கருமம்
ii. பின்னுரிமைப் பங்குகள் இருப்பின் அது பற்றிய விபரங்கள்
iii. இயக்குனர் தொடர்பான விபரங்களும் அவரது தகுதிப் பங்குகளும் பணக் கொடுப்பனவுகளும்
iv. இழிவளவு மூலதனம் பற்றிய விபரம்
v. பங்குகள் விண்ணப்பிக்கும் முறைகளும் அதற்குப் பணம் செலுத்தப்படும் முறைகளும்
vi. கம்பனியின் கணக்காய்வு சொத்துக்கள் பொறுப்புக்கள் நிர்வாகக் கம்பனிகள் தொடர்பான விபரம்

## 04. இழிவுக் கட்டணம் - *Minimum Subscription*

கம்பனியொன்று முயற்சியை ஆரம்பிப்பதற்குரிய ஆகக் குறைந்த மூலதனத்தினளவு இழிவுக் கட்டணமாகும். இது முன்விபரணத்தில் குறிப்பிட்டிருக்கும் தொகைகளை விட குறைவடைதல் ஆகாது. இவ்வாறு கிடைக்கப்பெற்ற இழிவுக் கட்டணத்தொகை பின்வரும் செலவுகள் தீர்க்கப்பட முடிகிறது.

i. நிலையான சொத்துக்கள் கொள்வனவு

ii. கம்பனியின் தொடக்கச் செலவுகள் தீர்த்தல்
iii. மேற்படி செலவுகளுக்காக பெற்றுக் கொண்ட கடன்களை தீர்த்தல்
iv. தொழிற்படு மூலதனத் தேவைக்கு போதியதாகக் காணப்படல்

## 05. பங்குவகை (Different Classes Shores)

### 5.1 சாதாரண பங்குகள் Ordinary shares

இலாபத்தில் முன்னுரிமையைப் பெற்றுக் கொள்ளாத பங்குகளும் கம்பனியின் உண்மையான உரிமையாளர்களுக்கு உரியதுமான பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் பங்குகள் ஆகும்.

### 5.2 முன்னுரிமைப் பங்குகள் Preference Shares

நிலையானதோர் வருவாயினை அதாவது பங்குலாபத்தினைக் கொண்டுள்ள பங்குகள் இவையாகும். இவை மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்கு, மீட்கமுடியாத முன்னுரிமைப்பங்கு, திரள்முன்னுரைப்பங்கு, திரளாமுன்னுரிமைப்பங்கு, மாற்றப்படக் கூடிய முன்னுரிமைப் பங்கு என வகைப்படுத்தலாம்.

### 5.3 பின்னுரிமைப் பங்கு அல்லது ஆரம்பித்தோர் பங்கு Defferred or founders Shares

கம்பனியை ஆரம்பித்தவர்கள் அனுபவித்த கஷ்டங்களுக்கும் அவர்களது தேவைகளுக்கும் ஆக வழங்கப்படும் பங்குகள் பின்னுரிமைப்பங்குகள் அல்லது ஆரம்பித்தோர் பங்குகள் ஆகும். எல்லாப் பங்குதாரருக்கும் பங்குலாபம் வழங்கப்பட்டு இறுதியிலேயே பின்னுரிமை பங்குதாரருக்கு பங்குலாபம் வழங்கப்படும்.

### 5.4 வாக்குரிமையற்ற சாதாரண பங்கு Non Voting shares

கம்பனி ஒன்றின் சாதாரண பங்குதாரருக்குரிய உரிமைகள் பொதுச் சபைக் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை இல்லாத பங்குகள் ஆகும். இது தவிர்ந்த ஏனைய உரிமைகள் இப்பங்கிற்கு உண்டு.

### 5.5 பொன்னான பங்குகள் Golden shares

இவை விசேட நிர்வாக அதிகாரங்களைக் கொண்ட சாதாரண பங்குகள் ஆகும். குறிப்பாக பொதுச்சபை கூட்டங்களில் இயக்குனர் தீர்மானங்கள் தொடர்பாக தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய அதிகாரங்களும் இத்தகைய பொன்னான பங்குகளுக்குண்டு.

## 06. தொகுதிக்கடன் Debenture

பொதுக்கம்பனி ஒன்று மேலதிக மூலதனத்தினை கடன் தொகையாக பெற்று கொண்டது எனவும் அதற்குரிய வட்டியையும் கடனையும் சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக செலுத்துவதற்கு உடன்பட்டது எனவும் வெளிப்படுத்தி பொதுக்கம்பனியின் முத்திரையிட்டு வழங்கப்படும் ஓர் எழுத்து மூலமான ஆவணம் தொகுதிக்கடன் ஆகும். இதன் பிரதான வகை வருமாறு

**6.1.1 ஈட்டு தொகுதிக் கடன்** - Mortgag Debenture

கம்பனியின் சொத்துக்களை பிணையாக வைத்து பெறப்படும் தொகுதிக்கடன்

**6.2 திறந்த தொகுதிக்கடன்** Naked Debenture

கம்பனியின் சொத்துக்களை பிணையாக காட்டாது நிலையான வட்டி செலுத்தும் நிபந்தனையுடன் பொது மக்களுக்கு வழங்கும் தொகுதிக்கடன் திறந்த தொகுதிக்கடன் ஆகும்.

**6.3 பதிவு செய்யப்பட்ட தொகுதிக்கடன்** Registered Debentures

கம்பனியின் தொகுதிக்கடன் அங்கத்தவர் பெயர்பட்டியலில் உரிமையாளர் பெயரை உள்ளடக்கப்படும் தொகுதிக்கடன் பதிவு செய்யப்பட்ட தொகுதிக்கடன் ஆகும்.

**6.4 காவித் தொகுதிக்கடன் Carer Debentures**

தொகுதிக்கடன்களுக்கான அங்கத்தவர் பெயர்பட்டியலில் உரிமையாளர் பெயரை உள்ளடக்காது வழங்கப்படும் தொகுதிக்கடன்காவித் தொகுதிக்கடன் ஆகும். இது சுதந்திரமாக மற்றொருவருக்கு கைமாற்றம் செய்யப்படக் கூடியது.

**6.5 ஒருங்கிணைக்கபட்ட தொகுதிக்கடன்** Corporate Debenture

குறித்த கால இடைவெளிக்கு ஒரு தடவை வட்டி செலுத்துதல் முதிர்ச்சி கால முடிவில் கொடுப்பனவு செய்தல் என்ற நிபந்தனையில் வழங்கப்படும் தொகுதிக்கடன்கள் ஒருங்கிணைக்கப்பட்ட தொகுதிக்கடன் ஆகும்.

## 07. கம்பனியின் பிரதான தீர்மானங்கள்

கம்பனியின் பிரதான தீர்மானங்கள் இரு வகைப்படும்
சாதாரண தீர்மானம் (Ordinary Resolution)
விசேட தீர்மானம் (Special Resolution)

**7.1 சாதாரண தீர்மானம் (Ordinary Resolution)**

சாதாரண தீர்மானம் என்பது வாக்களிக்கும் பங்குரிமையாளர்களுடைய சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேறப்படும் தீர்மானம்.

(உ + ம்) இயக்குணர்களை நியமனம் செய்தல்
பங்கு இலாபத்தை அதிகரித்தல்

**7.2 விசேட தீர்மானம்**

வாக்களிக்கும் உரிமை பெற்ற வாக்களிக்கும் பங்குரிமையாளர்களில் 75% மான பெரும்பாண்மையுடனும் விசேடமாக குறிப்பிட்டு 15ற்கு குறையாத வேலை நாட்களும் முன்னறிவித்தலும் கொடுத்து முறையாக பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானம் விசேட தீர்மானம் ஆகும்.

இத்தகைய தீர்மானங்களில் பாரிய திட்டங்கள் நிறைவேற்றப்படும இங்கு 85%ற்கு மேலாக வாக்களிக்கப்படின் 15நாட்கள் முன் அறிவித்தல் அவசியம் இல்லை


E.g:- கம்பனி கலைக்க படுதல்
கம்பனியை ஒருங்கிணைத்தல் போன்றன இத்தீர்மானத்தின் மூலம் நிறை வேற்றப்படும்

**உசாத்துணை நூல்**
சிவநேசராஜா புதிய கம்பனி சட்டம்
தேசிய கல்விநிறுவன வெளியீடுகள்

# கம்பனித் தொகுதிக் கடன்கள் (Corporate Debentures)



S.Navaneethan
A/L 2008- Commerce
Jaffna Hindu College



கம்பனியின் முதலீட்டாளர்களுக்கு குறித்த தவணைக்கொருமுறை வட்டியையும், முதிர்வுக் காலங்களில் முகப் பெறுமதியையும் செலுத்துவதற்கான உத்தரவாதத்துடன் பொது மக்களுக்கு நீண்டகால அடிப்படையில் வழங்கும் பிணைகள் தொகுதிக்கடன் என வரைவிலக்கணமிடப்பட்டுள்ளது.

தொகுதிக் கடன்களானது அவற்றின் பண்புகளுக்கமைய பல்வேறு வகையில் வழங்கப்படுகின்றது. தொகுதிக் கடன்கள் வட்டி சார்ந்தவை, வட்டி சாராதவை எனவும் முதிர்வுக்காலம் குறித்தவை முதிர்வுக்காலம் குறியாதவை எனவும், நிலையான வட்டி வீதம் சார்ந்தவை, மிதக்கும் வட்டி வீதம் சார்ந்தவை எனவும் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் தொகுதிக் கடன்கள் பிணை, பின்னுரிமை, மீட்டல், அழைப்பு, மாற்றியமைத்தல், விற்பனை முன்னுரிமை ஆகிய சிறப்பம்சங்கள் சார்ந்தவையாகவும் வகைப்படுத்திக் கொள்ள முடியும்.

### தொகுதிக் கடனின் பண்புகள் (*Features of Debentures*)

#### முதிர்வுப் பருவம்

தொகுதிக் கடன்கள் நீண்டகால பிணைகளாகும். நீண்டகாலம் என்பது அவற்றின் முதிர்வுப் பருவம் ஓராண்டுக்கு மேற்பட்டுக் காணப்படும். கொழும்புப் பங்குச் சந்தையில் 3 - 10 ஆண்டுகள் வரை முதிர்வுப் பருவம் கொண்ட தொகுதிக் கடன்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

**வட்டிவீதம்**

வட்டி வீதங்களுக்கமைய தொகுதிக் கடன்களை வட்டி சார்ந்தவை, வட்டி சாராதவை என இரு வகையாக வகைப்படுத்தப்படுகின்றன. வட்டி சார்ந்த தொகுதிக்கடன்கள் (Interest Bearing Debentures) மிகப் பிரசித்த மானவை. கம்பனிகள் இவ்வகைத் தொகுதிக் கடன்களுக்கு குறித்த தவணைக்கொரு முறைகுறித்த சதவீத வட்டி வழங்குவதற்கு உத்தரவாதமளிக்கின்றன. தொகுதிக் கடன்களுக்கு குறித்த தவணைக்கொரு முறை வழங்கப்படும் வட்டி, வட்டி சாராத தொகுதிக் கடன்கள் என அழைக்கப்படும், வட்டி சாராத தொகுதிக் கடன்களை காசாக மாற்றும்போது அவைகளின் முகப்பெறுமதியிலும் குறைந்த பெறுமானத்திற்கு விற்பனை செய்யப்பட வேண்டும். தொகுதிக் கடன்கள் நிலையான வட்டி வீதம் சார்ந்தவை, மிதக்கும் வட்டிவீதம் சார்ந்தவை என இரு வகைப்படுத்தலாம். நிலையான வட்டி வீதத் தொகுதிக் கடன்களுக்கு வட்டி வீதமானது அவைகளின் முதிர்வுக் காலம் வரை மாற்றமின்றி வழங்கப்படும். ஆனால் மிதக்கும் ,வட்டி வீதத் தொகுதி கடன்களுக்கு வட்டி வீதமானது குறித்த அடிப்படை வீதமொன்றுக்கமைய தளம்ப ல்களுடன் வழங்கப்படும்.

தற்போது இலங்கையில் வர்த்தக வங்கி சேலான் பேங்க் என்பன மிதக்கும் வட்டி வீதத் தொகுதிக் கடன்களை வழங்கியுள்ளன. இத்தொகுதிக் கடன்கள் நீங்கலாக கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள ஏனைய தொகுதிக் கடன்கள் நிலையான வட்டி வீதம் சார்ந்தவையாகும்.

**பிணை (Security)**

தொகுதிக் கடன்கள் வழங்கும் கம்பனியினால் அத்தொகுதிக் கடன்காரர்களுக்கு செலுத்துவதற்கு இணங்கியுள்ள தொகுதிக் கடன்கள் வட்டிக்கு அதன் முகப் பெறுமதிக்குமாக, அக் கம்பனியின் குறித்த சில பௌதிக சொத்துக்களை பிணையாக்கி வழங்கப்படும் தொகுதிக் கடன் ஈட்டுத் தொகுதிக்கடன்கள் என அழைக்கப்படும். கம்பனி உத்தரவாதமளித்துள்ள பொறுப்புகளுக்கு குறித்த சில சொத்துக்கள் பிணையாக வைக்கப்படாமல் வழங்கப்படும் தொகுதிக் கடன்கள் வெற்றுத் தொகுதிக் கடன்கள் என அழைக்கப்படும். இத்தொகுதிக் கடனில் முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர்கள் அக் கம்பனியின் சாதாரண கடன் தீர்க்கும் ஆற்றல் மீது நம்பிக்கை வைத்து முதலீடுகள் மேற்கொள்ள வேண்டி ஏற்படலாம்.

பொறுப்பு புறக்கணிப்பு, நட்ட அச்சம் வெற்றுத் தொகுதிக்கடனிலும் மிகக் குறைந்து காணப்படுவதால் பிணைகள் சாராத தொகுதிக்கடன்களை மிகக் குறைந்த வட்டி வீதங்களில் வழங்க வேண்டி ஏற்படலாம்.

**உத்தரவாதம் (Guarantee)**

தொகுதிக்கடன் வழங்கிய கம்பனி செலுத்துவதற்கு இணங்கிக் கொண்ட வட்டியையோ அல்லது முகப் பெறுமதியையோ செலுத்த தவறும் பட்சத்தில் இப்பொறுப்புக்களை மூன்றாம் கட்சியினால் உறுதிப்படுத்திய தொகுதிக்கடன்கள் உத்தரவாதப்படுத்திய தொகுதிக் கடன்கள் என அழைக்கப்படும். இந்த உத்தரவாதம் பிரசித்தி பெற்ற நிதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

தற்போது இலங்கையில் சிலோன் கிளாஸ், மேக்கன்டைல் லீஷிங், பீப்பில்ஸ் மேச்சன்ட், வணிக் இன் கோபரேஷன் ஆகிய நிறுவனங்களின் உத்தரவாதமளித்த தொகுதிக் கடன்கள் கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

**தாழ் நிலைப்படுதல் அல்லது பின்னுரிமை (Subordination)**

கம்பனியொன்று கலையும் சந்தர்ப்பத்தில் அக்கம்பனியின் பிணைகள் சார்ந்த

தொகுதிக்கடன்கள், பிணைகள் சாரா தொகுதிக்கடன்கள், ஏனைய சாதாரண கடன்கள் என்பன தீர்க்கப்பட்ட பின், கம்பனியின் சொத்துக்களிலும் வருவாய்களிலும் உரிமை கோரக்கூடிய தொகுதிக் கடன்கள் என அழைக்கப்படும். பின்னுரிமைத் தொகுதிக் கடன்தாரர் கம்பனியின் சொத்துக்களிலும், வருவாய்களிலும் மிகக் குறைந்த அளவு உரிமைகளை அனுபவிப்பவர். கம்பனியொன்று நிதிசார் சக்தியற்றுக் காணப்படும் போது பின்னுரிமைத் தொகுதி கடன்காரர் அடிப் படையில் இறுதியில் உரிமைகளைப் பெற கூடியவராக இருப்பர்.

## அழைப்பு (Call ability)

தொகுதிக் கடன்தாரர் தமது தொகுதிக் கடன்களை காசாக மாற்றுவதற்கு முன் அத்தொகுதிக் கடன்களை அவை வழங்கிய கம்பனிகளால் குறித்த ஒரு விலைக்கு கொள்வனவு செய்து கொள்ளக் கூடியதாக வழங்கும் தொகுதிக் கடன்கள் அழைக்கத்தக்க தொகுதிக்கடன் என அழைக்கப்படும். இத்தொகுதிக் கடன் வழங்கும் போது தொகுதிக் கடன் பத்திரங்களில் அழைப்புக்காலம் (Call period), அழைப்பு விலை (Call price) என்பன குறித்துரைக்கப்பட்டுள்ளன.

தற்போது இலங்கையில் வணிக்கின் கோபரேஷன் நிறுவனம் வழங்கியுள்ள 15% தொகுதிக்கடன்கள் கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியல் இடப்பட்டுள்ள பிணைகள் சாராத அழைக்கத்தக்க தொகுதிக் கடன்களாகும்.


**உசாத்துணை**
மத்திய வங்கி ஆண்டறிக்கை

- மாமிசம் தொடர்பாக சௌக்கிய சான்று தருபவர்?
  மீன்பிடி நீர்வள இயக்குனர்
- போலி நாணயங்களை கண்டு பிடிக்க உதவும் நிறுவனம்
  குற்றவியல் புலனாய்வு திணைக்கள போலி நாணய பணியகம்
- யூரோ நாணயத்தை பயன்படுத்தாத ஐரோப்பிய நாடு?
  பெரிய பிரித்தானியா
- மொத்தவிலை சுட்டெண் மதிப்பு?
  மத்திய வங்கி
- அஞ்சல் மூலமாக செய்தி அனுப்ப கூடிய பொறி ?
  டெலி பிறின்டர்
- புத்தகம் ஒன்றை இணைய தளத்தில் காட்சிப்படுத்த தயாரிக்கப்படும் பக்கம்?
  WEB (வெப்பக்கம்)

# தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் (PRIVATISATION)



K.Kabilan
A/L 2008- Commerce
Jaffna Hindu College



## அறிமுகம்

தற்காலத்தில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் தொழில் நுட்பங்கள் காரணமாகவும் நாடுகள் அபிவிருத்தியினை நோக்கி சென்று கொண்டிருப்பதனாலும் தற்காலத்தில் நாடுகளிடையே தனியார் மயமாக்கலானது மிக முக்கியம் பெற்றுக் கொண்டு வருகின்றது தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தனியார் முதலீடுகள் நாட்டிலுள்ளே அரசினால் ஊக்குவிக்கப்பட்டும் கட்டுப்படுத்தப்பட்டும் வருகின்றது.

## வரைவிலக்கணம்

குறிப்பிட்ட ஒரு நாட்டு அரசாங்கத்திற்கு சொந்தமாக காணப்படுகின்ற முயற்சிகளான வியாபாரம், முகாமைத்துவம், உரிமை என்பன தனியார் துறையினருக்கு மாற்றப்படுகின்ற செயற்பாடே தனியார் மயமாக்கல் எனப்படும். இத் தனியார் மயமாக்கலானது பின்வரும் முறைகளினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

i. அரசானது உரிமையினை தனியாருககு ஒப்படைத்தல்
   a) உரிமையினை பகுதி பகுதியாக தனியாருக்கு ஒப்படைத்தல்
   b) உரிமையினை ஒரே தடவையில் முழுமையாக ஒப்படைத்தல்
ii. அரசானது தனக்கு சொந்தமாக காணப்படுகின்ற முகாமைத்துவத்தை ஒப்படைத்தல்
iii. அரசிற்கு சொந்தமான வியாபாரங்கள் தனியார் துறைக்கு மாற்றப்படல்

iv. குறிப்பிட்ட சில சேவைகளை மாத்திரம் தனியாரிடம் ஒப்படைத்தல்

## தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் அனுகூலங்கள்

i. சந்தை சக்திகளினூடாக உற்பத்திகளை செயற்திறனுடையதாக்குதல் இதன் மூலம் நாட்டின் உற்பத்தி மட்டம் அதிகரித்தல்.
ii. அரச தனியுரிமைக்கு பதிலாக போட்டித்தன்மையை உருவாக்குதல் இதன் மூலம் தரமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுதல்
iii. நட்டத்திலியங்கும் அரச முயற்சிகளினால் அரசாங்கத்திற்கு ஏற்படும் சுமையை குறைத்து அரச வருமானத்தை அதிகரித்தல்
iv. வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படல் இதன் மூலம் பயிற்றப்பட்ட ஊழியம் உருவாக்கப்படல்
v. உற்பத்தி திறன்மட்டம், முகாமைத்திறன் மட்டம் உருவாக்கப்படுதல்
vi. பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தியினை ஏற்படுத்த பயன்படுதல்
vii. அரசாங்க வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் மேற்கொள்ளப்பயன்படுதல்

## தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் தீமைகள்

i. அரசாங்க தனியுரிமைக்கு பதிலாக தனியார் தனியுரிமையானது தோற்றம் பெறல்
ii. சர்வதேச பல்தேசிய நிறுவனங்களின் ஆதிக்கம் ஏற்படும்
iii. தனியார் மயமாக்கல் மூலம் நவீன தொழில்நுட்பங்கள் தனியாரினால் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவதால் வேலைவாய்ப்புக்கள் பாதிக்கப்படல்.
iv. பொருளாதாரத்தின் மீதான அரசின் கட்டுப்பாடு குறைவடைதல்
v. வருமான ஏற்றத்தாழ்வுகள் அதிகளவில் காணப்படல்
vi. விலைமட்டம் அதிகரித்து பணவீக்க விளைவுகள் ஏற்படல்
vii. உச்சலாப நோக்கம் மட்டுமே பிரதான நோக்கமாக காணப்படுவதனால் சமூக நல நோக்கம் புறக்கணிக்கப்படல்
viii. பொதுப்பொருட்கள் சேவைகள் உற்பத்தி செய்து வழங்கப்படமாட்டாது.
ix. சமூக கலாச்சாரத்தை சீரழிக்கும் நடவடிக்கைகள் இடம் பெறல்.

## அண்மைய ஆண்டுகளில் தனியார் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள்

**01. வேளாண்மை**

| **அ. பெருந்தோட்டங்கள்** | **பங்கு** | **தனியார் மயப்படுத்தப்பட்ட திகதி** |
|---|---|---|
| வரை கேகாலை பெருந்தோட்டம் | 100% | 1995/10 |
| வரை வட்டவல பெருந்தோட்டம் | 100% | 1996/01 |
| வரை ககவத்த பெருந்தோட்டம் | 88.6% | 1997/07 |
| வரை தலவாக்கல்ல பெருந்தோட்டம் | 100% | 1998/01 |
| **ஆ. ஏனையவை** | | |
| இங்குராகொட விதைநெல்பண்ணை | சொத்து விற்பனை | 1998/07 |
| பெல்வெகர பண்ணை | காணி விற்பனை | 2000/07 |

**02. கைத்தொழில்**

| | | |
|---|---|---|
| துல்கிரிய புடைவை ஆலை | 100% | 1990/02 |
| வரை இலங்கை தோல் உற்பத்திகள் | 100% | 1991/07 |
| வரை இலங்கை எண்ணெய் கொழுப்பு | 60%. | 1992/01 |
| றுகுணு சீமெந்து கம்பனி | 85% | 1993/06 |
| வரை இலங்கை பிரிமா | 100% | 2001/01 |
| பன்னாட்டு பால்மா உற்பத்திகள் | 40% | 2004/03 |

**03. பணிகள்**

**அ) நிதியியல்**

| | | |
|---|---|---|
| தேசிய அபிவிருத்தி வங்கி | 57.8% | 1993/03 |
| வரை தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் | 100% | 2001/03 |
| இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் | 100% | 2003/04 |
| என்.டி.பி (N.D.B) வங்கி | 7.2% | 2003/10 |

**ஆ) ஏனையவை**

| | | |
|---|---|---|
| வரை ஸ்ரீ லங்கா ரெலி கொம் | 50.5% | 1997/08 |
| வரை ஏயார் லங்கா | 40% | 1998/03 |
| தாஜ் லங்கா ஹோட்டல் | 2.7% | 2003/09 |
| ஹோட்டல் கலதாரி | 0.2% | 2003/10 |
| வரை சதோச சில்லறை விற்பனை நிலையம் | 40% | 2003/11 |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 33% | 2003/12 |

## 1996ம் ஆண்டு அரச தொழில் முயற்சிகள் புத்தாக்கச் சட்டத்தின் கீழ் மீளக்கையேற்கப்பட்ட நிறுவனங்கள்


i) வரையறுக்கப்பட்ட மத்தேகம புடைவை ஆலை - மீண்டும் தனியார் மயமாக்கப்பட்டுள்ளது
ii) வரையறுக்கப்பட்ட லங்கா உலோக வன்கலம் - மீண்டும் தனியார் மயமாக்கப்பட்டுள்ளது
iii) வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல்ஸ் (பசளை)
iv) வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனிக் கம்பனி
v) வரையறுக்கப்பட்ட பூகொட புடைவை ஆலை
vi) வரையறுக்கப்பட்ட ககட்டகக நிறபைட்
vii) வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனிக்கம்பனி

## தாமதித்த கொடுப்பனவுகளின் கீழ் தனியார் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள்

| | | | |
|---|---|---|---|
| i) | வரை பூகொடை புடைவை ஆலை | 100% | 1990/06 |
| ii) | வரை இலங்கை எண்ணெய் கொழுப்பு | 60% | 1992/01 |
| iii) | வரை ஹிங்குரான சீனிக்கம்பனி | 100% | 1993/06 |
| iv) | சீசீசீ(பொறியியல்) | 100% | 1993/07 |
| v) | வரை மத்தேகம புடைவை ஆலை | 100% | 1993/10 |
| vi) | றுகுணு அக்ரோ பேட்டிலைசர் கம்பனி | 100% | 1994/05 |
| vii) | வரை கந்தளாய் சீனிக் கைத்தொழில்கள் | 100% | 1994/07 |
| viii) | வரை சீசீசீ (பசளைகள்) | 100% | 1994/07 |

**உசாத்துணை நூல் - மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2006**

# வரையறுக்கப்பட்ட மக்கள் குத்தகைக் கம்பனி
# People's Leasing Company(LTD)



B.Satheesan
A/L 2008- Commerce
Jaffna Hindu College



## குத்தகை *Leasing*

நிர்ணயிக்கப்பட்ட விதிகள் கோட்பாடுகளிற்கமைய தவணைக் கட்டண அடிப்படையில் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வது சார்பாக உள்ள ஓர் உடன்படிக்கையே குத்தகை ஆகும்.

இது நிதிக்குத்தகை, செயற்பாட்டுக் குத்தகை, ஆதனங்களை விற்று மீள் பெறும் குத்தகை என செயற்படுத்தப்படுகின்றது.

## *People's Leasing Company*

### 01. தூரநோக்கு *Our Vision*

ஓர் வாடிக்கையாளனின் புத்தாக்கச் செயற்பாடுகளிற்கு தடையாக உள்ள நிதிப்பற்றாக்குறை நிலைமைகளில் வாடிக்கையாளரிற்கு சிநேகபூர்வமான முறையில் கைகொடுக்கும் வகையில் வாடிக்கையாளரிற்கான புத்தாக்கம், புதுமை புனைதல் போன்ற செயற்பாடுகளுக்கு தீர்வினை வழங்கும் முதன்மை நிறுவனமாகப் பிரபல்யம் பெறுதல்.

### 02. இலட்சிய நோக்கு *Our Mission*

நிறுவனத்திற்கு விசுவாசமாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்படும்

வாடிக்கையாளரிற்கான தேவைகளை நிறைவேற்றும் வகையில் வாடிக்கையாளரின் நன்மைகள் குறித்த ஒழுங்கமைப்பு சேவை மற்றும் சிறப்பான நிர்வாக சேவைகள், பொருத்தமான போட்டி வாய்ப்புக்களை சிறந்த முறையில் வெற்றிகரமாகச் செயற்படுதல்.

### 03. வாடிக்கையாளன் தொடர்பான கம்பனியின் தத்துவம்
### *Our customers philosophy*

ஒவ்வொரு குத்தகை தாரரிற்கும் (வாடிக்கையாளர்) தேவையான தேவைப் பாட்டினை கம்பனியிடம் தெரிவித்து தேவைகளை பூரணமான முறையில் பூர்த்தி செய்வதற்கான சேவைகளினை தாராளமான முறையில் வழங்குகின்றது.

### 04. மக்கள் குத்தகை கம்பனி தொடர்பான அறிமுகம்
### *Introduction to Peoples Leasing Company*

இக்கம்பனி "1996" ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது ஆரம்பிக்கப்படும் போது 10 மில்லியன் மூலதனத்துடனும் 3 ஊழியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டு சட்டபூர்வமாக "2000"மாம் ஆண்டு ஓர் கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டது.

இக்குத்தகைக்கம்பனியானது வாகனங்கள், பொறி இயந்திரங்கள், கணனிகள் போன்றவற்றிற்கு குத்தகை வசதிசெய்வதுடன் வாடகைக் கொள்வனவு முறையில்நிதி உதவிகளினை வழங்குதல் என்பவற்றை தனது பிரதான தொழிற்பாடாகக் கொண்டது. கடந்த நான்கு வருடங்களாக (2004-2007) குத்தகை சந்தையில் (Leasing market) முதல் இடத்தில் இருந்து வருகின்ற ஓர் கம்பனியாகும்.

இக்கம்பனிக்கான நிதி வழங்குநர்களாக வங்கிகள் காணப்படுகின்ற போதிலும் இவற்றில் மிக முக்கியமாக மக்கள் வங்கி முதல் இடத்தினைப்பெறுகிறது. ஏனெனில் மக்கள் வங்கிக்கும் மக்கள் குத்தகைக்கம்பனிக்குமான உயர்முகாமைத்துவம் குறிக்கப்பட்ட ஓர் குழுக்களினாலேயே முகாமை செய்யப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இக்கம்பனி இலங்கையில் "18" கிளைகளினைக் கொண்டு இயங்குகின்றது. இவற்றில் முதல்கிளை கண்டியில் 1997ம் ஆண்டு நிறுவப்பட்டது.

### இக்குத்தகைக்கம்பனி பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் வழிமுறைகள்

**1) வேலை வாய்ப்பினை வழங்குதல்**

வேலை அற்றவர்களுக்கும், சுயதொழில் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு நிதிபற்றாக் குறை காணப்படுபவர்களிற்கும் வாகனங்கள், கணனிகள், உழவு இயந்திரங்கள் போன்ற வற்றினை இலகு தவணைக்குத்தகை முறைகளில் வழங்கி வேலை அற்ற தன்மையினை நீக்குவதுடன் உள்நாட்டு உற்பத்திகள் வளர்ச்சி அடைய உதவுதல்.

**2) நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வருமானத்தை பெற்றுக்கொடுத்தல்**

வாகனங்களினை பெருந்தொகையாகக் கொள்வனவு செய்வதனால் அவற்றிற்கான வரிகளும் பெருந்தொகையாகச் செலுத்துவதன் மூலம் நாட்டின் வரிவருமானத்தை அதிகரிக்க செய்கின்றமையால் அரச செலவுகளைக்குறைத்து பொருளாதார அபிவிருத்திக்கு வழி வகை செய்கின்றது.

**3) கம்பனியின் சமூக சேவைகள்**

பல இடங்களில் பாடசாலைகள், நூல்நிலையங்கள், பௌத்த விகாரைகள், மருத்துவ உபகரணங்கள், மருத்துவ க்கட்டிடங்கள் போன்றவற்றை நாட்டின் பல இடங்களிலும் நிறுவி மக்களின் வாழ்க்கையை வளமாக்கியுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் மக்கள் குத்தகைக் கம்பனியின் செயற்பாடு

2005 ம் ஆண்டு ஆவணி மாதம் 9ம் திகதி யாழ்ப்பாணத்தில் தனது செயற்பாட்டைத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தினைப் பொறுத்த வரையில் பலதரப்பட்ட வாகனங்கள், கணனிகள், மோட்டார் வண்டிகள் போன்றவற்றிற்கு குத்தகை வசதி செய்து வந்தது. யாழ்ப்பாணத்தில் 100ற்கு மேற்பட்ட HIACE வாகனங்களுக்கு குத்தகை வசதி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் குத்தகைக்கம்பனி யாழ்ப்பாணத்தில் தொடங்கிய நாளில் இருந்து வழமை போல் 2006 ம் ஆண்டு 08ம் மாதம் 11ம் திகதி 5மணிவரை வாடிக் கையாளர்களிற்கு குத்தகை வசதி செய்து வந்தது. ஆனால் 8ஆம் மாதம் 12ம் திகதி இருந்து குத்தகை வசதி இனை முற்றாக நிறுத்தியுள்ளது. யாழ்ப்பாணக்கிளை தற்பொழுது நட்டத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க ஓர் விடயமாகும்.

## யாழ்ப்பாணத்தில் இன்றைய கால கட்டத்தில் மக்கள் குத்தகைக் கம்பனி குத்தகை சேவை வழங்குவதனை முற்றாக நிறுத்தி உள்ளது. அதற்கான காரணம்.

யாழ்ப்பாணத்தில் மிகமுக்கியமாக போக்குவரத்துத் துறையுடன் சம்மந்தப்பட்டதாக வாகனக் குத்தகைகளின் நுகர்வு அதிகமாகக் காணப்படுகின்றது. அவ்வாடிக்கையாளர்கள் A'9' வீதிப்போக்குவரத்தினையே தமது வாகன உழைப்புக்கான சிறந்த ஊடகமாகப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் இன்றைய போர் சூழ்நிலைகளினால் அவ்வீதி மூடப்பட்டுள்ளது. இதனால் வாடிக்கையாளர்கள் இலாபங்களினை உழைக்க முடியாமையால் குத்தகைத் தவணைப்பணத்தினை செலுத்த முடியாத நிலை காணப்படுகின்றது இதனால் வாடிக்கையாளர்கள் பாரிய சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் மக்கள் நாட்டின் யுத்த சூழ் நிலைகளையும் கருத்திற் கொண்டு மூலதனத்தினை முடக்க விரும்பமாட்டார்கள் இவற்றினை எல்லாம் கருத்திற் கொண்டு குத்தகைக் கம்பனி வாடிக்கையாளர் நலன்கருதி குத்தகைச் சேவையினை இடைநிறுத்தி உள்ளது.

குத்தகைக்குரிய பொருளினைப் பெற்ற ஒரு நபர் குறித்த காலத்தவணையில் பணத்தினைச் செலுத்தாமல் விட்டால் அதற்கான வட்டி வீதம் மேலதிகமான ஒவ்வொரு நாளுக்கும் யாழ்ப்பாணத்தில் மட்டும் 36% மும் ஏனைய பகுதியில் 42% முமாகக் காணப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாணத்தின் போர்ச்சூழல் காரணமாக வாடிக்கையாளர் நலன்கருதி மனிதாபிமான முறையில் 36% பேணப் படுகின்றது. இருப்பினும் தவணைக் காலம் கடந்தும் வட்டி அறவிடப்படாமல் அவர்களுக்கு அறிவித்து மேலதிக தயவு நாட்களினையும் வழங்குகின்றது. இங்கு கம்பனி வாடிக்கையாளன் சிரமத்திலும் பங்குகொள்கின்றமை போற்றத்தக்க விடயமாகும்.

**யாழ்ப்பாணத்தில் ஒரே ஒரு உழவு இயந்திரம் மட்டும் வாடிக்கையாளரின் முறைகேடுகளினால் மக்கள் குத்தகை கம்பனியினால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இன்னுமோர் உழவு இயந்திரம் வாடிக்கை யாளனால் பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது**

இது போன்ற முறைகேடுகளினால் வாடிக்கையாளர்கள் அடையும் தீமைகள் யாதெனில் வாடிக்கையாளன் பெருந்தொகையான பெறுமதியினை நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொண்டு நிறுவனத்தினை ஏமாற்றும் போது அவர்களது பெயரில் "தூர்க்குறி" (Red mark) இடப்பட்டு மத்திய வங்கிக்கு அனுப்பப்படும். இந்த நிலையில் அப்பெயர் குறிப்பிட்ட நபர் தனது தேவைகளுக்காக வங்கிகளில் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட பெருந்தொகையான பணத்திற்கான கடன் வசதிகளினைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட கடன்

வசதிகளினை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் அனைவரினது பெயர் விபரங்கள் தொடர்பாக மத்திய வங்கியின் தகவல்களுடன் ஒப்பிட்டு அவர்களினது பெயரில் துர்க்குறிகள் இடப்பட்டுள்ளதா என ஆராய்ந்து அதன் பின்னரே கடனை வழங்கும் எனவே துர்க்குறி இடப்பட்டவர்கள் வேறு எந்த வங்கிகளிலும் கடனினைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் இத்துர்க்குறி இனை நீக்குவதற்கு நிறுவனத்திடம் ஏமாற்றிய பெறுமதியினை ஒரேதடவையில் செலுத்துவதன் மூலம் நிறுவனம் மத்திய வங்கிக்கு இவரின் பெயரில் இருக்கும் துர்க்குறியை ரத்துச்செய்க என்பதன் மூலம் வேண்டுகோளை விடுக்கும் இதனால் இன்நிகழ்வின் பின் இவர் எந்த வங்கியிலும் கடன் வசதியினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**வாடிக்கையாளர்கள் கம்பனிக்கு விசுவாசமான முறையில் செயற்படுவதனால் ஏற்படும் நன்மைகள்**

வாடிக்கையாளர் கம்பனிக்கு விசுவாசமான முறையில் தவணைப் பணங்களினை ஒழுங்கான முறையில் செலுத்தி முறைகேடுகளை தவிர்த்து நியாயமான முறையில் செயற்படுவதனால் நிறுவனம் பெரும் திரளான பணங்களுக்கு 100%குத்தகை வசதி, பிணைகள் அற்று செயற்படும் தன்மை, மற்றும் விசேட வட்டிக் குறைப்பு விதம், ஏனைய விசேட சலுகைகள் என்பவற்றினை வழங்கும்.

குறிப்பாக குறித்த ஓர் கிளையில் குத்தகை வசதியினைப் பெற்றுக் கொண்டால் அதற்கான தவணைப் பணத்தினை இன்னோர் மாவட்டத்தில் அதன் கிளைக்கம்பனியிலும் செலுத்தலாம்.

- தூர இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சி களை துரித நேரத்தில் பூமிக்கு ஒளி பரப்புதல்?
  தொடர்பாடல் Live

- மிக செலவு கூடியதும் பல்வேறு இடங் களிலுள்ள தனிப்பட்டவர்கள் ஒரே நேரத் தில் தொடர்பு கொண்டு ஒலி, ஒளிவடிவில் கலந்துரையாடுவதற்கு பயன்படுவது
  வீடியோ கலந்துரையாடல்

- வலையமைப்பிற்கு சொந்தமில்லாதவர் களும் இன்ரநெற் தொடர்பை ஏற்படுத்து தல்
  சைபர்கபே - Cyber Cafe

- தொலைபேசியற்ற வீடுகளிலிரந்து மற் றொரு விலாசத்திற்கு தந்தி செய்தி அனு ப்பும் முறை
  பொனோகிறாம்

- வரவு செலவுத் திட்டம் தயாரித்தல், எதிர்வு கூறல், புள்ளியிடல் பகுப்பாய்வு என்பவற்றிற்கு பயன்படும் அட்டை?
  பரம்பல் அட்டை

- கணனிக்கு தேவையான சேவைகளை யும், தகவல்களையும் வழங்குகின்ற ஓர் கணனி
  Seruer

- இணையத்தை பயன்படுத்தி நேரடியாக பொருட்களை கொள்வனவு செய்வதற் கான இலத்திரனியல் முறை?
  Online சில்லறை விற்பனை

- கணனியில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒலி வடிவிலான செய்திகளை தொலை பேசியூட ாக ஏற்பதற்காக கணனி பயன்படுத்தப்பட்ட ஒரு முறை?
  ஒலி அஞ்சல் (Voice mail)

**வாடிக்கையாளன் குத்தகைச்செயற்பாட்டில் தவறுதலாக அல்லது முறைகேடாக நடைபெறும் பட்சத்தில் அவருக்கும் உணர்த்தும் அல்லது பொருட்களைக் கைப்பற்றும் முறை**

## Reminder documentation Cycle (Leasing) (குத்தகை)

| கடிதம் | கடிதம் அனுப்பப்படும் தவணை | அனுப்பப்படும் கால இடைவெளி | கையொப்பம் | ஏனைய தகவல்கள் (கட்டாயமானவை) |
|---|---|---|---|---|
| 1) முதல் ஞாபகப்படுத்தல் | 15 வது நாள் | - | நிறைவேற்று அதிகாரி | சாதாரண கடிதம் மூலம் அனுப்புதல் (வாடிக்கையாளரிற்கு மட்டும்) |
| 2) இரண்டாவது ஞாபகப்படுத்தல் | 30 வது நாள் | 15 நாட்கள் | நிறைவேற்று அதிகாரி | சாதாரண கடிதம் மூலம் அனுப்புதல் (வாடிக்கையாளரிற்கு மட்டும்) |
| 3) உண்மைத் தோல்வி | 40 வது நாள் | 10 நாட்கள் | முகாமையாளர் | கம்பனி முத்திரை பொறிக்கப்பட்ட கடிதத்தில் வாடிக்கையாளர், பிணையாளிரிற்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். வாடிக்கையாளிரிற்கு அனுப்பும் கடிதத்தின் மாதிரியினை கம்பனியில் உள்ளவாடிக்கையாளர் பதிவுடன் இணைத்து வைத்தல். இவை கட்டாயமானது. |
| 4) தீவிரப்படுத்திய கட்டணம் | 61 வது நாள் | 21 நாட்கள் | முகாமையாளர் | |
| 5) இறுதி அறிவிப்பு | 75 வது நாள் | 14 நாட்கள் | முகாமையாளர் | |
| 6) இறுதி கடிதம் | 89 வது நாள் | 14 நாட்கள் | முகாமையாளர் | |

## Reminder documentation Cycle (Hire purchase) (வாடகைக் கொள்வனவு முறை)

| கடிதம் | கடிதம் அனுப்பப்படும் தவணை | அனுப்பப்படும் கால இடைவெளி | கையொப்பம் | ஏனைய தகவல்கள் (கட்டாயமானவை) |
|---|---|---|---|---|
| 1) முதல் ஞாபகப்படுத்தல் | 15 வது நாள் | - | நிறைவேற்று அதிகாரி | சாதாரண கடிதம் மூலம் அனுப்புதல் |
| 2) இரண்டாவது ஞாபகப்படுத்தல் | 30 வது நாள் | 15 நாட்கள் | நிறைவேற்று அதிகாரி | சாதாரண கடிதம் மூலம் அனுப்புதல் |
| 3) இறுதி அறிவிப்பு | 45 வது நாள் | 15 நாட்கள் | முகாமையாளர் | கம்பனி முத்திரை பொறிக்கப்பட்ட கடிதத்தில் வாடிக்கையாளர், பிணையாளிரிற்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். வாடிக்கையாளிரிற்கு அனுப்பும் கடிதத்தின் மாதிரியினை கம்பனியில் உள்ளவாடிக்கையாளர் பதிவுடன் இணைத்து வைத்தல். இவை கட்டாயமானது. |
| 4) இறுதி அறிவிப்பு | 60 வது நாள் | 15 நாட்கள் | முகாமையாளர் | |

**உசாத்துணை:- நேர்காணல், மக்கள் குத்தகைக்கம்பனி, யாழ்ப்பாணம்**


KAYANI
SHOE PALACE
கயானி
காலணியகம்
இல:10,
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்.
No. 10,
Alady Junction,
Manipay
T.P: 0776011986


சண்ஜெய
உணவகம்
சகல விதமான உணவு வகைகளும்,
சிற்றுண்டி வகைகளும், ICE Gream,
சோடா, சர்பத், நெல்லிரசம், நெல்கோப்பி
போன்ற அனைத்தும்
விசேட ஓடர்கள்
ஏற்றுக் கொள்ளப்படும்
414, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: (Mob): 077 9285417
077 6955757


வகுப்பு வரையிலான
பாடப்புத்தகங்களுக்கும்
மற்றும் பாடசாலை
உபகரணங்களுக்கும் யாழ் நகரில்
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 6693


சகல விதமான
கட்டடவேலைப் பொருட்களையும்
மின்சாதன உபகரணங்களையும்
தரமானதாகவும் மலிவானதாகவும்
பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்
சி. சிவன்
களஞ்சியம்
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.
(உப்புமட பிள்ளையார் கோயிலடி)

# கணினியியல் கல்லூரி

College of Computer

Computer Classes, Computer Sales, Computer Printing, Computer Repairing, Video Mixing & Software Solutions.



Lathu

Digital Video





Profisional Video Filming, Video Editing, Digital Album Making, Computer Mixing, VHS to CD-DVD Converting & Writing



E.Mail:coc-inuvilyahoo.com

K.K.S. Road, Inuvil
021 222 7643

# Speed IT net

"The Quick Way to Online"




உயர்கணினி வகுப்புக்கள் ,கணினி திருத்தவேலைகள்
புதிய கணினி மற்றும் உதிரிப்பாக விற்பனை, அன்ரிவைரஸ் தீர்வுகள்,
நெற்வேக்கிங் மென்பொருள் - இணையத்தள வடிவமைப்பு,
இணையத்தளம் பதிவுசெய்தல் சேவர் வழங்குதல், "மைகொம்யூட்டர்"
சஞ்சிகை வெளியீடு வெளிநாட்டு உயர்கல்வி ஒழுங்குகள்,
இன்ரநெட்,மின்னஞ்சல்சேவை
மற்றும் ஸ்கானிங் சீ.டி றைற்றிங்,டிஜிரல் டிசைனிங்
அனைத்தும் ஒரே இடத்தில்

**72/28 பணிக்கர் லேன் ,பலாலி வீதி உட்புறம்,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்**


Tel/Fax: 021-4591871 Hotline: 0777 563 213
Email: biz@speeditnet.com Web: www.speeditnet.com

எமது நிறுவன இணையத்தளங்கள்: googletamil.com , vembady.com , maalai.com, my-computer.tk, speedvisa.tk



Stationers
and
paper
Merchants
ASEER VANIGA NILAYAM
202 A,
K.K.S, Road
T.P: & Fax:
021 222 2842


RATNAM
Pharmacy
and
Grocerey
384, Hospital Road,
Jaffna.
T.P: 2222667


ராஜா
கிறீம் ஹவுஸ்
புறூட்சலட் ஐஸ்கிறீம்,
நட்ஸ் ஐஸ்கிறீம்,
வடை, கேக்
பூந்திலட்டு,
றோல்ஸ்,
ஸ்பெஷல் பீடா
மற்றும் சுகாதாரமுறைப்படி
தயாரிக்கப்பட்ட சகலவிதமான ஐஸ்கிறீம்
வகைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய
ஒரே இடம்
46 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்


NATHANS
Cinemas
(Private) Limited
Corporate Office:
06, Fountian House Lane,
Colombo 10, Sri Lanka
T.P: +94-11-12694699
Nathans' Cinema
11 Ramiah Chettiar Lane
(Off Hospital Road)
Jaffna Sri Lanka.
T.P: 021 222 7973


C.J.
Dental and Opticals
Services
பல் கட்டுதல் பல் மூக்குக் கண்ணாடி
அகம்
Prop: K. C. Jude
No: 58, Clock Tower Road, Jaffna.
T.P: 021 222 8893


PAPER HOUSE
No. 300, Hospital Road,
Jaffna.
T.P: 222 5343,222 2783

# கடன் அட்டைகள்
# CREDIT CARDS



A.Kirujan
A/L 2008- Commerce
Jaffna Hindu College



கடன் அட்டையில் பொருட்கள், சேவைகளைப் பெற்று கொள்வதற்காக உபயோகிக்கப்படும் அட்டை கடனட்டையாகும்.

இவ் கடனட்டை சில இலக்கங்கள் பொறிக்கப்பட்ட பிளாஸ்ரிக்கினாலான ஒரு அட்டையாகும். இதன் உதவியுடன் நாங்கள் எமது கையில் பணம் இல்லாத நிலையிலும் கடைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும். இந்த கடனட்டை ஆனது $3\frac{1}{8}$ x $2\frac{1}{8}$ அளவுடையது. அத்துடன் ஆள் அடையாளத்திற்கான படம் அல்லது கையொப்பம், கடன்அட்டை வழங்கிய வங்கியின் பெயர் போன்ற தகவல்களும் காணப்படும். கடனட்டையில் பெயர் குறிப்பிடப்பட்டவர் தனது வங்கி கணக்கில் இருந்தது தான் கொள்வனவு செய்யும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான கொடுப்பனவை பற்று வைக்க முடியும். இப் பற்றுக்களுக்கான தகவல்களை ATM இயந்திரங்களிலும், சர்வதேச வலை பின்னல் கணனிகளிலும், வங்கிகளிலும் பார்க்க முடியும்.

## கடனட்டை அறிமுகம்

2ம் உலக போரிற்கு முன்னர் அமெரிக்காவிலுள்ள சில தனிநபர் கூட்டுத் தாபனங்களினால் கடன்அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. எண்ணெய் கம்பனிகளும் பெரிய உல்லாச விடுதிகளுமே தமது செல்வந்த வாடிக்கை யாளர்களான கம்பெனி முதலாளிகள், முகாமையாளர்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு முதல் முறையாக கடன் அட்டைகள் வழங்கின. கடனட்டை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஒருவர் தனது சொந்த பணத்திலேயே கொடுப்பனவை செலுத்தி விட்டு பின்னர் தான் வேலை செய்யும்

நிறுவனத்திலிருந்து பணத்தினை மீளப்பெற்று கொண்டார். கடனட்டை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கடனட்டை வைத்திருப்போரும், விற்பனை நிலையங்களும், சேவை முகவர்களும் தொடர்ச்சியாக தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடியதாக இருந்தது. அதே நேரம் கடனட்டைகளை வழங்கிய வியாபார நிறுவனங்கள் தமது ஊழியர்களின் எல்லா கொடுப்பனவு சிட்டை களுக்குமான கொடுப்பனவை ஒரு கொடுப்பனவின் மூலம் செய்ய கூடியதாக இருந்தது. இந்த நிறுவனங்கள் குறைந்தது ஒரு மாதத்திற்கான கடன் வசதியை அனுபவித்தன. இன்று நடைமுறையில் உள்ள கடனட்டை "அமெரிக்கன் எக்ஸ்பிறஸ்" கம்பெனியினால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்ப காலத்தில் இக்கடன் அட்டைகள் கட்டண அறவீட்டு அட்டைகள் என அழைக்கப்பட்டன.

## நவீன கடனட்டை வெளியீடு

1960களின் ஆரம்பத்தில் கட்டண அறவீட்டு அட்டைகளுக்கு ஒரு படிமேலாக நவீன கடனட்டை அறிமுகப்படத்தப்பட்டது. 1970களின் ஆரம்பத்தில் மாஸ்டர் காட் (Master card), விசாகாட்(Visa card) என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் ஒன்றுக்கொன்று போட்டியாக தொழிற்படுகின்ற வங்கிகளும், நிதி நிறுவனங்களும் நிலையான விகிதத்தில் வளரத் தொடங்கின. 2004ம் ஆண்டில் ஐரோப்பாவில் உள்ள 250 இற்கும் மேற்பட்ட நிதி நிறுவனங்கள் எல்லா வகையான கடனட்டைகளையும் வழங்க தொடங்கின.

## கடன் அட்டையின் வகைகள்

01. நியம கடன் அட்டைகள் (Standard Credit Cards)
    - a) நிலவை மாற்று கடன் அட்டை (Balance Transfer Credit Cards)
    - b) குறைந்த வட்டி கடன் அட்டை (Low Interest Credit Cards)

02. வெகுமதி திட்டத்துக்கான கடனட்டைகள் (Credit Cards with Rewards Programs)
    - a) Air Line கடனட்டை
    - b) Cash Back கடன்அட்டை
    - c) வெகுமதி கடன் அட்டை (Rewards Credit Cards)

03. ஒழுங்கற்ற கடனாளிகளுக்கான கடனட்டைகள் (Credit Cards for Bad Credit)
    - a) பாதுகாப்பான கடன் அட்டை (Secured Credit cards)
    - b) முற்பணம் செலுத்தப்பட்ட கடன் அட்டைகள் (Prepaid Debit Cards)

04. விசேட கடன் அட்டைகள் (Specialty Credit Cards)
    - a) வியாபார கடன் அட்டை (Business Credit Cards)
    - b) மாணவர் கடன் அட்டை (Student Credit Cards)

### 01. நியம கடன் அட்டைகள்

கடன்அட்டைகளுள் மிகவும் முறை சார்ந்தது நியமகடனட்டைகள் ஆகும். இவை அநேகமான வங்கிகளிலும், நிதி நிறுவனங்களிலும் கிடைக்க பெறுகின்ற பாதுகாப்பற்ற கடன் அட்டைகள் ஆகும். இந்த கடனட்டைகள் எவ்வாறு வருடாந்த சதவிவிகிதம் (APR) கணிக்கப்படுகின்றது என்பதை பொறுத்து வேறுபடுகின்றது.

**02. வெகுமதி திட்டத்துடனான கடன் அட்டைகள்**

இந்த கடனட்டைகள் அவற்றை வைத்திருப்போருக்கு வழங்கப்படுகின்ற ஊக்குவிப்புகள், கொள்வனவிற்கான வெகுமதிகள் போன்றவற்றை கொண்டிருக்கும்.

**03. ஒழுங்கற்ற கடனாளிகளுக்கான கடன் அட்டைகள்**

நிலையற்ற நிதி நிலைமையையும், மாறுபடும் தொழிலை கொண்டவர்களும், கடன் அட்டைகளை பிழையாக முகாமை செய்பவர்களும் இந்த கடனட்டைகளை பெற்று கொள்ள முடியும். இக்கடன் அட்டையை பெறுவோர் தமது நிலைமை மேம்படும் பொழுது மீளக்கட்டுதல் மூலம் தமது கடன் அளவிற்கான அங்கீகாரத்தை காட்ட முடியும்.

**04. விசேட கடன் அட்டைகள்**

தனித்துவமானதும், விசேட மானதுமான தேவைகளை உடைய தனிநபர்களுக்கு இக்கடன்கள் வழங்கப்படுகின்றன. இவை வியாபார தேவை உடையவர்களுக்கும், மாணவர்களுக்கும் அவர்களின் தேவைகளின் அடிப்படையில் விசேடமாக தயாரிக்கப்பட்டவை ஆகும்.

a) வியாபார கடன் அட்டைகள்

இவை வியாபார நிலையங்களின் உரிமையாளர்களுக்கும், முகாமைத்துவ அதிகாரிகளுக்கும் வழங்கப்படும். இவைபாரம்பரியமான கடனட்டைகளின் அம்சங்கள் பலவற்றை கொண்டன

Eg: குறைந்த ஆரம்ப வட்டி
கொள்வனவிற்கான வெகுமதி, விமான சேவை வெகுமதி

வியாபார கடன் அட்டைகள் பாரம்பரிய கடன்டைகளை விட பின்வரும் சிறப்புகளை கொண்டுள்ளன.

- தனிப்பட்ட செலவுகளை விட வியாபார செலவுகள் வேறாக்கப்படும்.
- விசேட வியாபார வெகுமதிகள் மற்றும் சேமிப்புக்கள்
- முகாமைத்துவ அறிக்கைகளின் செலவு
- உயர்கடன் எல்லை

b) மாணவர் கடன் அட்டைகள்

மாணவர்கள் பொதுவாக குறைந்த கடனை கொண்டிருப்பார்கள் இதனால் அவர்களுக்கு பாரம்பரிய கடனட்டை வழங்குவது கடினமானது. மாணவர் கடன் அட்டைகள் மூலம் தமது கடன் தேவைகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இக்கடன் அட்டைகள் குறைவான வெகுமதிகளையும் நன்மைகளையும் கொண்டவை.

**கடன் அட்டை வீதங்கள்** Update 28.12.2007

| | |
|---|---|
| குறைந்த வட்டி வீத கடனட்டை | 11.45% |
| நிலுவை மாற்று கடனட்டை | 11.17% |
| Cash Back கடனட்டை | 12.57% |
| வியாபார கடனட்டை | 12.57% |
| உடனடி அங்கீகார கடனட்டை | 13.29% |
| வெகுமதி கடனட்டை | 13.20% |
| ஒழுங்கற்ற கடனாளி | 14.04% |

மாணவர் கடனட்டை 16.54%
விமான சேவைக்குரிய கடனட்டை 14.39%

## கடன்அட்டையின் நன்மைகள்

01. சௌகரியமானது- கடைகளில் பொருட் கொள்வனவு செய்யும் பொழுது அதிக பணத்தையோ காசோலையோ கொண்டு செல்லதேவையில்லை. சர்வதேச வலைப்பின்னல் கொள்வனவிற்கும் சுலபமானது.

02. பாதுகாப்பானது - எந்தவொரு அவசர நிலைமையிலும் கடன் அட்டை மூலம் கொள்வனவு செய்வது பாதுகாப்பனாது.

03. எமது வரவு செலவிற்கேற்ப திட்டமிட்டு கொள்வனவுகளை மேற்கொள்ள முடியும்.

04. இக்கடனட்டை தொலைக்கப்படுமிடத்து உடனடியாக முறைப்பாட்டை மேற்கொள்வதன் மூலம் உங்கள் வங்கிக் கணக்கு மீதியை பாதுகாத்து கொள்ள முடியும்.

05. பிரயாண செலவுகளை செலுத்துவதற்கு சுலபமானது

## கடனட்டையின் உச்ச கடன் எல்லை

கடன் அட்டை வைத்திருப்பவரின் கொள்வனவு, நிலுவை மாற்றங்கள், கொடுப்பனவுகள் நிதி அளவீடுகள் என்பனவற்றிற்கேற்ப உச்சகடன் வரம்பு வேறுபடும். இவ் உச்சகடன் எல்லைக்கு மேலாக கடன் அட்டை பாவிக்கப்பட்டால் எதற்கான கட்டணத்தை கடன் அட்டை வைத்திருப்பவர் செலுத்த வேண்டும்.

## தற்போது புழக்கத்தில் உள்ள கடன்அட்டைகள்

01. HSBC Visa Card - ஹேற்பொற் வங்கி
02. HABC Master card - ஹேற்பொற் வங்கி
03. Peoples Visa card - மக்கள்வங்கி
04. BOC Visa card - இலங்கை வங்கி
05. Golden key credit card - Golden நிறுவனம்

## வங்கிகளின் கடனட்டை விபரம்

### HSBC Bank

இலங்கையில் HSBC கடன் அட்டைகளை வழங்கியுள்ளது. இது 286,000இற்கு மேற்பட்ட எண்ணிக்கையான கடன் அட்டைகளை உள்ளடக்குகிறது.

ரூபா 10000இலிருந்து 15000வரையிலான மாத வருமானம் உள்ளவர்களக்கு வழங்கப்பட்டு வந்த கடன் அட்டைகள் பின்னர் 20000/= வருமானம் உள்ளவர்களக்கு வழங்கப்பட்டது. தற்பொழுது 30000/- வருமானம் உள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்றது. குறைந்த வருமானம் உள்ளவாக்ள் கடன் தொகையை திரும்பிச் செலுத்துவதற்கு சிரமப்படுவதனால் இந் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. அண்மையில் "Sundy Times" இற்கு அளித்த பேட்டி ஒன்றில் HSBC

கடன் அட்டை வழங்கும் சேவையின் தலைவர் "திரு நிஸந்த பஸ்ரியன்" வங்கி தற்சமயம் தரமான வாடிக்கையாளர்களை மையப்படுத்தி சேவையை தொடரவுள்ளதாக கூறியுள்ளார்

வாடிக்கையாளர்களை மையப்படுத்தி சேவையை தொடரவுள்ளதாக கூறியுள்ளார்

## Sampath Bank

சம்பத் வங்கியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் தகவலின் படி நாட்டின் தற்போதைய நிலமை காரணமாக கடன் அட்டைகளுக்கான கடன மீளச் செலுத்துதல் பாதிக்கப்பட்டுள்ளது. என்றும் சம்பத் வங்கி கடன் அட்டை பாவனையாளர்களுக்கு எவ்வித நெருக்கடிகளையும் கொடுக்கவில்லை. பணவீக்கம் உயரும் போது கொடுப்பனவுகளை மேற்கொள்ளுவதில் உள்ள சிரமங்களை வங்கி அதிகாரிகள் புரிந்து கொள்ளுவதனால் நெருக்கடிகள் மேற்கொள்ளப்படவில்லை. சம்பத் வங்கி ரூ15000வருமானம் உள்ளவர்களுக்கு கடன் அட்டைகளை வழங்கி வருகிறது. சிறந்த கண்காணிப்பின் மூலம் இவ்வங்கி கடன் அட்டைகளின் கடன் தொகையை குறிப்பிட்ட கால இடைவெளியில் அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளது.

## EEG பற்றி

**இதய நோய்களை கண்டறிவதற்காக** ECG (Electro Cardio graph) **எடுக்கப்படுவதை நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். அதே போல மூளை சம்பந்தப்பட்ட நோய்களை அறிய** EEG **எடுக்கப்படுகின்றது. இதன் விரிவாக்கம்** Electro Encephalon Gram.

**எமது மூளையில் இருக்கும் பலமில்லியன் நரம்புக்கலங்களின் இரசாயன மாற்றங்களினாலும் மின்சார ஓட்டத்தினாலும் செயற்படுகின்றன. ஒரு பகுதி நரம்புக்கலங்கள் செயற்படும் போது மற்றொரு பகுதி ஓய்வெடுத்துக் கொள்கின்றான். மூளையில் ஏற்படும் இம்மின்னோட்டத்தைத் தான்** EEG **மூலம் அளக்கின்றார்கள்.**

# நிதியியல் இடைத்தரகர்களை வகைப்படுத்தல்



K.S.S. Vaheesan
A/L 2008- Commerce
Jaffna Hindu College

எந்தவொரு நாட்டினதும் நிதியியல் கட்டமைப்பின் (Financial Structure) மூலம் அந்நாட்டின் நிதியியல் உள்ளமைப்பு எடுத்து காட்டப்படுவதோடு இது இரண்டு பிரதானமான அம்சங்களை உள்ளடக்கியதாயிருக்கும்.

1. நிதியியல் கருவிகள் (Financial Instruments)
2. நிதியியல் நிறுவனங்கள் (Financial Institutions)

நிதியியல் நிறுவனங்களை நிதியியல் துறையின் உற்பத்தியாளர்களாகக் கருதலாம். இவர்களுடைய உற்பத்தி நிதியியல் கருவிகளாயிருப்பதோடு இவ்வுற்பத்திகள் சந்தைகளில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றன.

"டிற்றிசியே கிம்டோல்" என்ற பொருளியல் பகுப்பாய்வாளர் நிதியியல் நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற சேவைகளை (Financial Services) பிரதானமான ஆறு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்துகின்றார். அதாவது

1. கடன் பணிகள் (Credit services)
2. பிணையங்கள் பணிகள் (Securities Services)
3. கொடுக்கல் வாங்கல் ஏற்பாடு செய்தல் (Transactions processing)
4. காப்புறுதிப் பணிகள் (Insurance services)
5. சொத்துக்கள் முகாமைத்துவப் பணிகள் (Asset management services)
6. தகவல், அறிவிப்பு மற்றும் ஆலோசனைப்பணிகள் (Information Advising and advisory services)

என்றவாறாகும்.

வரலாற்று ரீதியாக நான்கு வகையாக நிதியியல் சேவை நிறுவனங்களை அடையாளங்காணக்கூடியதாயுள்ளது. இந்நிறுவனங்களால் வெளியிடப்படுகின்ற பொறுப்புக்களின் (Liabilities) இயல்பு மற்றும் ஒழுங்கு முறை நிறுவன அமைப்பு (Regulatory establishments) என்பனவே இவ்வகைப்படுத்தலுக்கு அடிப்படையாக உள்ளது

## I. வைப்புக்களைப் பெறும் நிறுவனங்கள் (Deposit taking firms)

1. வர்த்தக வங்கிகள் (Commercial Banks)
2. சேமிப்பு நிறுவனங்கள் (Savings Institutions)
3. கடன் சங்கம் (Credit Unions)
4. நிதிக்கம்பனிகள் (Financial Companies)
5. பரஸ்பர சேமிப்பு வங்கிகள் (Mutual Savings Banks)
6. அஞ்சல் சேமிப்பு முறை (Postal Savings Systems)

## II. காப்புறுதி வகை இடைத்தரகர்கள் (Insurance type Intermediation)

1. ஆயுள் மறறும் சுகாதார காப்புறுதிக் கம்பனிகள் (Life & Health Insurance Companies)
2. சொத்துக்கள் மற்றும் திடீர் விபத்துக் கம்பனிகள் (Property and Casualty Insurance Companies)
3. ஓய்வூதிய நிதியம் (Pension Funds)
4. ஊழியர் சேமலாப நிதியம் (Employees Provident Funds)

## III. முதலீட்டுக் கம்பனிகள் (Investment Companies)

1. பரஸ்பர நிதியம் மற்றும் உண்மைச் சொத்துக்கள் நம்பிக்கைப் பொறுப்பக்கள் (Mutual Funds & Real estate Trusts)
2. அபிவிருத்தி வங்கி (Development Banks)
3. அடகுக் கம்பனிகள் (Paying Companies)

## IV. பிணையங்கள் நிறுவனம் (Securities firms)

1. நாணய முறிகள் மற்றும் பங்குகள் தொடர்பான தரகர்கள், வர்த்தகர்கள் மற்றும் பிரதி நிதிகள் (Money bonds & stock brokers, Traders & Dealers)

இவ்வாறு நிதியியல் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் தொடர்பாகப் பல்வேறு கோணங்களில் கவனத்தைச் செலுத்த முடியுமாயிருப்பினும். மிகத் தெளிவாக நிதியியல் இடைத் தரகர்களை வகைப்படுத்துகின்ற போது பிரதானமான அடிப்படையொன்றின் கீழ் நடைபெறுகின்றது.

முக்கியமாக நிதியியல் இடைத் தரகர்களை பிரதானமாக இரண்டு குழுக்களாக வகுக்கலாம்.

1. வங்கி ரீதியிலான இடைத் தரகர்கள் (Bank Financial Intermediaries - BFIs)
2. வங்கியல்லாத நிதியியல் இடைத் தரகர்கள் (Non - Bank Financial Intermediaries - NBFIs)

இப்பகுப்புக்கு அடிப்படையாயிருப்பது அந்தந்த நிதியியல் இடைத்தரககருக்குரிய சொத்துக்களின்

நிதிய மூலகங்களின் இயல்பு மற்றும் அளவு பயன்படுத்தப்படுகின்ற விதமாகும்.

இங்கு பிரதானமாக நிதியியல் இடைத்தரகர்களின் மூன்று பிரிவினர் அடையாளங் காணப்படுகின்றனர்.

1. வைப்புநிறுவனங்கள் - வங்கிகள் (Depository Institution - Banks)
2. உடன்படிக்கை ரீதியிலான சேமிப்பு நிறுவனங்கள் (Contractual Savings Institutions)
3. முதலீட்டு இடைத்தரகர்கள் (Investment Intermediaries)

**1. வைப்பு நிறுவனங்கள் (வங்கிகள்)**

அதாவது தனி நபர்களிடம் இருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் வைப்புக்களைப் பெற்று அதன் ஊடாக கடன்களை ஏற்பாடு செய்கின்ற நிறுவனங்களாகும். நாட்டின் நாணய வழங்கலைத் தீர்மானிப்பதில் இந்நிறுவனஙகளின் கடமைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கின்றன. இவ்வாறான நிறுவனங்கள் பல வகைப்படுகின்றன.

### i. வர்த்தக வங்கிகள் (Commercial Banks)

நடைமுறை மற்றும் சேமிப்புவைப்புக்களை வெளியிட்டு நிதியங்களைத் திரட்டுகின்ற இந்நிறுவனமானது. வர்த்தக நுகர்வு மற்றும் அடகுக் கடன்களை வழங்குவதோடு பல்வேறு பிணையங்களையும் முதலீடு செய்கின்றது. பல்வகைப்படுத்தப்பட்ட பாரிய சொத்துத் தொகுதியை (Portfolio of Assets) இவை கொண்டுள்ளன.

### ii. சேமிப்பு மற்றும் கடன் சங்கங்கள் (Savings and Loan Associations)

சேமிப்பு வைப்புக்களைப் பெறுகின்ற இவ்வாறான நிறுவனங்கள் மரபு ரீதியான அடகுக்கடன் வழங்குவதையே செய்து வந்துள்ளன. ஐக்கிய அமெரிக்காபோன்ற நாடுகளில் இவ்வாறான நிறுவனங்கள் கேள்வி வைப்புக்களையும் பெறுகின்றன.

### iii. பரஸ்பர சேமிப்பு வங்கிகள் (Mutual Savings Banks)

இந்நிறுவனங்களும் சேமிப்பு மற்றும் கடன் கம்பனிகளுக்குச் சமனாதாகவுள்ளதோடு உள்ளமைப்பு ரீதியில் பரஸ்பர அடிப்படை செயலாற்றுகின்றது.

### iv. கடன் சங்கங்கள் (Credit Unions)

இவை சிறு குழுக்கள், தொழிற் சங்க உறுப்பினர்கள் ஊழியர்கள் ஆகிய சிறு அளவிலான கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களாகும். வைப்புக்களின் மூலம் நிதியங்களைப் பெற்று நுகர்வுக்கடன் சேவைகளை வழங்குதல்.

**2. உடன்படிக்கை ரீதியிலான சேமிப்பு நிறுவனங்கள்**

காப்புறுதி நிறுவனங்கள், ஓய்வூதியம் ஆகிய நிறுவனங்கள் இதற்கியதாயுள்ளதோடு உடன்படிக்கை அடிப்படையில் நிதியங்களை சேகரிக்கின்றன. இவர்கள் இந்நிதியங்களைப்

பிரதானமாக நீண்ட காலப்பிணையங்களில் முதலீடு செய்கின்றன. இவ்வாறான பல நிறுவனங்கள் உள்ளன.

| இடைத்தரகர்கள் | முதனிலை சொத்துக்கள் (நிதிய மூலங்கள்) | முதனிலை பொறுப்புக்கள் (நிதியப் பிரயோகங்கள்) |
|---|---|---|
| **01. சேமிப்பு நிறுவனங்கள் (வங்கிகள்)** | | |
| 1) வர்த்தக வங்கிகள் | கேள்வி, சேமிப்பு, தவணை வைப்புகள் | தொழில்துறை நுகர்வுக்கடன் அடகு, அரச பிணையங்கள், முறிகள் |
| 2) சேமிப்பு மற்றும் கடன் சங்கங்கள் | சேமிப்பு வைப்புக்கள் | அடகு |
| 3) பரஸ்பர சேமிப்பு வங்கிகள் | சேமிப்பு வைப்புக்கள் | அடகு |
| 4) கடன் சங்கங்கள் | சேமிப்பு வைப்புக்கள் | நுகர்வுக் கடன்கள் |
| **02. உடன்படிக்கைரீதியிலான சேமிப்பு நிறுவனங்கள்** | | |
| 5) ஆயுள் காப்புறுதி கம்பனிகள் | காப்புறுதி தவணைப்பணம் | முறிகள் மற்றும் அடகு |
| 6) தீ / திடீர் காப்புறுதிக் கம்பனிகள் | காப்புறுதி தவணைப் பணம் | முறிகள், அடகு, பங்குகள் |
| 7) ஓய்வூதியச்சம்பள நிதியம் / சேமிப்பு நிதியம் | தொழில் வழங்குனர்-தொழிலாளர் பங்களிப்புத் தொகை | முறிகள், பங்குகள் |
| **03. முதலீட்டு இடைத் தரகர்கள்** | | |
| 8) பரஸ்பர நிதியப் பங்குகள் | பங்குகள் | பங்குகள் மற்றும் முறிகள் |
| 9) பணச்சந்தை பரஸ் பரநிதியம் | பங்குகள் | பணச் சந்தைக் கருவிகள் |
| 10)நிதியியல் கம்பனிகள் | வர்த்தக பத்திரங்கள் பங்கு மற்றும் முறிகள் | நுகர்வு தொழில்துறை கடன்கள் |

அட்டவணையின் மூலம் நிதியியல் இடைத் தரகர்களின் சொத்துக்கள் - பொறுப்புக்கள் தொகுதியின் இயல்பு காட்டப்பட்டுள்ளது.

நிதியியல் இடைத் தரகர்களின் சொத்துக்கள். பொறுப்பக்கள் தொகுதியைத் தழுவியதாக பொருளாதாரத்தின் நிதியியல்துறை மிகவும் செயலூக்கம் மிக்கதாகச் செயற்படுகின்றது. இதன்படி நிதியியல் இடைத் தரகில் பொருளாதாரத்தின் முக்கியமானது மிகவும் வலியுறுத்தப்பட வேண்டியதொரு பகுப்பாய்வாயுள்ளது.

1. ஆயுள் காப்புறுதிக் கம்பனிகள் (Life Insurance Companies)
2. தீவிபத்து மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதிக்கம்பனிகள் (Fire and Casually Insurance Companies)
3. ஓய்வூதிய நிதியம் (pension Funds)

03. முதலீட்டு இடைத் தரகர்கள்

1. நிதி நிறுவனங்கள் (Finance Companies)
2. பரஸ்பர நிதியம் (Mutual Funds)
3. நிதிச்சந்தை பரஸ்பர நிதியம் (Money Market Mutual Funds)

உசாத்துணை : இலங்கை மத்திய வங்கி குறிப்பேடு

## முதன் முதலாக.........

- உலகின் முதல் அணு குண்டு வெடிப்புச் சோதனை வடக்கு மெக்சிக்கோ பாலைவனத்தில் **Alamo gorodo** என்ற இடத்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. (1945 **July 16th**)

- "வாலெர்" என்ற அமெரிக்க டாக்டரால் **June 17.1950** இல் முதன் முதலாக சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சை நடாத்தப் பெற்று வெற்றி அளித்தது.

## தொலைபேசியில் முதல் வார்த்தை..................

**1876ம் ஆண்டு அலெக்சாண்டர் கிரகாம்பெல்**
**"மிஸ்டர் வாட்சன் அவர்களே**
**இங்கே வாருங்கள்"**
**என்று கூறிய வார்த்தைகள் தான்**
**உலகின் முதல் தொலைபேசி**
**வார்த்தைகள்**


Tilko Holidays (Pvt) Ltd.

TILKO Holidays

FOR BEST STAY IN JAFFNA

# Jaffna City Hotel

No:70/6, K.K.S Road, Jaffna, Sri Lanka.
(Near the General Post Office)
T.P: 021-2225969 Fax: 021-2227291
E-mail: tilkoholidays@yahoo.com





Special Tour packages could be arranged

## Mount La Villa

No 65 sangamitha avenu
Mt'Laviniya, Sri lanka.
T.P:0114-216428 FAX:0112-713803

Fully air conditioned Hall with 125 seats, for any occations in Jaffna.

Contact

T.P: 021-2225969 Fax: 021-2227291 E-Mail: tilkoholidays@yahoo.com

**Services Tendering**

- Comfortable accommodation in fully furnished rooms (A/C & Non A/C) at affordable prices
- All the support services including transportation, Telephone Internet facility and Laundry service
- Resort atmosphere/Large Garden for out door celebrations with ample parking facilities

A/C & Non A/C Vehicle Transport

Web Site : www.tilkoholidays.com E-mail : tilkoholidays@yahoo.com

# பொருளியல் வகுப்புக்கள்

**DMI**
(யாழ்ப்பாணம்)

**BRIGHTEN**
(சாவகச்சேரி)

**ACA**
(இணுவில்)

**SUBRA**
(சித்தங்கேணி)

ஆசிரியர்: S.S. ஸ்ரீ

# செல்வி நகையகம்

# CHELVI

NAKAI AGAM

நவீன அழகிய தங்க ஆபணங்களை 22 கரட்டில் பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்



1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

1/3 Kasthuriar Road,
Jaffna

T.P: 021 222 9441

# பிறைற்மன்

– கல்வி நிறுவனம் –

பிறவுண் வீதி நீராவியடி யாழ்நகர்

தரம் 1 முதல் O/L, A/L

வரை சகல வகுப்புக்களும் எமது

"SUPPER GRADE"

ஆசிரியர் குழுவினால் சிறப்பான

முறையில் கற்பிக்கப்படுகின்றன.

விசேட ஆங்கில வகுப்பு

சிங்கள வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**A/L கணித, உயிரியல் பகுதி**

பௌதிகம் – திரு ஜெயசீலன்

இணைந்த கணிதம் – திரு விஜயேந்திரன்

இரசாயனவியல் – திரு யூட்

உயிரியல் – திரு பொன் திவாகர்

கணக்கீடு – இ. வின்சன்

வணிகக்கல்வி – சி.சிவராஜா

# எரிக்கனோஸ்

பல் மூக்கு கண்ணாடியகம்



இல. 546, 566, ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்

கிளைகள்:

இல. 80, கே.கே.எஸ் வீதி

சுன்னாகம்

இல. 91, கே.கே.எஸ் வீதி

கொக்குவில் சந்தி,

கொக்கவில்

# PC PARK (PVT) LTD

PCP

the path to computer paradigm

**"கணனியுலகில் புதியதோர் பரிணாமம்"**

உங்கள் அபிமானத்தை பெற்ற Pc Park நிறுவனம்

தன்நிகரற்ற சேவையில் என்றென்றும் உங்களுடன்.




**ASUS NOTEBOOK**





**HP Pavilion**



hp intel logitech ASUS Kingston

# 633,K.K.S Road, Jaffna.

Telephone: 021 2229581 Fax: 021 2229581 hotline: 0773068998

email: info@pcparkonline.com web: www.pcparkonline.com



ஈஸ்வர பாமினி
நகை பூங்கா
EASWARA BAMINI
NAGAI
POONKA
உரிமையாளர்: ஈஸ்வரன்(சந்திரன்)
0776159217
இல. 09, ஆலடிச் சந்தி
மானிப்பாய்.
(யாழ் வீதி)




வேல் முருகன்
வணிக நிலையம்
VALE MURUGAN
TRADERS
நிறப்பூச்சு (Paint), சுண்ணாம்பு,
கலர்பவுடர்கள்,கட்டடப் பொருட்களும்
விற்கப்படும்.
56A (378) மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.




PREM
Nagai Maadam
No.171, Prem Plaza, Jaffna Road,
Manipay.
பிறேம் நகைமாடம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்
உரிமையாளர்: இ.பிறேம்குமார்
T.P: 0777241485
0773039572


மங்கை
சில்க்
MANKAI
SILK
No. A8 New Market
Chunnakam

யாழ் இந்து வர்த்தக மாணவர்
ஒன்றியத்தின் வரவு இதழை வாழ்த்தும்
சுந்தரசன்
SUNDHARSON
வடமாநிலத்தில் முதல் தர மின் உபகரணங்கள் விற்பனையாளரும் விநியோகஸ்தரும்
DISTRIBUTORS OF ELECTRICAL ITEMS AND
ELECTRICAL APPLIANCES WATER PUNS
SANITARY WARE
Jaffna Road, Manipay

# இலங்கையின் வரிமுறை



S.Dushyanthan
A/L 2009- Commerce
Jaffna Hindu College



## வரி பற்றிய அறிமுகம்

ஒரு நாட்டில் வாழும் மக்களது அனைத்து தேவைகளையும் சந்தை சக்திகளினூடாக வழங்குவது கடினமானது ஒன்றாகும். ஆகவே சில பொருட்கள், சேவைகள் சந்தை அல்லாத சக்திகளினால் வழங்கப்படும். இத்தகைய சந்தையல்லாத ஒருவழிமுறையாக அரசாங்கம் பொருட்கள் சேவைகளை வழங்குவததைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள், சேவைகள் தூய பொதுப்பொருட்களாகவும் கலப்புப் பொருட்களாகவும் காணப்படுவதுடன் வெளிவாரி விளைவுகளை ஏற்படுத்தவதும் குறைந்து செல்லும் உற்பத்திச் செலவுக்கும் உட்படுவதுடன் போன்ற காரணங்களினால் இப்பொருட்கள் சேவைகளை உரிய முறையில் சந்தையினூடாக ஒதுக்கீடு செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது. இதற்கு அப்பால் சமூகத்தில் சமனற்ற நிலையில் காணப்படும் வருமான பங்கீட்டினை சமப்படுத்துவற்கும் அரசானது பொருளாதாரத்தில் தலையிடுகின்றது. இந்த வகையில் அரசானது பல்வேறு கொள்கைக்கருவிகளை நடைமுறைப்படுத்துகின்றது. இந்த பல்வேறு கொள்கைகளில் ஒன்றே வரிக்கொள்கையாகும்.

## விரி விதிப்பின் நோக்கங்கள்

அரசாங்கம் பொருளாதாரத்தினை நிர்வகித்து முகாமை செய்து ஒழுங்குபடுத்தவும், வளர்ச்சி, அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்பவற்றை ஏற்படுத்தவும் நடைமுறை மூலதன செலவுகளை செய்ய வேண்டியுள்ளது. இச்செலவுகளை திரட்டுவதற்கு வரிவித்திப்பதனாலேயே தீர்க்கப்படுகினறது. எனவே வரிவிதிப்பின் பிரதான நோக்கம் வருமானத்தினை திரட்டுவதே எனலாம்.

## வரியினது பாகுபாடு (Classification of Taxes)

வரிகளை யார் செலுத்துகின்றார்கள் என்ற அடிப்படையில் வகைப்படுத்தி நேர்வரி, நேரில்வரி என்றும், வரி எவ்வா.று விதிக்கப்படுகின்றது என்ற அடிப்படையில் அலகுவரி, விகிதசமவரி என்றும் வரி எதன் மீது விதிக்கப்படுகின்றது என்ற கதியில் வருமானவரி, சொத்துவரி, விற்பனைவரி என்ற பாகுபாடும் செய்யப்பட்டுள்ளது.

## நேர்வரியும் நேரில்வரியும் (Direct and indirect taxes)

வரிகளை யார் மீது விதிக்கப்படுகினறதோ அவரே வரியையும் செலுத்தினாலும் அது நேர்வரியாகக் கருதப்படும். அதாவது வரியினது படுகையும் அமையும் ஒரே இடத்திலேயே காணப்படும்போது நேர்வரி எனப்படும், வரிவிதிக்கப்படும் இடம் ஒன்றாகவும், வரி செலுத்துபவர்கள் மற்றொருவராகவும் அதாவது படுகையும் அமையும். வெவ்வேறு இடமாக இருந்தால் அது நேரில் வரி எனவும் கொள்ளப்படுகினறது. இந்த அடிப்படையில் வருமான வரி நேர்வரியாகவும் விற்பனைவரி நேரில்வரியாகவும அமையும். ஆனால் இந்தப் பகுப்பு சில சமயங்களில் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். சில வரிகளில் படுகை சுமை என்பவை தெளிவற்றவையாகக் காணப்படுகின்றது. உதாரணமாக கூட்டுத் தாபனங்களில் வேலை செய்பவர்களது சம்பளங்களில் இருந்து பணமானது அறவிடப்படுகிறது. இது ஊழியர்களுக்கு எதிர்காலத்தில் கிடைக்குமென்பதால் அவர் அதனை செலுத்த சித்தமாக இருக்கின்றார். எனவே நேர்வரியை ஒத்ததாகும். ஆனால் அரசாங்கம், கூட்டுத்தாபனம் இதற்கு 15% சதவீதத்தினை செலுத்துகின்றது. இதற்குரிய நிதி வேறுவகை நிதி வருமானங்களில் இருந்தே பெறப்படுகிறது. இதனால் இது நேரில் வரியாகும் சேமலாபநிதி வரி போன்று செயற்படாத காரணத்தினால் நாம் உணர்வதில்லை. இது நேரில்வரி என்ற பகுபாட்டில் எழக்கூடிய சிக்கலை தெளிவாக விளக்குகினறது.

## அலகுவரி – விகிதசமவரி (Unit tax -Proportional tax)

பொருள் அல்லது சேவைக்கு அலகு ஒன்றிற்கு இவ்வளவு வரியென அறிவிடப்படும் போது அது அலகு வரியாகும். மாறாக குறித்த பொருளின் பெறுமதியின் ஒரு வீதத்தினை வரியாக அறவிடும் போது அது விகிதசம வரி எனப்படும்.

## இலங்கையின் வரி அமைப்புக்கள்

**வருமானம் மீதான வரிகள்** (Taxes in Income)
தனியார் மீது, கம்பனிகள்மீது, ஏனைய நிறவனங்கள் என பிரிவுகள் காணப்படுகின்றது இந்த நிறுவனங்களினால் (தனியார், கம்பனி, நிறுவனங்கள்) உழைக்கப்படும் வருமானங்களில் மீது அறவிடப்படும் வரி வருமானவரி ஆகும்.

**சொத்துக்கள் மீதானவரிகள்**
மத்திய அரசினால் அறவிடப்படும் சொத்துக்கள் மீதானவரி, உள்ளுராட்சி மன்றங்களினால் அறவிடப்படும் சோலைவரி, போன்றவையே தற்போது உள்ளவரி ஆகும். இது அசையக்கூடிய, அசைய முடியாத

சொத்துக்களின் சந்தைப் பெறுமதியினை மதிப்பீடு செய்தே இவ்வரி அறவிடப்படுகிறது.

உள்நாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகள் - ஏற்றி இறக்கும் பொருட்கள் மீது எல்லையில் விதிக்கப்படும் வரி இது ஆகும். வருமானத்தினை பெறும்நோக்குடனும் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த வரி அறவிடப்படுகின்றது.

**உள்நாட்டு பொருட்கள் சேவைகள் மீதான வரிகள்**

இந்த வரி முக்கியமாக குடிவகை யிலும், புகையிலையிலும் அறவிடப்படுகின்றது. இது காலாண்டிற்கு ஒருமுறை அறவிடப் படுகின்றது.

**நானாவித வரிகள்**


இதனுள் அனுமதிப்பத்திர கொடுப்பன வுகளம், வாகன விற்பனைவரி, வானொலி, தொலைக்காட்சிப் பத்திர கட்டணங்கள் போன்றவை ஆகும்.

இலங்கை போன்ற நாடுகளில் வரி அமைப்பில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு ஒரு சிறந்த வரியமையப்பாக மாற்றப்படல் வேண்டும். சிறந்த வரியமைப்புக்குரிய சகல பண்புகளையும் கொண்ட ஒருவரியமைப்பாக மாறினால்தான் வரியினூடாக அடைய எத்தனித்த குறி இலக்குகளை அடைய முடியும்.

## விமானத்தையே வீழ்த்தும் பறவைகள்

**தகாதகாலநிலை மாற்றங்களாலும் உணவு இனப்பெருக்க வாய்ப்புக்களிற்காகவும் பறவைகள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கோ அல்லது ஒரு துருவத்திலிருந்து வேறு பிரதேசங்களிற்கோ குடிபெயர்வது வழமையானது. இப்பறவைகள் பொதுவாக இடம்பெயரும் போது 90 மீற்றர் உயரமளவிலும் சில அதற்கு மேலாலும் பறக்கின்றன. இவ்வாறாக இவை பறக்கின்ற போது விமானங்களுடன் மோதி அவற்றை வீழ்த்துவது பல தடவை நிகழ்ந்துள்ளன. 1973ம் ஆண்டு நவம்பர் 29ம் திகதி ஜவரிக் கோப்ரில் வானில் பறந்து கொண்டிருந்து வர்த்தக விமானமொன்று வல்லூறு இனபறவையுடன் மோதி விபத்துக்குள்ளாகியது இதனால் விமானத்தில் ஓர் இயந்திரம் சீர்குலைந்து இருந்தும்மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.**

# பணவீக்கம்



K.Paraniruban
A/L 2008- Commerce
Jaffna Hindu College

நீண்ட காலப் பகுதியில் ஒரு நாட்டின் பொதுவிலை மட்டம் தொடர்ச்சியாகவும் பெரியளவினாலும் அதிகரித்துக் செல்லுதல் பணவீக்கமாகும்.

பணவீக்கத்தை பின்வரும் காரணிகள் ஏற்படுத்துகின்றன

**i) கேள்விப்பக்க காரணிகள்**

i) தனியார் முதலீடுகள் அதிகரித்தல்
ii) தனியார் நுகர்வுச்செலவு அதிகரித்தல்
iii) பணநிரம்பல் அதிகரித்தல்
iv) அரசாங்க செலவு அதிகரித்தல்

**ii) நிரம்பல்பக்க காரணிகள்**

i) உற்பத்திக்காரணிகள் விலை அதிகரித்தல்
ii) மூலப்பொருட்களின் விலை அதிகரித்தல்
iii) இறக்குமதிப்பொருளின் விலை அதிகரிப்பு
iv) மறைமுக வரி விதிப்பு
v) நாணய மாற்று வீதத் தேய்வு

## பணவீக்கத்தை அறவிடுவதில் பயன்படும் குறி காட்டிகள்

### 01. புதிய கொழும்பு நுகர்வோன் விலைச்சுட்டெண்

இது கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை அறிமுகம் செய்த திணைக்களம் குடிசனமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களமாகும். இது 2002ம் ஆண்டை அடியாண்டாக கொண்டு கணிப்பிடப்படுத்தப்படுகிறது.

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பலவீனங்கள்**

i) நீண்ட காலமாக அதாவது 1952 இலிருந்து விலை மாற்றங்கள், வாழ்க்கைச் செலவு என்பவற்றை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இவ் விலைச் சுட்டெண் தற்போதைய யதார்த்தத்தினைப் பிரதிபலிக் கவில்லை.

ii) மேலும் தற்கால குடும்பங்களின் நுகர்வுபழக்க வழக்கஙகள், செலவீன மாற்றங்கள் என்பவற்றை நுகர்வோர் விலைச்சுட்டெண் பிரதிபலிக் கவில்லை.

iii) காலத்தில் பொருத்தமில்லாத விலைச் சுடடெண்ணாகக் காணப்பட்டதுடன் பொருளாதார கொள்ளையாக்கங்கள், நாணயக் கொள்கை (Money policy), பொருளாதார செயலாற்றுகைகள், சமூக பொருளாதார கொள்கையாக்கங்கள் என்பவற்றில் தவறான வெளிப்படுத்தலை காட்டியது.

**கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்களிற்கும் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிற்குமிடையிலான வேறுபாடுகள்?**

1) நீண்டகாலமாகப் பயனப்டுத்தப்பட்டு வந்த கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணானது வாழ்க்கைச் செலவு, விலைமாற்றம் என்பவற்றில் தற்கால வெளிப்படுத்தலை காட்டவில்லை. ஆனால் புதிய கொழும்பு நகர்வோர் விலைச் சுட்டெண்ணானது யதார்த்த நிலமையையும் எடுத்துக் காட்டியது.

2) கொழுமம்பு நகர்வோர் விலைச் சுட்டெண்ணானது தற்கால குடும்பங்களின் நுகர்வுப்பழக்க வழக்கங்கள், செலவீன மாற்றங்கள் என்பவற்றை பிரதிபலிக்கவில்லை ஆனால் புதிய கொழும்பு நகர்வோர் விலைச் சுட்டெண்ணானது அனைத்தையும் பிரதி பலித்துக் காட்டுகின்றது.

3) பொருளாதார கொள்கையாக்கங்கள், நாணயக் கொள்கை (Money policy) பொருளாதார செயலாற்றுகைகள், சமூக பொருளாதார கொள்கையாக்கங்கள் என்பவற்றில் தவறான வெளிப்படுத்தலை காட்டியது (கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி)

ஆனால் புதிய கொழும்பு விலைச் சுட்டெண்ணானது நாணயக் கொள்கை, பொருளாதார செயலாற்றுகைகள் என்பவற்றில் சரியான வெளிப்படுத்தலையே காட்டியது.

**02. மொத்த விற்பனை விலைச்சுட்டெண் (Whole Sale Price Index)**

மொத்த விற்பனை விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட சுட்டெண் ஆகும்.

இவ்விலைச்சுட்டெண் கணிப்பீட்டில் பொருட்கள் மட்டும் கருத்தில் கொள்ளப்படும்

**03. கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்**

கொழும்பு நுகர்வொர் விலைச் சுட்டெண்களின் குறைபாடுகளை நீக்குவதற்காக தயாரிக்கப்பட்ட குறிகாட்டியாகும். இது சில்லறை விலைகளின் அடிப் படையில் தயாரிக்கப்படும். இது 1989ம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டு கணிப்பிடப்படுகிறது. இச் சுட்டெண்ணானது கொழும்பு பெரும்பாக பிரதேசத்தில் வசிக்கும் நுகர்வோரின் செலவுப் போக்கை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது!

**04. மொத்தத்தேசிய உற்பத்திச்சுருக்கி / மொத்தத்தேசிய உற்பத்தி உள்ளார்ந்த சுருக்கி**

இது 1996 ஆண்டை அடியாண்டாகக் கொண்டு கணிப்பிடப்படுகிறது.

நடப்புவிலை தேசிய உற்பத்தியை நிலையாக விலைத்தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடும் ஒரு குறி காட்டியாகும்.

தேசிய வருமான மதிப்பீட்டில்

இடம்பெறும் அனைத்துப் பொருள் சேவைகளும் கருத்தில் கொள்ளப்படும்.

**05. கொழும்பு மாவட்ட நுகர்வோன் விலைச்சுட்டெண்**

இது 1996/1997காலப்பகுதியை அடியாண்டாகக் கொண்டது.

கொழும்பு மாவட்டத்தில் வாழுகின்ற மக்களின் சமூக, பொருளாதார அளவீட்டுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகிறது.

**06. மாவட்ட அடிப்படையிலான நுகர்வோன் விலைச்சுட்டெண்**

மத்திய வங்கியானது கொழும்பு மாவட்ட நுகர்வோன் விலைச்சுட்டெண்ணில் புறம்பாக அநுராதபுரம், மாத்தறை ஆகிய மாவட்டங்களின் விலைமட்ட மாற்றங்களை குறிப்பாக பணவீக்கத்தன்மையை சரியான முறையில் அளவிடுவதற்கு தயாரிக்கப்பட்ட சுட்டெண் இதுவாகும்.

**07. இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்**

இது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த எனைய அனைத்து மாகாணங்களுக்கும் பொருந்தும்

இது 1995/1996 காலப்பகுதியை அடியாண்டாகக் கொண்டு கணிக்கப்படுகிறது.

**விலைச்சுட்டெண்ணின் பயன்பாடு**

i) பணவீக்கத்தை (Inflation) மதிப்பீடு செய்ய உதவும்
ii) மக்களின் வாழ்க்கைத் தர மாற்றங்களை அறிய உதவும்
iii) அரச ஊழியர்களின் குறைந்தபட்ச கூலியை / சமம்பளத்தை நிர்ணயிக்க உதவும்
iv) சர்வதேச வர்த்தகத்தின் போக்குகள் பற்றி அறிய உதவும்

**விலைச்சுட்டெண்ணின் குறைபாடுகள்.**

i) மதிப்பீட்டின் போது வழுக்கள் ஏற்படின் உண்மைப்பெறுமதியை மதிப்பீடு செய்ய முடியாது.
ii) ஒவ்வொரு சுட்டிகளிலிருந்தும் ஒவ்வொரு விதமான முடிவுகள் பெறப்படும். இதனால் சுட்டிகளுக்கிடையில் முரணான தன்மை காணப்படும்.
iii) நீண்டகால தொழிற்பாடுகளை விலைச் சுட்டெண் மூலம் மதிப்படு செய்வது கடினம்.

**பணவீக்கத்தின் வகைகள் (பொது விலைமட்ட வேகத்தை அடிப்படையாகக் கொண்டு)**

1) நீடித்தபணவீக்கம் (Chronic Inflation)

ஒரு நாட்டின் பொது விலைமட்ட அதிகரிப்பானது தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்குக் காணப்படின் அதனை நீடித்த பணவீக்கம் என்பர்.

2) எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கம் (Expected Inflation)

கடந்த கால விலைமட்ட போக்குகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் வரியை அதிகரிப்பைக் கவனத்தில் கொண்டு நிகழ்காலப் பொருட்கள் சேவைகளின் பொது விலைமட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கமாகும்.

3) பாயும் பணவீக்கம் (Galloping Inflation)

விலைமட்ட வீக்க வீதம் மிகக் கூடுதலாக இருக்கும் போது அது பாயும் பணவீக்கம் எனப்படும்.

4) அமுக்கிய பணவீக்கம் (Hiden Inflation)

பொது விலைமட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு வெளிபடையாகத் தெரியாமல் அரசாங்கத்தின் கொள்கைகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு காணப்பட்டால் அதனை அமுக்கிய பணவீக்கம் என்பர்.

5) திறந்த பணவீக்கம் (Open Inflation)

பணவீக்கத்தின் போக்கு வெளிப்படையாகத் தெரியும் போது அதனை திறந்த பணவீக்கம் என்பர்.

6) தவழும் பணவீக்கம் (Creeping Inflation)

கணிப்பிடப்படும் பணவீக்கமானது பணவீக்க வீதம் மாறாது இருக்கும் போது அந்த மாறாத பணவீக்கத்தைக் கிட்டியதாக / அண்மித்ததாக இருக்கும் போது அது தவழும் பணவீக்கமாகும்

7) உச்ச வேக பணவீக்கம் (Hyper Inflation)

ஒரு பொருளாதாரத்தில் அசாதாரண ஆரம்ப நிலைகளாகிய போர், இயற்கை அழிவு போன்றன ஏற்படுகின்றபோது பொருட்கள் சேவைகளின் விலைகள் பல மடங்காக அதிகரிக்கும். இவ் அதிகரிப்பு வீதமானது 200% ஐ அண்மித்தால் அதனை உச்சவேக பணவீக்கம் என்பர்.

## பணவீகக்த்தின் சாதகமான பொருளாதார விளைவுகள்

i) பொருள் உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு இலாப உழைப்பு சாதகமாக இருப்பதால் உற்பத்தி அதிகரித்துச் செல்லும்
ii) இதனால் மூலப்பொருட்களின் பயன்பாடு அதிகரித்தல்
iii) கடன்பட்டவருக்கு சாதகமாக வருமானம் பங்கீடு அமையும்.
iv) பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி யேற்படும்.
v) இதன் காரணமாக சேமிப்பு, முதலீடுகள் அதிகரிக்கும்

## பணவீக்கத்தின் பாதகமான பொருளாதார விளைவுகள்

i) நிலையான வருமானம் பெறும் அரச ஊழியர்களின் மைய வருமானம் வீழ்ச்சி யடையும்
ii) கடன் கொடுத்தவருக்கும் பாதகமாக வருமானப் பங்கீடு அமையும்
iii) பணத்தின் மையப்பெறுமதி வீழ்ச்சியடையும்.
iv) சென்மதி நிலுவையில் பற்றாக்குறை ஏற்படும்.
v) பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வி விழ்ச்சியடைவதால் சேமிப்புக்கள் குறைவடையும்.
vi) நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சியடையும்.

| ஆண்டு | பணவீக்கம் |
|---|---|
| 1960/1970 | 2.4% |
| 1970/1980 | 6.7% |
| 1980/1990 | 13.9% |
| 1991/2000 | 11.1% |
| 2003 | 6.3% |
| 2004 | 7.6% |
| 2005 | 11.6% |
| 2006 | 13.7% |


**உசாத்துணை நூல்கள்**

மத்திய வங்கி அறிக்கை 2006

*S.S.Sri- Economics Book*

*Valampuri paper - Dec. 12.07*


*"இயற்கையின் இரகசியங்கள்*
*இருளிலே மூழ்யிருந்தன.*
*கடவுள் நியூட்டனை அனுப்பினார்.*
*ரகசியங்கள் இருந்த இடத்தில்*
*வெளிச்சம் பாய்ந்தது.*
*இந்த வாக்கியங்களை தாங்கி*
*இருக்கும் கல்லறையில் தான் நியூட்டன்*
*இப்போது நீங்காத் துயில்*
*கொள்கிறார்.*

# பெறுமதி கூட்டப்பட்ட வரி (Value Added Tax)



V.Anurathan
A/L 2009- Commerce
Jaffna Hindu College

## இதன் நோக்கங்கள்

- அத்தியாவசியமான புத்தகங்களிலும் கணக்குகளிலும் VAT சம்பந்தமான பதிவு களை மேற்கொள்ளலாம்.
- வரிவிதிக்கக் கூடியதும் ஏனைய வியாபார நிறுவனங்களுக்கு மிடையிலான வித்தியாசத்தைக் காணலாம்.
- VAT அறவீடு உள்ளடக்கப்பட்ட விற்பனைப்பட்டியலை அடையாளங் காணலாம்.

## அறிமுகம் *(Introduction)*

இப்பகுதியில் UK முறையில் பெறுமதி கூட்டப்பட்ட வரியைப்பற்றி அறியலாம். இந்த VAT ஐ இறுதி நுகர்வோர் எப்படிச் செலுத்தி வருகின்றனர் என்பதையும் பயிலலாம். அவர்களுடைய நிரம்பல் வரிசை கடந்த பொருட்களின் நிலையில் எவ்வாறு VAT ஐ சேகரிக்கின்றார்கள். VAT இன் வேறுபட்ட வழிகளையும் வேறுபட்ட விகிதங்களையும் ஒரு பெறுபேறாக பதிவு செய்திருக்க வேண்டி இருப்பதையும், இறுதியாக எவ்வாறு Vat Account and complete a VAT Return Account ஐயும் கற்க முடியும்.

## *VAT* என்றால் என்ன?

ஐக்கிய இராஜ்ஜியத்தில் பொருட்கள் சேவைகளின் நிரம்பலின் மீது அறவீடு செய்யப்படும் வரி VAT ஆகும். இதில் சில பொருட்கள் சேவைகள் வரிசெலுத்தக் கூடியவையாக இல்லை. உதாரணமாக தபால் சேவைகள் மேலும்


சில நபர்களும் சில வியாபாரங்களும் வரி விலக்களிக்கப்பட்டவையாகும். (விற்பனைப் புரள்வு குறைந்த வியாபார நிறுவனங்களிற்கு விலக்களிக்கப்படுகிறது) இவ் VAT ஆனது இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிர்வகிப்படுகிறது. பொதுவாக VATஇற்கு பொருட்கள் சேவைகளின் கூட்டப்பட்ட பெறுமதி மீது விதிக்கப்படும் வரி என்றும் வரைவிலக்கணம் கூறப்படலாம். VAT ஆனது பிரான்ஸ் நாட்டில் முதன் முதலாக அறிமுகமான போதிலும் இலங்கையில் 2002 August 01இல் அறிமுகமானது.

## *VAT* இன் நன்மைகள்

i) வரி புலப்படு தன்மை உண்டு
ii) மோசடி ஏற்படுவது கடினம்
iii) பொருட்கள் சேவைகள் மீது மீண்டும் மீண்டும் வரி விதிக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது.
iv) இவ்வரி நுகர்வோரைச் சென்றடைவதால் உற்பத்தியாளர் விற்பனையாளர் தூண்டப்படுகின்றனர்.

## *VAT* இன் தீமைகள்

i) சிறிய வணிகங்கள் இதற்கென கணக்காளரிடம் செல்லும் போது செலவுகள் அதிகரிக்கின்றது.
ii) வரிக் கணிப்பீட்டில் சிக்கல்கள் ஏற்படலாம்.




**வரி வீதங்கள்:**

1) பூச்சிய விகித வணிகம் (Zero Rated Business)
2) நியம விகித வணிகம் (Standard Rated Business)
3) விதி விலக்களிக்கப்பட்ட வணிகம் (Exempted Business)
4) பகுதி விதி விலக்களிக்கப்பட்ட வணிகம் (Party Exempt Business)

**பூச்சிய விகித வணிகம்** (Zero Rated Business)

கூட்டப்பட்ட வரி அமைப்பில் உள்ளடக்கியுள்ள ஆனால் அவ்வரியை செலுத்தத் தேவையற்ற பொருட்கள், சேவைகள் விற்பனை செய்யும் வணிகம் பூச்சிய விகித வணிகம் ஆகும்.

இந்நிறுவனங்கள் உள்ளீட்டு வரியை கொள்வனவின் போது செலுத்த நேர்ந்தாலும் மீளப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**நியம விகித வணிகம்** (Standard Rated Business)

நியம வரிசெலுத்த வேண்டிய பொருட்கள் சேவைகளை விற்பனை செய்யும் வணிகம் நியம விகித வணிகம் ஆகும்.

**விதி விலக்களிக்கப்பட்ட வணிகம்** (Exempted Business)

விரிவிதி விலக்களிப்பட்ட பொருட்கள் சேவைகளை விற்பனை செய்யும் வணிகம் விதி விலக்களிக்கப்பட்ட வணிகம் ஆகும். இந்நிறுவனங்கள் VAT செலுத்தப்படமாட்டாது.

**பகுதி விதிவிலக்களிக்கப்பட்ட வணிகம்** (Party Exempt Business)

நியம வரி செலுத்த வேண்டிய பொருட்கள் கோவைகளை விற்பனை செய்யும் அதே நேரம் பூச்சிய வீத வரி செலுத்த வேண்டிய பொருட்கள் சேவைகளையும் விற்பனை செய்யும் வணிகம் பகுதி விதிவிலக்களிக்கப்பட்டது ஆகும்.

- இந்நிறுவனம் உள்ளீட்டு வரியையும் வெளியீட்டு வரியையும் பதிய வேண்டும்.

நியம வீத நிரம்பல் பூச்சிய வீத நிரம்பல் விதிவிலக்கு நிரம்பல் காணப்படும்போது உள்ளீட்டின் மீதான வரியை கணிப்பிடும் சமன்பாடு,

$$\text{மீளப்பெறக்கூடிய உள்ளீட்டு வரி} = \frac{\text{வரிவிதிப்பிற்குரிய நிரம்பல்}}{\text{மொத்த நிரம்பல்}} \times \text{மொத்த உள்ளீடு}$$

$$\text{மீளப்பெறக்கூடிய உள்ளீட்டு வரி} = \frac{\text{வரி விலக்களிக்கப்பட்ட நிரம்பல்}}{\text{மொத்த நிரம்பல்}} \times \text{மொத்த உள்ளீடு}$$

## வரி விபரத்திரட்டு *(Tax Return)*

வரி விதிப்பதற்குரிய காலப்பகுதி முடிவடைந்த அடுத்துவரும் மாதத்தில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு பெறுமதி கூட்டப்பட்ட வரி தொடர்பான விபரங்களை அறிவிக்கும் அறிக்கை வரிவிபரத்திரட்டு எனப்படும்.

## VAT தொடர்பான இரட்டைப் பதிவுகள்

i) பொருட்கள் சேவைகளின் கொள்வனவின் போது.
   கொள்வனவுக் கணக்கு வரவு
   VAT கணக்கு வரவு
   கடன் கொடுத்தோர் கணக்கு / காசுக்கணக்கு செலவு

ii) பொருட்கள் சேவைகளின் விறப்னைக்கு (நிரம்பலிற்கு)
   காசுக்கணக்கு / கடன்பட்டோர் கணக்கு வரவு
   விற்பனைக் கணக்கு செலவு
   VAT கணக்கு செலவு

## பூச்சிய விகித நிரம்பலிற்கு சில உதாரணங்கள்

இலங்கைக்கு வெளியில் பயன்படுத்த உற்பத்தியான கணனிகள்
இலங்கைக்கு வெளியில் பயன்படுத்தும் ஆக்க உரிமைகள்
சர்வதேச போக்குவரத்துடன் தொடர்பான சேவைகள்.

01. புத்தகங்கள்
02. மின்சார உற்பத்தி
03. பொது மக்களக்கான போக்குவரத்து
04. குடியிருப்பிற்கான வீடுகள்

பேசுவதும் எண்ணங்ளை பகிர்ந்து கொள்வதுமே
உண்மையான நட்புக்கு முக்கியம்.....

நட்பின் வெற்றிக்கு தனிமையும் பிரிவும் தேவையானதே......

நல்ல நண்பர் கிடைப்பதற்கு நாம் மனம் திறந்து பேச வேண்டும்...


நல்ல நண்பனை பெற நாம் நல்ல நண்பனாக இருத்தல் அவசியம்....

நட்பானது மகிழ்வை இரு மடங்காக்கி துக்கத்தை
அரைவாசியாக மாற்ற வேண்டும்.

# அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகளும் சவால்களும் உபாயங்களும்



S.Rushanthan
A/L 2009- Commerce
Jaffna Hindu College



## பணவீக்கத்தை குறைப்பதற்கான உபாயங்கள்

பணவீக்கமானது பொருளாதாரத்தில் ஒரு பொது எதிரியாக கருதப்படுகின்றது. இதன் தாக்கம் ஒரு நாட்டில் ஒவ்வொரு தனிநபரினாலும் உணரப்படும். பணவீக்கத்தை சமாளிப்பதற்கான வழிவகைகளும் குறைப்பதற்கான உபாயங்களும் இலங்கை மத்திய வங்கியினால் மட்டுமன்றி, எல்லோரினதும் ஒத்துழைப்பினாலும் மேற்கொள்ளப்பட வேண்டியதாகும்.

எனவே இதில் இலங்கை மத்திய வங்கி, அரசாங்கம், வங்கிகள் நிதி நிறுவனங்கள், நிதி முகாமையாளர்கள், வர்ததகர்கள், வியாபாரிகள் ஆகியோரினதும் பங்களிப்பு தேவை ஆகும் அதாவது பல்வகை சந்தைகள் உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நுகர்வோர் ஆகியோர் இதில் ஈடுபடுவர்.

### 1. இலங்கை மத்திய வங்கி

இவ் வங்கியின் பிரதான நோக்கத்திற்கிணங்க நிலையானவிலையை அடையும் நோக்குடன் தனது நிதிக் கொள்கையை கையாளுவதன் மூலம் பண வீக்கத்தினையும் குறைக்க முடியும். இவ்வங்கி தனது இலக்கினை பொருளாதார வளர்ச்சி நோக்குடனும் பணவீக்கத்தினை விரும்பத்தக்க அடைவு மட்டத்திலும் வைத்திருக்க முயல்கிறது. தற்கால அமைப்பு முறை சந்தையை அடிப்படையாகக் கொண்ட கருவிகளான வட்டி வீத மாற்றக் கொள்கையினாலும் திறந்தசந்தை நடவடிக்கையினாலும் இதனை அடைய முயல்கின்றது.

## 2. அரசாங்கம்

அரசாங்கத்தின் நிதிக் கொள்கை நாணயக் கொள்கையை திறமையாக செயற்படுத்துவதற்கு உறுதுணையாக வேண்டும். ஆகவே நிதி இலக்குகளை அடைவதற்கு ஏற்ற கடமைப்பாட்டுடன் இயங்குவது அவசியமாகின்றது. இதற்கிணங்க 2007முதலாம் காலாண்டில் வருமான இலக்கு குறிப்பிடத்தாக்கதாகும். அரசாங்க செலவினத்தை குறைக்கும் நோக்குடன் அதன் வரமானக் கொள்கையை குறிப்பாக வேதன அதிகரிப்பை உற்பத்தி இலாபத்துடன் இணைந்து செயற்படுத்த வேண்டியது விரும்பத் தக்கது.

## 3. வங்கிகளும் நிதி நிறுவனங்களும்

இந்த நிறுவனங்கள் பொருளாதார நடவடிக்கைகளுக்கான நிதியை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது சில வங்கிகளும் நிதி நிறுவனங்களும் அரசாங் கத்துக்கும் தனியார் துறையினருக்கும் நிதியை வழங்குமிடத்து வேறும் சில தனியார் துறையினருக்கு மட்டும் உதவுவனவாக விளங்குகின்றன. தனியார் துறையில் தொடர்ந்து அதிகரித்து வரும் கடன் வசதிகள் நிலையான விலை மட்டத்தையும் நிதி முறையின் உறுதித் தன்மையையும் பாதிக்கக் கூடும் பணவீக்க நிலைமை உருவாகும் பட்சத்தில் தலைவர்கள் பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்யாது உற்பத்தி நடவடிக்கைகளில் முதலீட்டை மேற்கொள்ள கவனம் செலுத்த வேண்டும்.

## 4. நிதி முகாமையாளர்கள் / விநியோகஸ்தர்கள் / வர்த்தகர்கள்

இத்துறையில் வங்கிகளுக்கிடையிலான கொள்கைகளும் நடவடிக்கைகளும் வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தை நடவடிக்கை அரச பிணைகள் சந்தை (Govt Securities Market) ஆகியனவற்றின் நடவடிக்கைகளும் கொள்கைகளும் உகந்தனவாகவும் அனுகூலமானவையாகவும் இருக்க வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கை களுடன் பிரதம பங்காளர்களான வங்கிகளும் தமது செயற்பாடுகளை பொறுப்புள்ளதாக முழுப் பொருளாதாரத்திலும் பாதக விளைவு ஏற்படாதவாறு செயற்பட வேண்டும்.

## 5. முதலீட்டாளர்களும் வியாபாரத் துறைகளும்


பணவீக்கத்தினை தடுப்பதற்கான ஒரு வழி உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதாகும் இதற்கு உற்பத்திக் காரணிகளான தொழில் நுட்பமும் உயர் உற்பத்தி முறைகளும் அறிமுகம் செய்யப்பட வேண்டும் தொழல்நுட்பத்தில் முதலீடு செய்வதனால் உற்பத்தி அதிகரிப்பது மட்டுமன்றி. உற்பத்திச் செலவீனத்தையும் குறைக்க முடியும். இதற்கு உள்நாட்டு வளங்கள் பற்றாக்குறையானால் வெளிநாட்டு உதவிகளையும் ஒத்துழைப்பையும் கூட்டுமுயற்சிகளையும், பங்குடமைகளையும் பயன்படுத்துவ்து பயனளிக்கும். பொது தனியார் பங்குடமை செயற்திட்டத்தின் மூலம் இதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

## 6. வீட்டுத் துறையினரும் பொது மக்களும்

பணவீக்கம் என்பது பலவிதமாக பலவட்டங்களில் வர்ணிக்கப்படுகிறது. கடைகளில் காணப்படும் பொருட்கள் சேவை களுக்கான விலைப்பட்டியலும் நவீன சந்தைகள் சேவை மையங்கள் ஆகியவற்றில் காணப்படுவனவும் பணவீக்கத்தை விளக்காது விலை அதிகரிப்பையே எடுத்துக் காட்டு வதாகும். இவை பொருளாதாரத்தில் தொடர்ச் சியான பொதுவிலைமட்டத்தின் அதிகரிப்பையே குறிக்கின்றன அத்துடன் குறுகிய கால அதிர்ச்சிகளான வறட்சி, வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு ஆகிய தற்காலிக விலை ஏற்றத்தை கொண்டுவரும் ஆனால் நிலமை சீரடைந்ததும் விலைகளும் வழமைபோல் ஆகிவிடும். இதை பணவீக்கம் என இத்துறையினர் இவ்வாறு கருதக் கூடாது இதனால் பணவீக்கத்தினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை தவிர்த்துக் கொள்ளமுடியும்.

உசாத்துணை : மத்திய வங்கி ஆண்டறிக்கை

# சர்வதேச பொருளாதார கட்டமைப்பு மாற்றம்



**R.Sansayan**
A/L 2008- Commerce
Jaffna Hindu College

சந்தை பொருளாதாரம் என்பதனுள் மிக பிரதான இரு எண்ணக் கருக்கள் தொடர்புபடுகின்றன அதாவது,

**சர்வதேச வர்த்தகம்**
**சர்வதேச நிதி**

என்பவற்றுள் சர்வதேச வர்த்தகத்தினை எடுத்து நோக்குமிடத்து "சர்வதேச அரசியல் எல்லைகளால் பிரிக்கப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளிடையே நடைபெறும் வியாபாரம் "சர்வதேச வியாபாரம்" ஆகும். இச்சர்வதேச வியாபாரத்தின் பிரதான பிரிவுகளாக ஏற்றுமதி வியாபாரம், இறக்குமதி வியாபாரம் என வகைப் படுத்தப்படுகின்றது.

இவ் ஏற்றுமதி வியாபாரம் "என்பது ஒரு நாட்டின் மிகையான உற்பத்திகளை இன்னொரு நாட்டிற்கு அனுப்புகின்ற வியாபாரம் ஆகும். இத்தகைய ஏற்றுமதி வியாபாரம் கட்புலனாகும் ஏற்றுமதி வியாபாரம், கட்புலனாகாத ஏற்றுமதி வியாபாரம் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படலாம்.

## ஏற்றுமதி கட்டமைப்பு

ஏற்றுமதி கட்டமைப்பு என்பத நாட்டின் மொத்த ஏற்றுமதியில் விவசாய ஏற்றுமதி, கைத்தொழில் ஏற்றுமதிகள், கனிப்பொருள் ஏற்றுமதிகளும், பகுபடா ஏற்றுமதிகளும் என்பன வழங்குகின்ற பங்களிப்பு ஆகும்.

இவ்விவசாய பொருள் ஏற்றுமதியினுள் தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற பெருந்தோட்ட ஏற்றுமதிகளும் வாசனை திரவியங்கள், கோப்பி, கொக்கோ, போன்ற சிறு விவசாய ஏற்றுமதிகளும் உள்ளடங்குகின்றன. இவற்றுள் தேயிலை பிரதான பங்கினை வகிக்கின்றது.

கைத்தொழில் பொருள் ஏற்றுமதியினுள் புடைவைகளும் ஆடைகளும் பெற்றோலிய உற்பத்திகள், மட்பாண்ட உற்பத்திகளும், இறப்பர் உற்பத்திகள் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் என்பன உள்ளடங்குகின்றன.. இவற்றுள் புடைவைகளும் தைக்கப்பட்ட ஆடைகளும் பிரதான பங்கினை கொண்டுள்ளது.

கனிப்பொருளும் ஏனைய பொருட்களின் ஏற்றுமதியினுள் இரத்தினக்கற்கள் மற்றும் காரியம், இல்மனைட் போன்ற ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள், ஏனைய பொருடக்ளின் ஏற்றுமதிகள் என்பன உள்ளடங்குகின்றன. இதில் இரத்தினக்கல் பிரதானமானதாகும்.

அண்மைகால இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் விவசாய ஏற்றுமதிகள் 18%-19%வரையாகவும் இவ்விவசாய ஏற்றுமதியில் 13% ஆகவும் விவசாய ஏற்றுமதியில் 68%-70% வரையாகவும் காணப்படுகின்றது. இவ்விவசாய ஏற்றுமதி வருமானம் 2006இல் 12% இனால் வளர்ச்சி அடைந்துள்ளன.

கைத்தொழில் பொருள் ஏற்றுமதிகள் 78% வரையாகவும் இக்கைத்தொழில் இக்கைத்தொழில் பொருள் ஏற்றுமதிகளில் புடையைகளும் ஆடைகளும் மொத்த ஏற்றுமதியில் 45%-46% ஆகவும் கைத்தொழில் ஏற்றுமதியில் 57% - 58%ஆகவும் காணப்படுகின்றது. இக்கைத்தொழில் ஏற்றுமதி வருவாய் 2006இல் 8.8%இனால் வளர்ச்சி கண்டுள்ளன.

கனிப்பொருட்களும் ஏனைய பொருட்களின் ஏற்றுமதிகள் 3% - 4% வரையாகவும் இக்கனிப்பொருள் ஏற்றுமதியின் பிரதானமான இரத்தின கற்கள் மொத்த ஏற்றுமதியில் 2% வரையிலும் கனிப்பொருள் ஏற்றுமதியில் 8%-8.8% ஆகவும் காணப்பட்டது.

2006இல் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாய் 8.4% இனாலும் விவசாய ஏற்றுமதிகள் 12% இனாலும் கைத்தொழில் ஏற்றுமதிகள் 8.8% இனாலும் வளர்ச்சியடைந்துள்ளன.

## இலங்கையின் ஏற்றுமதி கட்டமைப்பு மாற்றம் (1997 – 2006)

ஏற்றுமதி கட்டமைப்பின் பிரதான அமைப்பு ரீதியான மாற்றமாக விவசாய பொருள் குறைவடைவதையும் கைத்தொழில் பொருள் ஏற்றுமதி அதிகரித்து வருவதையும் அவதானிக்கலாம். குறிப்பாக தேயிலைக்கு பதிலாக தைக்கப்பட்ட ஆடைகளே பிரதான ஏற்றுமதியான மாற்றடைந்துள்ளன.

விவசாய ஏற்றுமதியானது மொத்த ஏற்றுமதியில் 1997இல் 79% ஆக காணப்படும் 2005/2006இல் 18% - 19% வரையில் சடுதியாக வீழ்ச்சி அடைந்துள்ளது. 1997இல் மொத்த ஏற்றுமதிக்கு 50% இற்கு மேற்பட்ட பங்கை வழங்கிய தேயிலை தற்போது 13% வரையில் குறைவடைந்துள்ளது. குறிப்பாக பெருந்தோட்ட ஏற்றுமதிகளின்

வினைதிறன் வீழ்ச்சியடைந்தமை, கைத்தொழில் பொருட்களுக்கான ஊக்குவிப்பு அதிகரித்தமை, விவசாயபொருளின் உலக விலை வீழ்ச்சியடைந்தமை, போட்டி நாடுகளின் ஆதிக்கம் உயர்ந்தமை போன்றவற்றில் இம்மாற்றம் ஏற்பட்டன.

கைத்தொழில் பொருள் எற்றுமதியானது மொத்த ஏற்றுமதியில் 1997இல் 14% ஆக

காணப்பட்டு 2005/2006 இல் 78% ஆக மிக உயர்ந்துள்ளது. 1997இல் மொத்த ஏற்றுமதிக்கு 2% பங்கை வழங்கிய புடைவைகளும் ஆடைகளும் தற்போது 45% - 46% வரையாக காணப்படுகினறது. குறிப்பாக திறந்த பொருளாதார, கொள்கை பின்பற்றப்பட்டமை, சுதந்திர வர்த்தக வலயம், கைத்தொழில் பேட்டை உருவாக்கப்பட்டமை, ஏற்றுமதி நோக்கில் கைத்தொழில் மயமாக்கல் பின்பற்றப்பட்டமை, ஏற்றுமதி தீர்வை விலக்களிக்கப்பட்டமை, ஏற்றுமதி தரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பவற்றால் இம்மாற்றம் ஏற்பட்டன.

கனி பொருளும் ஏனைய பொருளும் ஏற்றுமதி 1977இல் 7% ஆக காணப்பட்டு இன்று 3%-4% வரையாக காணப்படுகிறது.

### இலங்கை ஏற்றுமதி கட்டமைப்பு (மொத்த ஏற்றுமதியில்)

| வகைகள் | 1977 | 1983 | 1996 | 2000 | 2001 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|
| விவசாய ஏற்றுமதி பொருள் | 79% | 58% | 23% | 18% | 23% | 18% | 19% |
| கைத்தொழில் பொருள் ஏற்றுமதி | 14% | 35% | 73% | 73% | 78% | 78% | 78% |
| கனிபொருள் ஏற்றுமதி | 07% | 07% | 07% | 04% | 03% | 04% | 0.3% |

### இறக்குமதி கட்டமைப்பு

இறக்குமதி கட்டமைப்பு என்பது குறித்த நாட்டின் மொத்த இறக்குமதியில் நுகர்வு பொருள் இறக்குமதி, இடைநிலை பொருள் இறக்குமதி, முதலீட்டு பொருள் இறக்குமதி, ஏனைய பொருள் இறக்குமதி என்பன வழங்குகின்ற பங்களிப்பு ஆகும்.

நுகர்வு பொருள் இறக்குமதியினுள் அசிரி, மா, சீனி, பால், உற்பத்தி போன்ற உணவும், குடிபானமும், வானொலி, தொலைக்காட்சி, துவிச்சக்கர வண்டி போன்றவற்றினை குறிப்பிடலாம் இதில் உணவும் ,குடிபானமும் பிரதான பங்களிப்பு கொண்டுள்ளது. அண்மைக்கால இலங்கை மொத்த இறக்குமதியில் நுகர்வு பொருள் இறக்குமதி 19%-20% காணப்படுவதுடன்

முதலீட்டு பொருள் இறக்குமதியினுள் பொறியும் கருவியும் போக்குவரத்து கருவிகள், கட்டிட பொருட்கள் என்பன உள்ளடக்குகின்றன. இதில் பொறியும் கருவியும் பிரதான பங்களிப்பினை கொண்டுள்ளது. அண்மைகால இறக்குமதி கட்டமைப்பில் முதலீட்டு பொருளின் பொறியும் கருவியும் மொத்த இறக்குமதியில் 10% - 11% ஆகவும் முதலீட்டு பொருள் இறக்குமதியில் 46%-48% வரையிலும் காணப்படுகின்றது.

### இலங்கையின் இறக்குமதி கட்டமைப்பிலான மாற்றம்

1977ம் ஆண்டு பொருளாதாரம் தாராள மயமாக்கப்பட்டதை தொடர்ந்து நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியிலிருந்து இடைநிலை மற்றும் முதலீட்டு பொருட்களின் இறக்குமதிக்கு படிப்படியாக மாறியிருக்கின்றது. இதிலிருந்து நுகர்வுப்பொருள் இறக்குமதி வீழ்ச்சியடைய இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருள் இறக்குமதி தொடர்ந்து அதிகரித்து வருவதனையும் அவதானிக்கலாம்.

நுகர்வு பொருள் இறக்குமதி 1977இல் 42% இருந்து 19% இற்கு பெருமளவில் (50% இற்கு மேல்) வீழ்ச்சி அடைந்துள்ளது. குறிப்பாக உள்நாட்டு நிரம்பலில் ஏற்பட்ட முன்னேற்றம் கோதுமை மாவிற்கு பதிலாக கோதுமைத் தானியம் இறக்குமதி செய்யப்பட்டமை தனியார் மயமாக்கலினால் சீனி உற்பத்தி அதிகரித்து சீனி உற்பத்தி குறைந்தமை போன்றவற்றினால் நுகர்வு

பொருள் இறக்குமதி குறைவடைந்துள்ளது.

இடைநிலை மற்றும் முதலீட்டு பொருளின் இறக்குமதி 1997இல் 57% ஆக(45% - 12%) காணப்பட்டு 80% - 81% ஆக மிக உயர்ந்துள்ளது. குறிப்பாக கைத்தொழில் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் இறக்குமதி தேவைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. ஆடை தயாரிப்பு கைத்தொழில் வளர்ச்சியினால் துணியின் இறக்குமதி அதிகரித்தமை, கோதுமை மாவிற்கு பதிலாக கோதுமை தானியத்தின் இறக்குமதி அதிகரித்தமை, உலக அளவில் பெற்றோலிய விலை ஏற்றம் என்பவற்றினால் இடைநிலைப் பொருளில் இறக்குமதிகளும் பொருளாதார விரிவாக்கம் மற்றும் குறைந்த வட்டி வீதி அமைப்பு என்பவற்றால் கட்டிடபொருள், போக்குவரத்து சாதனங்கள், பொறிகளும் கருவிகளும் போன்ற முதலீட்டு பொருளின் இறக்குமதிகளும் மிகவும் அதிகரித்தன.

**இலங்கை இறக்குமதி கட்டமைப்பு (மொத்த இறக்குமதியில்)**

| இறக்குமதி வகைகள் | 1977 | 1987 | 1996 | 2000 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|
| நுகர்வு பொருள் | 42% | 23% | 23% | 19% | 20% | 19% | 19% |
| இடைநிலை | 45% | 57% | 51% | 52% | 58% | 60% | 58% |
| முதலீட்டுப்பொருள் | 12% | 19% | 22% | 24% | 21% | 21% | 22% |
| ஏனையவை | 01% | 01% | 04% | 05% | 01% | 04% | 01% |

**உசாத்துணை**
மத்திய வங்கி ஆண்டறிக்கை (2005-2006

## உயரும் அலைகள்

*புவிநடுக்கம் ஏற்படும் வேளைகளில் கடற்கரைகளில் உயர்ந்து எழும் அலைகள் ஏறத்தாள 85 அடியிற்கு மேல் எழுகின்றனவாம். இதனால் புவிநடுக்கம் ஏற்படும் இடங்களிற்கு அருகிலே கடல்கள் இருக்கும் பிரதேசங்களில் பெரும் அழிவுகள் ஏற்படுகின்றன. 1771 ஆம் ஆண்டு யப்பானிய தீவுகளில் ஒன்றான ரியுகியு தீவினை அடுத்துள்ள கடற்பரப்பில் இவ்வகை அலைகள் முதன் முதலில் அவதானிக்கப்பட்டன.*

# கணக்கீட்டு விகிதங்கள் – ஒரு நோக்கு
# Accounting Ratios - A Further View



G.Latheekaran
A/L 2008- Commerce
Jaffna Hindu College

## 01. அறிமுகம் *(Introduction)*

முகாமைக் கணக்கீட்டில் முக்கியமான பகுதியே கணக்கீட்டு விகிதங்களாகும். முகாமையாளர் நிதிக் கூற்றுக்களை நேரடியாக ஒப்பிட்டு முக்கியமான தீர்மானங்களை எடுப்பதிலும் பார்க்க கணக்கீட்டு விகிதங்களை கணிப்பிட்டு இவற்றின் மூலம் தீர்மானங்களை எடுப்பது சிறந்தது எனக் கருதப்படுவதால் கணக்கீட்டு விகிதங்கள் பற்றி நோக்க வேண்டியது அவசியமாகும்.

## 02. கணக்கீட்டு விகிதமும் கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வும்

கணக்கீட்டு விகிதமும் கணக்கீட்டு விகிதப்பகுப்பாய்வும் வேறுபட்ட பதங்களாகும். கணக்கீட்டு விகிதம் என்பது நிறுவனங்களின் நிதிச் செயற்பாடுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்வதற்கு நிதிக்கூற்றுக்களிலிருந்து அல்லது ஏனைய கணக்கீட்டு தரவுகளிலிருந்து இலக்கங்கள் அல்லது தொகைகளை ஒப்பிடுவதன் மூலம் விகிதங்களை பெறுதல் ஆகும்.

கணக்கீட்டு விகிதப்பகுப்பாய்வு எனும் போது கணக்கீட்டு விகிதங்களை தொடர்புபடுத்தி நிறுவனங்களின் தொடர்புகளையும், விளைவுகளையும், விமர்சனம் செய்தல் கணக்கீட்டு விகிதப்பகுப்பாய்வு எனப்படும். கணிப்பீடு செய்யப்பட்ட கணக்கிட்டு விகிதங்களை ஒப்பிட்டு ஆய்வுக்குட்படுத்தி விகிதங்களில் இருந்து விமர்சன ரீதியான தகவல்கள் பெற முடியும்.

## 03. கணக்கீட்டு விகிதங்களை தயாரிப்பதன் அனுகூலங்கள்

1) நிறுவனங்களது இலாபத்தன்மையை திரவத்தன்மைகளின் வினைத்திறன்களை இலகுவில் புரிந்து கொள்ளும் திறன் ஏற்படல்
2) பெருந்தொகையான புள்ளிவிபரங்களை பொழிப்பாக்கி வழங்கக்கூடிய திறனும் அவற்றை எளிதாக சமர்ப்பிக்க கூடிய திறனும் ஏற்படுதல்
3) கடந்தாண்டுகளுடனும் சமமான ஏனைய நிறுவனங்களின் பெறுபேறுகளுடன் ஒப்பிடக் கூடிய திறன் ஏற்படுதல்
4) நிறுவனத்தின் போக்கினை எளிதாகப் புரிந்து கொள்ளும் திறன் ஏற்படல்
5) எளிதாகவும் விரைவாகவும் தீர்மானங்கள் முடிவுகள் ஏற்படுவதற்கு உதவுதல்
6) எதிர்கால திட்டங்களை மேற்கொள்வதற்கு பயனுள்ள தகவல்களை வழங்குதல்

## 04. விகிதப்பகுப்பாய்வின் வரையறைகள்

1) கணக்கீட்டு கொள்கைகள் நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடல்
2) விலைமட்ட மாற்றல் பற்றிய பிரச்சினைகள்
3) நியாயமான நிலையான அமைப்புக்கள் காணப்படாமை
4) சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை நிதிக்கூற்றுக்கள் கவனத்தில் கொள்ளாமையால் அதனை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்படும் விகிதங்களில் இருந்து எதிர்பார்த்த பலனை அடைய முடியாது.

## 05. கணக்கீட்டு விகித அமைப்பு

கணக்கீட்டு விகிதங்களை பின்வரும் ஏதாவது ஒரு அமைப்பில் வெளிப்படுத்தப்படலாம்.

1) நூற்றுவீத வடிவம் : உ - ம் மொத்தலாபமானது விற்பனையில் 25% ஆகும்.
2) விகித வடிவம் : உ-ம் நடைமுறைச்சொத்தானது நடைமுறைப்பொறுப்பிலும் இருமடங்காகும் அதாவது 2:1 ஆகும்.
3) தடவை : உ-ம் இரும்பு சுழற்சி விகிதம் ஓர் ஆண்டுக்கு 03 தடவையாகும்.

## 06. கணக்கீட்டு விகிதங்களின் வகைப்பாடு

1) திரவத்தன்மை விகிதங்கள்
2) இலாபத்தன்மை விகிதங்கள்
3) செயற்பாட்டு விகிதங்கள்
4) இணைப்பு விகிதங்கள்
5. முதலீட்டு விகிதங்கள்

### 6.1 திரவத்தன்மை விகிதங்கள்

நிறுவனங்களின் குறுங்காலக் கடன் தீர்க்கும் ஆற்றலை அளவீடு செய்வதற்கு இரு வகையான விகிதங்கள்பயன்படுத்தப்படுகின்றன. அவை

1) நடைமுறை விகிதம்
2) விரைவு விகிதம்

### 1) நடப்பு விகிதம் / தொழிற்படுவிகிதம்

இது நடப்புச் சொத்துக்கும் நடப்பு பரிப்புக்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்தும் இதனை பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\text{நடப்பு விகிதம்} = \frac{\text{நடப்புசொத்து}}{\text{நடப்பு பொறுப்பு}}$$

நடப்புவிகிதம் 2:1 அமைப்பில் காணப்படுதல் சிறப்பானதாகும்.

### 2) திரவ விகிதம் / விரைவு விகிதம்

இவ்விகிதம் திரவச் சொத்துக்களுக்கும் நடைமுறைப் பரிப்புக்களுக்கும் இடையிலான தொடர்பை புலப்படுத்தும். இதனை பின்வருமாறு கணிப்பிடலாம்.

(திரவச்சொத்து = நடப்புச்சொத்து - (இருப்பு + முற்பண செலவு)

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{திரவச்சொத்துக்கள்}}{\text{நடைமுறைப் பகிப்புக்கள்}}$$

பொதுவாக இவ்விகிதம் 1:1 என இருப்பதே சிறப்பானதாகும். எனினும் இத்தன்மையானது தொழிலின் தன்மையை கருத்தில் கொண்டே பொருத்தமானது அல்லது பொருத்தமற்றது என்ற முடிவுக்கு வரமுடியும்.

**உதாரணம்**

கடன்பட்டோர் - 40,000
இருப்பு - 20,000
முற்பணச்செலவு - 20,000
சென்மதிச்செலவு - 15000
கடன்கொடுத்தோர் - 25000

$$\text{நடப்பு விகிதம்} = \frac{80000}{40000}$$

2:1 ஆகும்

$$\text{திரவ விகிதம்} = \frac{40000}{40000}$$

$$= 1:1$$

### 6.2) இலாபத்தன்மை விகிதங்கள்

i) $\text{மொத்தலாப விகிதம்} = \frac{\text{மொத்தலாபம்}}{\text{விற்பனை}} \times 100$

ii) $\text{தேறியலாப விகிதம்} = \frac{\text{தேறியலாபம்}}{\text{விற்பனை}} \times 100$

iii) ஈடுபடுத்தியமுதலுக்கு / உபயோகித்த முதலுக்கு வருவாய் விகிதம் (ROCE)

$$ROCE = \frac{\text{இலாபம்}}{\text{ஈடுபடுத்தியமுதல்}} \times 100$$

ஈடுபடுத்திய மூலதனம் என்பது பின்வருமாறு இனங் காட்டப்படுகின்றது.

அ) மொத்த முதலுக்கு வருவாய் வீதம் / மொத்தச் சொத்துக்கு வருவாய் விகிதம்

$$\text{மொ. முதலுக்கான வருவாய் விகிதம்} = \frac{\text{வரி வீட்டிற்கு முன் இலாபம்}}{\text{மொத்த முதல்}} \times 100\%$$

(மொத்த முதல் = பங்குமுதல் + ஒதுக்கம்+ நீண்டகால கடன் + நடைமுறைப்பரிப்பு)

ஆ) நீண்டகால முதலுக்கான வருவாய் வீதம் = $\dfrac{\text{வரி, நீண்டகாலத்துடன், வட்டிக்கு முன்இலாபம்}}{\text{நீண்ட காலமுதல்}} \times 100\%$

(நீண்டகால முதல் = மொத்த முதல் - நடைமுறைப்பொறுப்பு)

இ) பங்கு முதலுக்கான வருவாய் வீதம்
பங்கு முதலுக்கு

வருவாய் விகிதம் = $\dfrac{\text{வரிக்குபின் தேறியலாபம்}}{\text{பங்கு முதல்}}$

(பங்குமுதல் = மொத்தப் பங்கு முதல் + ஒதுக்கங்கள்)

ஈ) பங்குதாரர் உரிமை முதலுக்கு வருவாய் விகிதம் = $\dfrac{\text{வரிக்கு பின்இலாபம் - முன்னுரிமை / பங்குலாபம்}}{\text{உரிமை முதல்}}$

(உரிமை முதல் = சாதாரண பங்குமுதல் + ஒதுக்கங்கள்)

**உதாரணம்**

இந்து மைந்தன் கம்பனியின் 31.12.2007இல் உள்ளபடியான ஐந்தொகை

| பரிப்புக்கள் | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|
| @10/-வான சா/பங்கு | 300,000 | நிலையான சொத்து | 500,000 |
| @10/-வான 10%மு/ப | 100,000 | நடைமுறைச்சொத்து | 250,000 |
| ஒதுக்கம் | 50,000 | | |
| நடைமுறைப்பரிப்பு | 200000 | | |
| | 750,000 | | 750,000 |

**மேலதிக தகவல்கள்**

| | |
|---|---|
| வரிக்கு முன் இலாபம் | 120,000 |
| வருமான வரி | (40,000) |
| வரிக்குபின்இலாபம் | 80,000 |

1) மொத்த முதல் வருவாய் வீதம் $= \dfrac{80000 + 40000 + 10000}{750,000} \times 100 = 17.3$

2) நீண்டகால முதல் வருவாய் வீதம் $= \dfrac{30,000}{550,000} \times 100 = 23.63$

3) பங்கு முதல் வருவாய் விகிதம் $= \dfrac{80000}{450000} \times 100$

$= 17.7\%$

4) உரிமமுதல் மீதான வருவாய் வீதம் $= \dfrac{70,000}{350,000} \times 100$

$= 20\%$

**(3) செயற்பாட்டு விகிதங்கள்**

இது பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

i) சொத்து புரள்வு விகிதம்

ii) தொழிற்படு முதல் புரள்வு விகிதம்

iii) இருப்பு புரள்வு விகிதம் / சுழற்சி விகிதம்

**(i) சொத்து புரள்வு விகிதம்**

அ) மொத்த சொத்து புரள்வு விகிதம் = $\frac{\text{தேறிய விற்பனை}}{\text{மொத்த சொத்து}}$

ஆ) தேறிய சொத்து புரள்வு விகிதம் = $\frac{\text{தேறிய விற்பனை}}{\text{நிலையான சொத்து}}$

இ) நிலையான சொத்து புரள்வு விகிதம் = $\frac{\text{தேறிய விற்பனை}}{\text{நிலையான சொத்து}}$

ஈ) நடப்பு சொத்து புரள்வு விகிதம் = $\frac{\text{தேறிய விற்பனை}}{\text{நடமுறைச் சொத்து}}$

உ) திரவச்சொத்து புரள்வு விகிதம் = $\frac{\text{தேறிய விற்பனை}}{\text{திரவச் சொத்து}}$

**(ii) தொழிற்படு முதல் புரள்வு விகிதம்**

தொழிற்படு முதல் புரள்வு விகிதம் = $\frac{\text{தேறிய விற்பனை}}{\text{தொழிற்படுதல்}}$

**iii) இருப்பு புரள்வு விகிதம்**

1) விற்பனைக்கு கையிருப்பு விகிதம்

இது விற்பனைச் செயற்திறனுக்கும் சராசரி இருப்புக்கும் இடையிலான தொடர்பை புலப்படுத்தும். இருப்பு புரள்வு விகிதம் அதிகமாக இருப்பின் வியாபார இருப்பு மிக வேகமாக விற்பனை ஆகின்றது. எனக் கருதப்படும். இது வருடத்திற்கு ஆகக் குறைந்தது 06தடவையாக வேனும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புரள்வு விகிதம் = $\frac{\text{விற்ற சரக்கின் கிரயம்}}{\text{சராசரி இருப்பு}}$

சராசரி இருப்பு = $\frac{\text{ஆரம்ப இருப்பு} + \text{இறுதி பரிப்பு}}{2}$

2) இருப்பு சுழற்சி / தவணைக்காலம்

சுழற்சிக்காலம் = $\frac{\text{வியாபாரநாட்கள்}}{\text{இருப்பு புரள்வுவிகிதம்}}$ அல்லது $\frac{\text{சராசரி இருப்பு}}{\text{விற்பனைக்கிரயம்}} \times 365$

3) கடன்பட்டோர் புரள்வுவிகிதம் / கடன்பட்டோர் சுழற்சி விகிதம்

கடன்பட்டோரிடம் எத்தனை தடவைகள் பணம் பெறப்பட்டது என்பதையும் கடன்பட்டோர் நாணயத்தன்மையையும் அறிய உதவும் இவ்விகிதம் உயர்வாக இருப்பின் நிறுவனத்தின் கடன்கட்டுப்பாடு வினைத்திறனாக நிகழ்கின்றது எனக் கருதலாம்.

கடன்பட்டோர் புரள்வு விகிதம் = $\frac{\text{கடன்விற்பனை}}{\text{சராசரி கடன்பட்டோர்}}$

சராசரி கடன்பட்டோரா = $\frac{\text{ஆரம்பகடன்பட்டோர்} + \text{இறுதி கடன்பட்டோர்}}{2}$

4) கடன்பட்டோர் வசூலிப்பு காலம் / சராசரி கடன் சேகரிப்பு காலம்
எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை பணம் பெறப்பட்டது என்பதைக் காட்டும் விகிதமே சராசரிகடன் சேகரிப்பு காலம் ஆகும்

$$\text{சராசரி கடன் சேகரிப்பு காலம்} = \frac{\text{சராசரி கடன்பட்டோர்}}{\text{கடன் விற்பனை}} \times \text{காலம் } \frac{365}{12}$$

or

$$\text{சராசரி கடன் சேகரிப்பு காலம்} = \frac{\text{காலம்}}{\text{கடன் பட்டோர் சுழற்சி விகிதம்}}$$

**குறிப்பு:- இவ்விகிதத்தின் மூலம் பணம் வசூலிக்கும் காலத்தினை திட்டமிட முடியும்.**

உ+ம் 2007ம் ஆண்டின் ஆரம்ப கடன்பட்டோர் - ரூ 5000
இறுதிக் கடன் பட்டோர் - ரூ 3000
விற்பனை - ரூ 24000

(A) கடன்பட்டோர் சுழற்சி காலம் $= \frac{24000}{4000}$
= 6தடவைகள்

B) கடன்பட்டோர் சேகரிப்பு காலம் $= \frac{365}{6}$
= 60.8 நாட்கள்

(V) இணைப்பு விகிதங்கள்
i) கடன், உரிமை மூலதன விகிதம்
ii) கடன். மொத்த மூலதன விகிதம்

$$\text{கடன் உரிமை மூலதன விகிதம்} = \frac{\text{நிலையான வட்டி பெறும் கடன்மூலதனம்}}{\text{உரிமைமூலதனம்}}$$

உரிமை முதல் = சாதாரண பங்கு + ஒதுக்கங்கள்

$$\text{கடன் மொத்த மூலதன விகிதம்} = \frac{\text{நிலையான வட்டி பெறும் கடன் மூலதனம்}}{\text{மொத்த மூலதனம்}} \times 100$$

(மொத்த மூலதனம் = கடன் மூலதனம் + உரிமை மூலதனம்)

**உசாத்துணை நூல்**
*Business Accounting - Frank Wood*

**எனது – உனது – சிறியது – பெரியது – எம்முடையது அவர்களுடையது.... இந்த சிந்தனையை உன் மனதில் இருந்து முற்றாக அகற்று. அதன் பின்பே எல்லாம் உன்னுடையதாகவும் நீயே எல்லோருடையதாகவும் காட்சி தரும்.**

# முகாமைக் கணக்கீட்டில் முதலீட்டுத் தீர்மானமெடுத்தல் / செயற்திட்ட மதிப்பாய்வு
# Project Appraisal



L. Gowrithan
A/L 2008 Commerce
Jaffna Hindu College

## I. அறிமுகம் *(Introduction)*

அதிகரித்து வரும் இன்றைய போட்டி உலகில் ஒவ்வொரு நிறுவனங்களும் அதிகளவான இலாபத்தை உழைப்பதற்கு உந்தப்படுகின்றன. அந்த வகையில் ஒரு நிறுவனம் அல்லது தனிநபர் தன்னிடம் உள்ள நிதியினை பயன்தரக்கூடிய திட்டத்தில் ஈடுபடுத்துவதனை முதலீடு என்பது குறிக்கும். இம் முதலீட்டைத் தீர்மானிக்கும் போது பல்வேறுபட்ட காரணிகள் அதில் செல்வாக்கு செலுத்த முடியும். எனவே நிறுவனங்கள் முதலீட்டைத் தெரிவு செய்யும் போது பின்வரும் இரு முதற்தர காரணிகளை கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

1) வருமானம் **(Return)**

2) பாதுகாப்பு **(Safty)**

இம்முதலீட்டு மதிப்பாய்வு தனியே வருமானத்தை அடிப்படையாக கொண்டே தெளிவினை மேற்கொள்கிறது. அதாவது அதிக வருமானத்தைத் தரக்கூடிய முதலீட்டிற்கு பாதுகாப்பு குறைவாகவும் கூடிய பாதுகாப்பு குறைவாகவும் காணப்படுகின்றது. இம்மூலதனச் செலவுகள் மிகப்பெரும் செலவினை நிர்வகிப்பதாக அமைவதுடன் மூலதனம் செலவு சம்பந்தமான முடிவுகளில் நிறுவனத்திற்கு இலாபகமான முடிவுகளை நோக்கி தனது செயற்திட்ட தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு இந்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

## II. செயற்திட்ட மதிப்பாய்வு முறைகள்

செயற்திட்ட மதிப்பாய்வு முறைகள் அல்லது மூலதன மதிப்பாய்வு முறைகளாக பின்வரும் முறைகளை குறிப்பிடலாம்.

1) திரும்ப அளித்தல் காலமுறை (Pay back period)
2) கணக்கீட்டு வருவாய்வீதம் (Accounting rate of return)
3) கழிவு செய்யப்பட்ட காசோட்ட முறை (D.C.F)
   a) கழிவு செய்யப்பட்ட திரும்ப அளித்தல் காலம்
   b) தேறிய இன்றைய பெறுமதி (N.P.V)
   c) உள்ளக வருவாய் வீதம் (IRR)

4) இலாபகரமான சுட்டெண்

### திரும்ப அளித்தல் காலமுறை

இம்முறையின் கீழ் நிறுவனம் ஒன்று செயற்திட்டம் ஒன்றில் ஈடுபடுத்தப்பட்ட முதலை எவ்வளவு காலத்தில் திரும்ப பெறுகிறதோ அதனையே திரும்ப அளித்தல் காலம் என்பர். அதாவது வருடாந்த வருமானத்தின் மூலம் ஆரம்ப முதலீட்டினை ஈடு செய்யக் கூடிய காலத்தை குறிக்கும்.

**உ+ம்)** 1) யாழ் நிறுவனம் பின்வரும் இரு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்து கின்றது. அவை வருமாறு.

| செயற்திட்டம் | A | B |
|---|---|---|
| ஆரம்பமுதலீடு | (100000) | (150,000) |
| ஆண்டு - 01 | 20,000 | 30,000 |
| ஆண்டு - 02 | 30,000 | 50,000 |
| ஆண்டு - 03 | 50,000 | 40,000 |
| ஆண்டு - 04 | 10,000 | 60,000 |

**வேண்டப்படுவது:-** திரும்ப அளித்தல் காலமுறையில் மேற்தரப்பட்ட இரு செயற் திட்டங்களையும் மதிப்பாய்வு செய்க.

**தீர்வு-** 1) செயற்திட்டம் Aயில் ஆரம்ப முதலீட்டுத் தொகையை 03 வருடங்களில் திரும்ப பெறக்கூடியதாக இருப்பதால் Aயின் திரும்ப அளித்தல் காலம் 03 வருடங்களாகும்.

2) செயற்திட்டம் Bயில் முதல் மூன்று வருடங்களில் ரூ 120,000 ஈடு செய்ய முடியும். மிகுதி ரூ30000ஐ (150000-120000) பின்வருமாறு கணிப்பிட முடியும்

$$\frac{30000}{60000} \times 12 = 6 \text{ மாதங்கள்}$$

எனவே திரும்ப அளித்தல் காலம் மூன்று வருடமும் 06 மாதங்களும் ஆகும்.

## கணக்கீட்டு வருவாய் வீதம் *(ARR)*

கணக்கீட்டு வருவாய் வீதம் என்பது முதலீட்டுத் திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானங்களின் சராசரியினை முதலீட்டின் சதவீதமாக கணிப்பீடு செய்வதன் மூலம் கிடைக்கப்பெறும் முடிவுகளின் அடிப்படையில் முதலீட்டுத்தெரிவு இடம்பெறுமாயின் அது ARR முறை எனப்படும். ARR பின்வருமாறு கணிப்பிடலாம்.

## திரும்ப அளித்தல் கால முறையின் நன்மைகள்

1) உயர்வான நிச்சயத்தன்மையற்ற செயற்திட்டங்களுக்கு இம்முறை நன்மையளிப்பதாக அமையும். அதாவது அரசியல் ஸ்திரமின்மை, துரிதமான, தொழில்நுட்ப முன்னேற்றம், மலிவான பிரதியீடுகள் காணப்படுகின்ற நிலமையினை உதாரணமாகக் கூறிக்கொள்ள முடியும்.
2) விளங்கிக் கொள்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் இலகுவான முறையாக இது உள்ளது.
3) குறைவான ஆபத்துடைய விரைவான செயற்திட்டங்களை இதன்மூலம் நடைமுறைப்படுத்தலாம்.
4) இம்முறை இலாப நட்டமற்ற புள்ளியை தெளிவாக வரையறை செய்வதால் புதிய எம் பணிகள் இலாபத்தை பகிர்ந்து கொடுக்கும் காலப்பகுதியை அறியலாம்.

## திரும்ப அளித்தல் காலமுறையின் தீமைகள்

1) இம்முறை இலாபநட்டமற்ற புள்ளிக்கு அப்பால் உழைக்கக் கூடிய வருமானத்தினை கவனத்திற் கொள்ளவில்லை.

2) இம்முறை பணத்தின் காலப்பெறுமதியை கருத்திற் கொள்ளவில்லை. உதாரணமாக இன்று பெற்றுக் கொள்ளப்படும் ஒரு ரூபாவை விட நாளை பெற்றுக் கொள்ளப்படும் ஒரு ரூபா ஒன்றின் பெறுமதி குறைவானதாகும்.

$$ARR = \frac{\text{சராசரி இலாபம்}}{\text{சராசரி முதலீடு}} \times 100$$

$$\text{சராசரி முதலீடு} = \frac{\text{ஆரம்ப முதலீடு} + \text{இறுதி முதலீடு}}{2}$$

Eg:- 2) இந்து நிறுவனம் பின்வரும் இரு செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்துகிறது.

| விபரம் | A | B |
|---|---|---|
| ஆரம்ப முதலீடு | 10000 | 30000 |
| ஆயுட்காலம்(வருடங்கள்) | 10 | 12 |
| ஆண்டுக்கான இலாபம் | 2000 | 5000 |

**வேண்டப்படுவது** :- சராசரி முதலீடு மீதான கணக்கீட்டு வருவாய் வீதம்

$$= \frac{\text{சராசரி இலாபம்}}{\text{சராசரி முதலீடு}} \times 100$$

$$= \frac{2000}{5000}$$

$$= 40\%$$

சராசரி முதலீடு மீதான கணக்கீட்டு வருவாய்வீதம் $= \frac{5000}{15000}$

$$= 33.3\%$$

$$[\text{(சராசரி முதலீடு)} = \frac{10000+\ 0}{2} = 5000(A)]$$

**தீர்வு:-** இங்கு செயற்திட்டம் Aயில் வருவாய் வீதம் அதிகமாக இருப்பதால் Aia தெரிவு செய்வது சிறப்பானதாகும்.

## கழிவு செய்யப்பட்ட காசோட்டமுறை

முதலீட்டுத் தீர்மானமெடுத்தல் நுட்பங்களில் தற்காலத்தில் அதிகளவு நிறுவனங்கள் பின்பற்றும்

நவீனத்துவ முறைகளே கழிவிடப்பட்ட காசோட்ட முறைகளாகும். கழிவிடப்பட்ட காசோட்ட முறைகளை பின்வருமாறு நோக்க முடியும்.

## கழிவு செய்யப்பட்ட திரும்ப அளித்தல் காலம்

இம்முறையில் நிறுவனங்கள் வருடாந்த காசு உட்பாய்ச்சல்களை கழிவு காரணியை அடிப்படையாக கொண்டு கழிவிடப்பட்டகாசு உட்பாய்ச்சல்களை அடிப்படையாக கொண்டு திரும்ப அளித்தல் காலம் கணிப்பிடப்படும்.

## தேறிய இன்றைய பெறுமதி *(NPV)*

கழிவிடப்பட்ட காசோட்ட முறையில் ஒரு முதலீட்டினை மேற்கொள்வது சிறந்ததா என்பது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு பின்பற்றப்படும் நுட்பமே தேறிய இன்றைய பெறுமதியாகும்.

NPV ஆனது எதிர்கால தேறிய காசோட்டத்தை கம்பனியின் மூலதன செலவில் கழிவு செய்வதன் மூலம் பெறப்படுகின்ற பெறுமதியில் இருந்து ஆரம்ப முதலீட்டினை கழிக்க வருவதாகும். இதனை வேறுவிதமாக கூறுவதாயின் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் காசு உள்ளோட்டங்களினதும் காசு வெளியோட்டங்களினதும் இற்றைப் பெறுமதியின் தேறிய தொகை ஆகும்.

NPV நேர்க்கணியமாக இருப்பின் குறிப்பிட்ட செயற்திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியும். NPVஎதிர்க்கணியமாக இருப்பின் குறிப்பிட்ட செயற்திட்டம் எதிர்பார்த்த வருமானத்தை தராது எனவே முடியாது. NPVபூச்சியமாக இருப்பின் அம்முதலீட்டிலிருந்து முதலீட்டினை மட்டுமே திரும்ப பெறமுடியும். என்ற முடிவுக்கு வரமுடியும்.

**உ+ ம்**

A Ltd இன் மூலதன கிரயம் 15% ஆகும். இந்நிறுவனத்தின் செயற்திட்டம் தொடர்பாக மதிப்பாய்வு மேற்கொள்ள விரும்புகிறது. இத்திட்டத்தின் மூலதனம் செலவு ரூ100000ஆகவும் ஆயுட்காலம் 04வருடங்களாகும். காசோட்டங்கள் பின்வருமாறு

| ஆண்டு | காசோட்டங்கள் | 15% கழிவுகாரணி |
|---|---|---|
| y1 | 60,000 | 0.870 |
| y2 | 50,000 | 0.756 |
| y3 | 20,000 | 0.658 |
| y4 | 40,000 | 0.572 |

**வேண்டப்படுவது:-** தேறிய இற்றைப் பெறுமதி நுட்பத்தை பயன்படுத்தி இம் முதலீட்டுத் திட்டத்தை ஏற்கலாமா இல்லையா என காரணங் களுடன் தருக.

**விடை**

| ஆண்டு | காசோட்டம் | 15%கழிவு காரணி | கழிவிடப்பட்ட காசோட்டம் |
|---|---|---|---|
| 0 | (100@000) | 1 | (100,000) |
| 1 | 60,000 | 0.870 | 52,200 |
| 2 | 50,000 | 0.756 | 37,800 |
| 3 | 20,000 | 0.658 | 13,160 |
| 4 | 40,000 | 0.572 | 22,880 |
| | | NPV | +26,040 |

தீர்வு:- இறுதி முதலீடு **NPV Mf +** 26040ஆக காட்டுகிறது. இங்கு நிறுவனம் **15%** எதிர்பார்த்த வீதத்திலும் பார்க்க 26040 ரூபாவை மேலதிக வருமானமாக உழைக்கிறது. எனவே நிறுவனம் இம்முதலீட்டில் முதலிடுவது இலாப கரமானதாகும்.

## உள்ளக வருவாய் வீதம் அகத்திரும்பல் வீதம் (IRR)

ஒரு செயற்திட்டத்தில் எதிர்கால தேறிய காசோட்டங்களை குறிப்பிட்ட கழிவு வீதத்தில் கழிவு செய்யும் போது பெறப்படுகின்ற தொகை ஆரம்ப முதலீட்டுத் தொகைக்கு சமனாக இருப்பின் அக் குறிப்பிட்ட கழிவு வீதத்தை உள்ளக வருவாய் வீதம் என்பர். அதாவது ஒரு செய்த்திட்டத்தினை தேசிய காசோட்டத்தில் குறிப்பிட்ட கழிவு வீதத்தில் கழிவு செய்யும் போது தேறிய இன்றைய பெறுமதி O ஆக வருமாயின் அக்கழிவு வீதத்தை IRR என்பர்.

IRR ஐ பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிட முடியும்.

$$IRR \quad A + \left( \frac{C}{C-D} \times (B-A) \right)$$

A = நேர்க்கணிய NPV ஐ தரும் கழிவு வீதம்
B= எதிர்கணிய NPV ஐ தரும் கழிவு வீதம்
C= நேர்க்கணிய NPV
D= எதிர்க்கணிய NPV

உ+ம் பிறைற்மன்கம்பனி ஒரு புதிய செயற்திட்டம் ஒன்றின் முதலீடு செய்ய விரும்புகிறது. இச் செயற்திட்டம் தொடர்பான தகவல்கள் வருமாறு:

| | |
|---|---|
| ஆரம்ப முதலீடு | ரூ 300000 |
| ஆயுட்காலம் | 05வருடங்கள் |
| வருடாந்த தேறிய காசோட்டம் | ரூ 100,00 |
| எதிர்பார்க்கப்பட்ட வருமான வீதம் | 16% |

**வேண்டப்படுவது:-** உள்ளக வருவாய் வீத அடிப்படையில் இம் முதலீட்டை மதிப்பாய்வு செய்க.

| ஆண்டு | தேறிய காசோட்டம் | 16% கழிவு காரணிவீதம் | கழிவுசெய்த காசோட்டம் | 20% காரணிவீதம் | கழிவுசெய்த காசோட்டங்கள் |
|---|---|---|---|---|---|
| y0 | (300000) | 1 | (300000) | 1 | (300000) |
| y1 | 100000 | 0.862 | 86200 | 0.833 | 83300 |
| y2 | 100000 | 0.743 | 74300 | 0.694 | 69400 |
| y3 | 100000 | 0.641 | 64100 | 0.579 | 57900 |
| y4 | 100000 | 0.552 | 55200 | 0.482 | 48200 |
| y5 | 100000 | 0.476 | 47600 | 0.402 | 40200 |
| | | | +27400 | | ·1000 |

(**Note:** இங்கு கழிவு காரணிவீதம் 16% தரவாகும். 20% கழிவுக்காரணிவீதம் எதிர்க்கணிய NPVI தரும் கழிவு வீதமாக எடுக்கப்பட்டுள்ளது.)

$$IRR = A + \left( \frac{C}{C-D} (B - A) \right)$$

$$= 16 + \left( \frac{27400}{27400-(1000)} \times (20-16) \right)$$

$$= 16 + \frac{27400 \times 4}{27400}$$

$$= 16 + 3.86 = 19.86\%$$

**தீர்வு:-** இங்கு IRR 19.86% தை காட்டுகிறது. எதிர்பாக்கப்பட வருவாய் வீதம் 16%தை விட இங்கு 3.86% மேலதிகமாக காட்டுகிறது எனவே இம்முதலீட்டை தெரிவு செய்வது சிறப்பாகும்.

**இலாபகரமான சுட்டெண்கள்**

நவீனத்துவ காசோட்ட மறைகளில் இறுதியானதே இலாபகரமான சுட்டெண்கள் ஆகும். இங்கு சுட்டெண்கள் குறிப்பிடப்பட்டு அதன் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**முடிவுரை**

மேற்தரப்பட்ட செயற்திட்ட மதிப்பாய்வு முறைகளை நோக்கும் போது முகாமைக் கணக்கீட்டில் முகாமையாளர் தீர்மானங்ககள் மேற்கொள்வதற்கு செய்திட்ட மதிப்பாய்வு என்பத இன்றியமையாதது என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது.

**உசாத்துணை** 1)Costing - by - Lucey, 2) Management Accounting

*கூண்டுக்குள்ளே குறுகி விடாது விசும்பிக் கொண்டு விண்ணெழும் போது தான் ஆகாயம் மகிழ்ந்து அகலமாகிறது.*

*எந்த விஷயத்தையும் முதன் முதலாக நீ ஆரம்பிக்காதே...........*

*முட்கள் நிறைந்த பாதையில் முதலில் செல்பவனுக்கு ஆபத்து அதிகம். அதனால் நீ மூன்றாவதாகவோ நான்காவதாகவோ செல்.*

*அப்பொது பாதை ஓரளவு முட்கள் இல்லாமல் இருக்கும்.*

# எல்லைக் கிரயவியல் (Marginal Costing)



M. Sarithas
A/L 2008 Commerce
Jaffna Hindu College



## அறிமுகம்

எல்லைக்கிரயவியல் என்பது நிலையான கிரயத்தையும் மாறும் கிரயத்தையும் வேறுபடுத்துகின்ற ஒரு நுட்பமாகும். மாறும் கிரயமானது கிரய அலகுகளுக்கு தாக்கல் செய்யப்படுகின்றது. நிலையான கிரயம் முழுவதும் ஒவ்வொரு காலப் பகுதியிலும் பதிவளிக்கப்படுகின்றது. இவ் எல்லைக் கிரயவியல் தத்துவம் குறுங்காலத் தீர்மானம் எடுத்தலுக்கு உதவுகின்ற ஒரு நுட்பமாகும். எல்லைக்கிரயவியல் விற்பனை விலையிலிருந்து மாறும் கிரயம் கழிக்கப்பட்டு பெறப்படும் பங்களிப்பின் அடிப்படையிலேயே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## எல்லைக்கிரய கணக்கீட்டின் முக்கியமான பண்புகள்

1) எல்லைக் கிரய கணிப்பீடு ஒருதொழில் நுட்பம் அல்லது கிரய கணிப்புச் செயல்முறை. இது ஏனைய வேலைக்கிரய கணக்கீடு. செயல்கிரய கணக்கீடுகளுடன் கூட்டாகப் பயன்படுத்தப்படும்.

2) ஒவ்வொரு கட்டத்திலும் நிலையான மாறும் கிரயங்கள் வேறுவேறாக வைக்கப்படும். ஓரளவு மாறும் கிரயங்கள் கூட நிலையான கிரயங்களிலிருந்து வேறாக்கப்படும்.

3) நிலையான செலவு ஒரு காலத்திற்குரிய செலவாகும். அது உற்பத்தி கிரயத்திலும், விற்பனை கிரயத்திலும். உள்ளடக்கப்படுவதில்லை. மாறும்

கிரயம் மட்டுமே. எல்லைக் கிரயத்தில் கருத்தில் கொள்ளப்படும்.

4) முடிவுப் பொருளையும் நடைமுறை வேலையையும் மதிப்பிடும் போதும் மாறும் கிரயம் மட்டுமே கணக்கீட்டிற்கு எடுத்து கொள்ளப்படும்.

5) நிலையான கிரயம், இலாபம் அல்லது நட்டம் ஏற்பட்டால் மட்டும் தாக்கஞ் செய்யப்படும் அது குறித்த காலத்திற்குரிய கிரயமாகும். அவை அடுத்த வருட இலாபத்திற்கு மீதி கீழ் கொண்டு செல்லப்படுவதில்லை.

6) எல்லை வருமானம் அல்லது எல்லை உதவுதொகை வருமானம் அல்லது இலாபமாக இனங்காணப்படும்.

7) உதவுதொகைக்கும் நிலையான கிரயத்திற்குமிடையிலான வித்தியாசம் தேறிய இலாபம் / நட்டமாகும்.

8) நிலையான கிரயம் குறித்த மட்டச் செயற்பாடு வரை மாறாது நிலையானதாக இருக்கும்.

9) விற்பனை விலையும் ஒரு அலகுக்கான கிரயமும் அது வரை மாறாதிருக்கும்

10) வேறுபட்ட மட்டச் செயற்பாடுகளிலான இலாபத் தன்மையை கிரயம் அளவு - இலாபம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பு வெளிப்படுத்தும்.

## நிலையான கிரயம் *(Fixed Cost)*

பொருத்தமான அளவெல்லை வரை உற்பத்தி தொகைக்கேற்ப மாற்றமடையாத கிரயம் நிலையான கிரயம் எனப்பட்டது. நிலையான கிரயம் காலத்துடன் தொடர்புடையது என்பதால் காலக்கிரயம் எனவும் அழைக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட நடவடிக்கை மட்டத்துள் மொத்த நிலையான கிரயமானது மாற்றமடையாது இருக்கும். என்பதுடன் குறிப்பிட்ட நடவடிக்கை மட்டத்துள் அலகொன்றுக்கான நிலையான கிரயமானது நடவடிக்கை மட்டம் அதிகரிக்கும் போது குறைவடையும்.

## மாறும் கிரயம் *(Variable Cost)*

உற்பத்தி தொகைக்கேற்ப நேரடியாக மாறுபட்ட கிரயம் மாறும் கிரயம் எனப்படும் நடவடிக்கை மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மொத்த மாறும் கிரயமானது விகிதாசாரமாக மாற்றமடையும் என்பதுடன் நடவடிக்கை மட்டத்தில் மாற்றம் ஏற்படினும் அலகொன்றுக்கான மாறும் கிரயமானது மாறாதிருக்கும்.


## அலகிற்கான பங்களிப்பு / உதவு தொகை *(Contribution per unit)*

விற்பனை விலைக்கும் எல்லைக்கிரயத்திற்குமிடையிலான வேறுபாடே பங்களிப்பு ஆகும்.


அலகொன்றுக்கான விற்பனை விலையிலிருந்து அலகொன்றுக்கான எல்லைக்கிரயத்தை கழிக்க வருவதே அலகொன்றுக்கான பங்களிப்பு / அலகொன்றுக்கான உதவு தொகை ஆகும். எல்லைக் கிரயம் எனப்படுவது. நேர் மூலப்பொருள், நேர்க்கூலி, நேர்பிறசெலவுகள், மாறும் மேந்தலைகள் என்பவற்றைக் கொண்ட மாறும் கிரயமாகும்.

மொத்த பங்களிப்பு எனப்படுவது அலகொன்றுக்கான பங்களிப்பை மொத்த அலகுகளால் பெருக்க வருவதாகும். மொத்தப் பங்களிப்பிலிருந்து நிலையான கிரயத்தை ஈடுசெய்த பின்னர் மீதியாக இருப்பது இலாபமாகும்.

**உள்ளீர்ப்புக் கிரயக்கணக்கீட்டில்**




**எல்லைக்கிரயக்கணக் கீட்டில்**



## எல்லைக் கிரயகணக்கீட்டின் அனுகூலங்கள்

1) குறுங்கால தீர்மானங்களை மேற்கொள்ளத் தேவையான தகவல்கள் கிடைக்கின்றன. மாறும்கிரயம், நிலையான கிரயம், கிரய அளவு இலாபப் பகுப்பாய்வு மூலம் உருவாகும் பங்களிப்பு என்பன சிறப்பான குறுங்கால தீர்மானங்களுக்கு உதவுகின்றன.

2) வருமானக்கூற்று தயாரிப்பதில் எல்லைக்கிரய கணக்கீட்டின் அடிப்படை எளிமையானது இலகுவானது.

3) பொய்யான இலாப நட்டங்களைத் தவிர்க்கும் உதாரணமாக நிலையான செலவு உற்பத்தி அலகின் அடிப்படையிலன்றி காலத்தின் அடிப்படையில் பகிரப்படுவதால் குறித்த காலத்திலே உற்பத்திக்கான நிலையான செலவு பகிரப்படுவது நியாயமானதாகும்.

4) உற்பத்திப் பண்டங்களில் உற்பத்திக்காக தெரிவு மேற்கொள்ள முடியும். உற்பத்தியின் பங்களிப்பு தனித்தனியாக கணிக்கப்படுவதனால் இலாபகரமான உற்பத்தியை மேற்கொள்ள முடியும்.

5) எல்லைக் கிரய அடிப்படையில் விவேகமான விலையிடலை மேற்கொள்ள முடியும். விசேட சந்தர்ப்பங்களில் தவிர விற்பனை விலை கட்டாயமாக எல்லைக்கிரயத்தை விட அதிகமாக இருக்க வேண்டும்.

6) எல்லா முகாமை மட்டங்களிலும் எல்லைக் கிரயம் பயனுடையதாகும். விசேடமாக இலாப நிர்ணயம், கேள்வி விலை நிர்ணயம், கிரயக் கட்டுப்பாடு போன்ற வேறுபட்ட சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்த முடியும்.

## சமப்பாட்டுப்புள்ளி பகுப்பாய்வு / இலாபநட்ட மற்ற புள்ளிப் பகுப்பாய்வு / செலவு தொகை இலாபப் பகுப்பாய்வு
## *(Break- even point analysis / Cost- volume profit analysis)*

சமப்பாட்டு புள்ளி பகுப்பாய்வு என்பது பல்வேறு மட்டங்களில் கிரயம், தொகை, இலாபம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை ஆய்வு செய்கின்ற ஒரு பகுப்பாய்வாகும். இத்தொடர்பு வாய்ப்பாடு ரீதியாகவோ / வரைபட ரீதியாகவோ வெளிப்படுத்தப்படுகின்றது. இது இலாப நட்டமற்ற புள்ளிப்பகுப்பாய்வு எனப்படும். அதாவது இலாபமோ / நட்டமோ அற்ற செயற்பாட்டு மட்டம் இலாபநட்டமற்ற புள்ளியாக வரையறுக்கப்படுகின்றது. இப்பகுப்பாய்வு தனியே இலாபநட்டமற்ற புள்ளியை மாத்திரம் வெளிப்படுத்துவதில்லை. பல்வேறு மட்டங்களிலும் செலவு, தொகை, இலாபம் என்பவற்றை வெளிப்படுத்துவதனால் செலவு, தொகை இலாபப்பகுப்பாய்வு எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## சமப்பாட்டு புள்ளி பகுப்பாய்விற்கான எடுகோள்கள்

1) கிரயத்தை நிலையான கிரயம், மாறும் கிரயம் என பிரிக்க முடியும்
2) நிலையான கிரயம் குறிப்பிட்ட நடவடிக்கை மட்டத்துள் மாற்றமடையாது இருக்கும்.
3) ஒரு அலகுக்கான மாறும் கிரயம் நிலையானதாக இருக்கும்

4) அலகொன்றுக்கான விற்பனை விலை மாறாதிருக்கும்
5) செயற்பாட்டு வீச்சுக்குள் கிரயங்களும் பரிமாணங்களும் ஏக பரிமாண தொடர்புடையவை என கொள்ளப்படுகின்றது.
6) கிரயத்தையும் வருமானத்தையும் பாதிக்கின்ற ஒரேயொரு காரணி தொகை மாத்திரமே ஆகும்.
7) தொழில்நுட்பம், உற்பத்தி முறைகள், வினைத்திறன் என்பன மாற்றமடையாதிருக்கும்
8) குறிப்பாக வரைபட ரீதியாக இப்பகுப்பாய்வு ஒரு பொருளுடன் மாத்திரமே தொடர்புடையது
9) இருப்புக்கள் எல்லைக் கிரயத்தில் மட்டுமே பெறுமதியிடப்படுகின்றது

## இலாப நட்டமற்ற புள்ளிப் பகுப்பாய்வுடன் தொடர்புடைய சமன்பாடுகள்

1) இலாபநட்டமற்ற புள்ளி (அலகுகளில்)

$$= \frac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகொன்றுக்கான பங்களிப்பு}}$$

2) இலாபநட்டமற்ற புள்ளி (விற்பனை அடிப்படையில்)

$$= \frac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகொன்றுக்கான பங்களிப்பு}} \times \text{அலகொன்றுக்கான விற்பனை விலை}$$

3) பங்களிப்பு விற்பனை வீதம்/ இலாப அளவு வீதம்(C/S)

$$= \frac{\text{அலகொன்றுக்கான பங்களிப்பு}}{\text{அலகொன்றுக்கான விற்பனை விலை}} \times 100$$

4) எதிர்பார்க்கப்படும் இலாபத்தில் விற்பனைமட்டம் (அலகுகளில்)

$$= \frac{\text{நிலையான கிரயம்} + \text{எதிர்பார்க்கப்படும் இலாபம்}}{\text{அலகொன்றுக்கான பங்களிப்பு}}$$

5) எதிர்பார்க்கப்படும்இலாபத்தில் விற்பனை மட்டம் (விற்பனை பெறுமதி)

$$= \frac{\text{நிலையான கிரயம்} + \text{எதிர்பார்க்கப்படும் இலாபம்}}{\text{அலகொன்றுக்கான பங்களிப்பு}} \times \text{அலகொன்றுக்கான விற்பனை விலை}$$

6) எதிர்பார்க்கப்படும் வரிக்கு பின்னரான இலாபத்தில் வி/னை மட்டம் (அலகுகளில்)

$$= \frac{\text{நிலையான கிரயம்} + \dfrac{\text{எதிர்பார்க்கப்படும் இலாபம்}}{(1 - \text{வரிவீதம்})}}{\text{அலகொன்றுக்கான பங்களிப்பு}}$$

**பங்களிப்பு = விற்பனை விலை - மாறும் செலவு**

## இலாபநட்ட மற்ற புள்ளியின் அனுகூலங்கள்

1) உற்பத்தி செய்யப்பட வேண்டிய இழிவு அலகுகளை அறிந்து கொள்ள முடிகின்றது
2) நிலையான செலவு மாறும் செலவுகளை அறிந்து கட்டுப்படுத்த முடிகின்றது
3) சிறந்த விலை கொள்கையினை தீர்மானிக்க முடிகின்றது
4) எதிர்கால தீர்மானங்களை மேற்கொள்ள உதவுகின்றது

## பாதுகாப்பு எல்லை *(Margin of Safty)*

பாதீட்டு விற்பனை அளவிற்கும் இலாபநட்டமற்ற புள்ளியிலான விற்பனை அளவிற்கும் இடையிலான வேறுபாடு பாதுகாப்பு எல்லையென வரையறுக்கப்படுகின்றது. அது பாதீடு செய்யப்பட்ட விற்பனைத் தொகையின் விகிதாசாரமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது. மேலும்

பாதீடு செய்யப்பட்ட விற்பனை வருமானத்திற்கும் இலாப நட்டமற்ற விற்பனை வருமானத்திற்குமிடையிலான வேறுபாடாகவும் வெளிப்படுத்தப்படலாம்.

பாதுகாப்பு எல்லையை அலகுகளில் அல்லது ரூபாய்களில் அல்லது விகிதமாகக் காட்ட முடியும் பின்வரும் முறைகளில் ஏதாவது ஒரு வழியில் பாதுகாப்பு எல்லையை கணிக்க முடியும்.

1) பாதுகாப்பு எல்லை அலகுகளில் = நிகழ்காலவிற்பனை அலகு - சமப்பாட்டுபுள்ளியில் விறப்னைஅலகு

2) பாதுகாப்பு எல்லை அலகுகளில் = $\frac{\text{நிகழ்கால விற்பனை - சமப்பாட்டுப்புள்ளி விற்பனை}}{\text{அலகொன்றின் விற்பனை விலை}}$

3) பாதுகாப்பு எல்லை ரூபாய்களில் = நிகழ்கால விற்பனை - சமப்பாட்டு புள்ளியில் விற்பனை

4) பாதுகாப்பு எல்லை ரூபாய்களில் = பாதுகாப்பு எல்லை அலகுகளில் X அலகொன்றின் விற்பனை விலை

5) பாதுகாப்பு எல்லை ரூபாய்களில் = $\frac{\text{தேறிய லாபம்}}{\text{இலாப அளவு விகிதம்}}$

6) பாதுகாப்பு எல்லை விகிதமாக = $\frac{\text{நிகழ்கால விற்பனை - சமப்பாட்டுப்புள்ளி விற்பனை}}{\text{நிகழ்கால விற்பனை}}$


உ - ம்:- பின்வரும் தரவுகள் **R** உ/தி கம்பனியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது பாதீடு செய்யப்பட்ட வருடாந்த வெளியீடு 400,000அலகுகள்
நிலையான செலவுகள் 100,000
மாறும்கிரயம்(அலகுக்கு) 50சதம்
விற்பனை விலை (அலகுக்கு) 1ரூபா

இத்தரவுகளை அடிப்படையாக கொண்டு பின்வருவனவற்றை நாம் நோக்கலாம்.
1) சமப்பாட்டு புள்ளி அட்டவணை?
2) சமப்பாட்டு புள்ளி வரைபடம், பாதுகாப்பு எல்லையினையும் காட்டுக?
3) இலாப அளவு வரைபடம் (கிட்டிய ஆயிரத்தில்)?

**கிட்டிய ஆயிரத்தில்**

| வெளியீடு (000) | விற்பனை வருமானம் (000) | மாறும் செலவு (000) | நிலையான செலவு | மொத்த கிரயம் | இலாபம்/நட்டம் (000) |
|---|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 100 | 100 | (100) |
| 100 | 100 | 50 | 100 | 150 | (50) |
| 200 | 200 | 100 | 100 | 200 | 0 |
| 300 | 300 | 150 | 100 | 250 | 50 |
| 400 | 400 | 200 | 100 | 300 | 100 |


மொத்த வருமானமும் மொத்த செலவும் ஒன்றையொன்று சந்திக்குமிடத்தில் சமப்பாட்டு புள்ளிதோன்றுகின்றது. இதனை பின்வருமாறு வரையில் காட்டலாம்.




**உசாத்துணை**
உயர்தர கணக்கீடு :- திரு. ந. சிவநேசராஜா,எல்லைக் கிரயவியல்:- திரு. தி. வேல்நம்பி

## TEACHER

| | | | | |
|---|---|---|---|---|
| T | - | is for Tactful | - | *சாமர்த்தியம்* |
| E | - | is for Education | - | *கல்வியறிவு* |
| A | - | is for Ability | - | *திறமை* |
| C | - | is for Character | - | *நன்னடத்தை* |
| H | - | is for Health | - | *ஆரோக்கியம்* |
| E | - | is for Enthusiasm | - | *ஊக்கம்* |
| R | - | is for Regularity | - | *ஒழுக்கம்* |



We Are Not Big But The Best
Headed By An Indian Engineer
Genuine
Intel
Servers
Lap Tops
PCs
BRANDED
ASSEMBLED
What Ever
Your
Computing Needs
Genuine
Warranty
UNIT
மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720,0773134737

# நாணயத் தளம்

# Monetary Base



A. Anton
A/L 2008 Commerce
Jaffna Hindu College



வர்த்தக வங்கியினால் அதன் வெளியீட்டினை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் உள்ளீடு ஒதுக்கு பணம் (Reserve money) அல்லது அடிப்படைப் பணம் (Base money) அல்லது நாணய தளம் (Monetary Base) அல்லது உயர்வலு நாணய தளம் என அழைக்கப்படும். இவ் ஒதுக்குப் பணமானது மத்திய வங்கியானது தன்னிடமுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு சொத்துக்கு அமைவாக வெளியிடப்படுகின்றது.

இந்த நாணயத் தளமானது அரசு நீங்கலான பொது மக்களுக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் மத்திய வங்கி கொண்டுள்ள உய்த்துணரக் கூடிய எல்லாப் பொறுப்புக்களையும் (Sight Liabilities) உள்ளடங்கும். இவ்வகையான உயத்துணர் பொறுப்பில் இரு முக்கிய கூறுகள் உள்ளன.

**மத்திய வங்கியின் எளிதாக்கப்பட்ட ஐந்தொகை**

| பொறுப்புக்கள் Liabilities | சொத்துக்கள் Assets |
|---|---|
| ➲ பொது மக்கள் வசமுள்ள பணம்(CP) Currency held by the public<br>➲ வர்த்தக வங்கிகள் வசமுள்ள நாணயம்(CKB) Currency held by the Comm. bank<br>➲ வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் (RR) Deposits of Commercial<br>➲ அரச வைப்புக்கள் (DGCP) Government Deposits<br>➲ வெளிநாட்டுக் கடன்பாடுகள் (FBCB) Foreign borrowing<br>➲ ஏனைய பொறுப்புகள் (OLCB) Other Liabilities | ➲ வர்த்தக வங்கிக்கான முற்பணங்கள் (AKB) Advance to the Commercial bank<br>➲ அரசிற்கான கொடுகடன் (CGCB) Credit to Government<br>➲ பன்னாட்டு ஒதுக்குகள் (FACB) International Reserve<br>➲ ஏனைய சொத்துக்கள் (OACB) Other Assets |
| மொத்த பொறுப்புகள் Total Liabilities | மொத்த சொத்துக்கள் ( Total Assets) |

**மொத்த சொத்துக்கள், மொத்தப் பொறுப்புக்களும் சமனாக காணப்படுவதனால் இவற்றுக்கிடையிலான தொடர்பை பின்வருமாறு சமன்பாடு வடிவில் காட்டலாம்.**

B = ஒதுக்குப் பணம்

$$B = (CGCB - DGCB) + (FACB - FBCB) + (OACB - OLCB) + AKB \ldots\ldots. (1)$$

சமன்பாடு (1)இல் (CGCB - DGCB) இன் தேறிய விளைவு மத்திய வங்கியினால் அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கடனைக் குறிக்கும் அதாவது (NCGCB) இவ்வாறே (FACB - FBCB) என்ற விடயம் மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்களை NFACB அதே வேளை (OACB - OLCB) அதன் தேறிய ஏனைய சொத்துக்களைக் குறிக்கும். (NOACB) இவ்வாறு எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் நாட்டின் ஒதுக்குப் பணமானது பின்வரும் சமன்பாடு (2)இல்உள்ள மாறிகளின் கூட்டு தொகைக்குச் சமனாகும்.

$$B = AKB + NFACB + NOACB \ldots. (2)$$

சமன்பாடு (2) இல் வலது கைப்புறமாக உள்ள மாறிகள் ஒதுக்குப் பணத்தைப் பாதிக்கும் காரணிகளைப் பிரதி பலிப்பதுடன் இக்காரணிகளில் ஏற்படும் எந்தவொரு மாற்றமும் ஒதுக்குப் பணத்திலும் அதே போக்கிலான மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகள் பின்வருமாறு

a) மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்படும் முற்பணங்கள்
b) மத்திய வங்கியினால் அரசிற்கு வழங்கப்படும் தேறிய கடன்கள்
c) மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்துக்கள்
d) மத்திய வங்கியின் தேறிய ஏனைய சொத்துக்கள்

**உசாத்துணை நூல்கள்: நாணய முகாமைத்துவம் (மாணிக்கம் நடராஜ சுந்தரம்)**

### மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் விற்பனை

**X என்ற வணிக வங்கி பற்றிய விபரங்கள்**

சட்டப்படியான காசு ஒதுக்கு வீதம் 15%
வணிக வங்கியின் காசு ஒதுக்கு வீதம் 10%

**வணிக வங்கி**

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 50,000 | ஒதுக்கு | 5000 |
| | | சட்டப்படியான ஒதுக்கு | 7500 |
| | | கடன் | 37500 |
| | 50,000 | | 50,000 |

**மத்திய வங்கியின் ஐந்தொகை பற்றிய விபரம்**

**மத்திய வங்கியின் ஐந்தொகை**

| | | | |
|---|---|---|---|
| அரச முகவர் வைப்பு | 3500 | அரச பிணை | 200,000 |
| பொதுமக்களிடம் உள்ள பணம் | 300000 | வெளிநாட்டு ஒதுக்கு | 150500 |
| ஒ வணிகவங்கியின் வைப்பு | 8000 | திறைசேரி உண்டியல் | 51000 |
| மூலதனம் | 30000 | ஏனைய சொத்து | 50,000 |
| ஏனைய வணிக வங்கியின் வைப்பு | 110000 | | |
| | 451500 | | 451500 |

இங்கு மத்திய வங்கியானது 6000/- பெறுமதியான திறைசேர் உண்டியலை வணிக வங்கிக்கு விற்பனை செய்கின்றது. இவ்வாறு கொள்வனவு செய்ததன் பின்னர் வணிக வங்கி மத்திய வங்கியின் ஐந்தொகை பின்வருமாறு மாற்றம் அடையும்.

**a) X வணிக வங்கியின் ஐந்தொகை**

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 50,000 | ஒதுக்கு | 5000 |
| | | சட்டப்படியான ஒதுக்கு | 1500 |
| | | திறைசேரி உண்டியல் | 6000 |
| | | கடன் | 37500 |
| | 50,000 | | 50,000 |

X வணிக வங்கியின் சட்டபடியான ஒதுக்கு 6000/- ஆல் குறைவடைவதுடன் புதிதாக X வணிக வங்கியின் ஐந்தொகையில் கொள்வனவு செய்த 6000/- பெறுமதியான திறைசேரி உண்டியல் காணப்படுகின்றது.

**b) மத்திய வங்கியின் ஐந்தொகை**

| | | | |
|---|---|---|---|
| அரச முகர் வைப்பு | 3500 | அரசபிணை | 200000 |
| பொதுமக்களிடம் உள்ள பணம் | 300000 | வெளிநாட்டு ஒதுக்கு | 150500 |
| ஒவணிக வங்கியின் வைப்பு | 2000 | திறைசேரி உண்டியல் | 45000 |
| மூலதனம் | 30000 | ஏனைய சொத்து | 50000 |
| ஏனைய வணிக வங்கி வைப்பு | 110000 | | |
| | 445500 | | 445500 |

X வணிக வங்கியானது 6000/- பெறுமதியான திறைசேரி உண்டியலை தமது ஒதுக்கை பயன்படுத்தி கொள்வனவு செய்யும் போது X வணிக வங்கியின் வைப்பு 6000/- ஆல் குறைவடையும். அத்துடன் மத்திய வங்கியிடம் காணப்பட்ட 51000/- பெறுமதியான திறைசேரி உண்டியல் 6000/- ஆல் குறைவடையும்.

### c) X வணிக வங்கியின் ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 50,000 | ஒதுக்கு | 5000 |
| | | சட்டப்படியான ஒதுக்கு | 7500 |
| | | திறைசேரி உண்டியல் | 6000 |
| | | கடன் | 31500 |
| | 50,000 | | 50,000 |

X வணிக வங்கியானது 6000/- பெறுமதியான திறைசேரி உண்டியலைக் கொள்வனவு செய்வதன் மூலம் சட்டப்படியான ஒதுக்கு 6000/- ஆல் குறைவடைந்து காணப்பட்டது. எனினும், வணிக வங்கி மத்திய வங்கியிடம் சட்டப்படியான ஒதக்கு 7500/- பேண வேண்டி இருப்பதனால் கடனில் இருந்து 6000/- ஈடு செய்கின்றது. இதனால் கடன் ஆனது 6000/- ஆல் குறைவடைய 31500ஆக கடன் ஆனது காணப்படுகின்றது.

### d) மத்திய வங்கியின் ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| அரச முகவர் வைப்பு | 3500 | அரச பிணை | 200,000 |
| பொது மக்களிடம் உள்ள பணம் | 294000 | வெளிநாட்டு ஒதுக்கு | 150500 |
| ஒவணிக வங்கியின் வைப்பு | 8000 | திறைசேரி உண்டியல் | 45000 |
| மூலதனம் | 30000 | ஏனைய சொத்து | 50000 |
| ஏனைய வணிக வங்கியின் வைப்பு | 110000 | | |
| | 445500 | | 445500 |

இதே வேளை மத்திய வங்கியிடம் உள்ள வணிக வங்கியின் வைப்பானது 6000/- ஆல் அதிகரிக்கும் எனினும் X வணிக வங்கியானது கடனைப் பயன்படத்தியே சட்டப்படியான ஒதுக்கை ஈடு செய்தது. இதனால் பொது மக்களுக்கு வழங்கப்படுகினற் கடன் ஆனது 6000/- ஆல் குறைவடையும். ஆகவே பொது மக்களிடம் உள்ள பணம் 294000/- ஆக உள்ளது.

**பெரும் பாலைநிலங்களும் நாடுகளும்**


| பாலைவனம் | | நாடுகள் |
|---|---|---|
| 🕮சஹாரா | – | வடஆபிரிக்கா |
| 🕮லிபியா | – | வட ஆபிரிக்கா |
| 🕮ஆஸ்திரேலியன் | – | ஆஸ்திரேலியா |
| 🕮விக்டோரியா | – | ஆஸ்திரேலியா |
| 🕮சிரியா | – | அரேபியா |
| 🕮அரேபியன் | – | அரேபியா |
| 🕮கோபி | – | மாங்கோலியா |



SRI JANA
மின்பொருள் விற்பனை நிலையம்
ரி.வி அன்ரனா, மொபைல் அன்ரனா, கிற் காட்,
P.V.C பைப், C.I பைப்,
எலக்ரிக்கல் உபகரணங்கள்
GOPI ANTENNA SYSTEM
1157, K.K.S ROAD,
NAACHIMAR KOVILADY
JAFFNA


பூபதி பேக்கரி
ஆடியபாத வீதி,
உயரப்புலம்
ஆனைக்கோட்டை
யாழ்ப்பாணம்
தொ.பே: 021 4590970
காலையில் ஒவ்வொரு பத்து பாணுக்கும் ஒரு பாண் இலவசம்
மாலையில் ஒவ்வொரு இருபது பாணுக்கும் ஒரு பாண் இலவசம்

# மின் வணிகம்
# E-COMMERCE

T. Thavaruban
Our School Teacher &
Old student 98A/L
*CEO,Speed IT net*





தகவல் தொழில்நுட்பம் எத்துறையிலும் இல்லாமலில்லை என்பதை நான் உங்களுக்கு சொல்லித் தெரியவேண்டியதில்லை. அந்தவகையில் வணிகத்துறையிலும் இன்று உலகளாவிய ரீதியில் தகவல் தொழில்நுட்பம் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கின்றது. இத்துறையில் அதன் ஆதிக்கம் மின்வணிகம் என்ற வடிவில் அறியப்படுகின்றது எனவே மின்வணிகம் பற்றி சகலரும் அறிந்து வைத்திருக்கவேண்டிய தேவைநிறையவே உள்ளது

**அறிமுகம்**

மின்வணிகம் பற்றி முழுமையான கணோட்டத்தினை செலுத்த முன்பாக, பாரம்பரிய வணிகம் பற்றி ஓரளவு தெளிவான பார்வை நம்மிடத்தில் ஏற்படுவது அவசியம். வணிகத்தினை விளங்கிக் கொண்டால் மின்வணிகத்தினை பற்றிய தெளிவு தானாக வரும்

பணத்திற்காக பொருட்களையும் சேவைகளினையும் பண்டமாற்றம் செய்துகொள்வது வணிகம் எனப்படும். வணிகம் எமது வாழ்க்கையில் மில்லியன் கணக்கிலான வடிவங்களில் அறியப்படுகிறது. வணிகத்தில் பங்கேற்கும் பாத்திரங்களாக/ தரப்பி னராக 3 வகையினரை அடையாளப் படுத்தலாம்

**நுகர்வோர் / வாங்குவோர்**(*Buyers*)

இவர்கள் பணம் கொடுத்து பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்கிறார்கள்

## விற்பனையாளர் *(Sellers)*

-இவர்கள் பணத்திற்காக பொருட்களையும் சேவைகளையும் விற்பனைசெய்கிறார்கள். அவர்களில் இருவகையினர் இருக்கின்றனர் ஒன்று சில்லறை விற்பனையாளர்கள் மற்றைய தரப்பினர் மொத்த விற்பனையாளர்கள். இவ்விரு தரப்பினரில் முதலாவது தரப்பினர் நுகர்வோருடன் நேரடியாக வணிகம் செய்கின்றனர்.



## உற்பத்தியாளர் *(Producer)*

-இவர்கள் பொருட்களையும் சேவைகளையும் உருவாக்குபவர்களாக அல்லது உற்பத்தி செய்பவர்களாக இருக்கிறார்கள். பொதுவாக உற்பத்தியாளர்கள் விற்பனை யாளர்களாகவும் தொழிற்படுகிறார்கள். இதில் இரண்டு வகை விற்பனை யாளர் களாவும் இவர்கள் தொழிற் பட வாய்ப்புண்டு

## மின்வணிகம் (E-Commerce) என்றால் என்ன?

இணையம் உள்ளிட்ட கணனி வலைப் பின்னல்களினூடாக பொருட்களையும் சேவைகளையும் தகவல்களையும் வாங்குதல் விற்றல் பரிமாற்றல் மற்றும் பண்டமாற்றம் செய்யும் தொழிற்பாடு மின்வணிகம் எனப்படும்.

## மின்வர்த்தகம் (E-Business) என்றால் என்ன?

பரந்துபட்ட மின்வணிகம் மின்வர்த்தகமாகும். அதாவது வாங்குதல் விற்றல் நடவடிக்கைகளுடன் வாடிக்கையாளர் சேவை, பங்காளர் நிறுவனங்களுடனான நடவடிக்கைகள், நிறுவனத்துக்குள்ளான இலத்திரனியல் பயிற்சியை வழங்கல் இலத்திரனியல் பரிமாற்றங்களை செய்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் மின் வர்த்தகம் என்ற எண்ணக்கருவில் அடங்கும்

மேலே விபரிக்கப்பட்ட மூன்று தரப்பட்டவர்களும் எந்த ஒரு மின்வணிக நடவடிக்கையிலும் காணப்படுவர் இருந்தபோதிலும் மின்வணிகம் சற்று வித்தியாசமானது.

ஒரு வெற்றிகரமான மின்வணிகத்தினை மேற்கொள்ள பின்வரும் விடயங்கள் அவசியமானவையாகும்

1. உற்பத்தி (Product)- அது பொருளாகவோ சேவையாகவோ அன்றி ஒரு தகவலாகவோ இருக்கலாம்
2. இடம்-இங்கு அது ஒரு இணையத்தளமாக இருக்கும் அத்தளத்தில் சில வழிகளினூடாக குறித்த உற்பத்தி காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்
3. நுகர்வோரை குறித்த தளத்திற்கு வரவழைப்பதற்கான வழிகள்

4. நுகர்வோரின் கொள்வனவு விருப்பை (Order) பெறுவதற்கான ஏற்பாடு. இது தளத்தில் ஒரு விண்ணப்ப படிவமாக (குழசஅ) இருக்கலாம்
5. பணத்தை பெறுவதற்கான / ஏற்றுக்கொள்வதற்கான வழி பொதுவாக வியாபார கணக்கு ஒன்றை வங்கியில் பேணுவதன்மூலமாக கடனட்டை மூலமான பணத்தினை ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்படலாம். இதற்கு பாதுகாப்பான கொள்வனவு விருப்பு ஏற்றலுக்கானதும் வங்கியுடன் தொடர்பு கொள்வதற்கான இணையப்பக்கம் அவசியம்
6. கப்பல் அல்லது விமானம் மூலமாக உற்பத்தியை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடு. மென்பொருள் எனின் அதனை இணையத்தளத்தினூடாகவே பதிவிறக்கம் செய்வதற்கான ஏற்பாடு போன்ற நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் குறித்த வணிக நடவடிக்கையினை பூரணப்படுத்தல்
7. உட்திரும்பல்களை ஏற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தியிருத்தல்
8. தேவைப்படின் விற்பனையின் பின்னரான உத்தரவாதத்தை கையாள்வதற்கான ஏற்பாடு அல்லது வழி
9. வாடிக்கையாளர் சேவையினை வழங்கும் வழிவகைகள்

**மின்வணிகம் பிரதானமாக நான்கு வகைப்படும் அவையாவன**

நிறுவனம்-நுகர்வோர் Business-to-consumers (B2C)
நிறுவனம்-நிறுவனம் Business to business (B2B)
நுகர்வோர்-நுகர்வோர் Consumer to consumer (C2C)
நிறுவனம்-ஊழியர் Business to employee (B2E)

இதைவிடவும் தற்போது பிரபல்யமடைந்து வரும் வகைககளாக பின்வருவனவற்றையும் கூறலாம்
மின்அரசாங்கம் E-government
மொபைல் வணிகம் -Mobile Commerce (m-commerce)
இவை சற்று வித்தியாசமான எண்ணக்கருக்களை கொண்டவை. முக்கிய மின்வணிக பொறிமுறைகள் பற்றி கவனிப்போம்

## மின்வணிக பொறிமுறைகள்

**ஏலவிற்பனை(Auction)** இது ஒருவகை பேரம் பேசும் வணிகமுறையாகும் விற்பனையாளர் குறித்த பொருள் சேவைக்கு ஒரு விலையினை நிர்ணயித்திருக்க வாங்குபவர்கள் ஒவ்வொரு விலையினை நிர்ணயிக்க ஒருநிலையில் இருவரில் ஒருவர் ஒரு விலைக்கு இணங்கி அப்பொருளை அல்லது சேவையினை பெற்றுக்கொள்ளல் அல்லது விற்பனைசெய்வதாகும். ஆரம்பகாலத்தில் ஏன் இன்னும் நமது ஊர்களில் நகரங்களில் பல்வேறு வடிவங்களில் இவ்வணிகம் நடைபெற்றுவருகிறது. நவீன வர்த்தகத்தில் பங்குவர்த்தகம் கூட இதுமாதிரித்தான் நடைபெறுகிறது

இச்செயற்பாடு மின்வணிகத்தில் சிறப்பாக கையாளப்படுகிறது. இணையத தளத்தினுடாகவும் இணையத்தினூடாக இயங்கும் மென்பொருட்களின் உதவியுடனும் மிகவேகமாவும் துல்லியமானதாகவும் இவை மின்வணிகத்தில் கையாளப்படுவதுடன் மின்வணிகத்தினூடாக செய்யப்படுகையில் கூடிய பயன்பாடுகள் விற்பனையாளருக்கும் கொள்வனவாளருக்கும் கிடைக்கின்றது அத்துடன் பாதுகாப்பானதாகவும் இருக்கிறது
இந்த ஏலவிற்பனையில் Forward Auctions, Reverse Auctions என இரண்டு வகைகள் உண்டு. இதில் முதலாவது வகையானது விற்பனையாளர்கள் கூடியளவிலான வாங்குவோரை பெறுவதற்காக பயன்படுத்தப்படுவது மற்றையது தனிநபர் அல்லது ஒருநிறுவனம் தனக்கு

தேவையனவற்றை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்ததுவது. Epay.com ஆனது மிகப்பிரபல்யமான ஏல விற்பனைத்தளமாகும்

ஏலவிற்பனைக்கு அடுத்த முக்கிய பொறிமுறை மின்கடை (Electronic Storefront) ஆகும் இது ஒரு குறித்த வகை விற்பனைக்காக நடாத்தப்படுகின்ற இணையத்தளத்தினை குறிக்கும் இங்கே குறித்த வகை விற்பனை மாத்திரம் நடைபெறும்.

அடுத்தது நாம் காண்கின்ற விற்பனைக்கடைத்தொகுதியினை இணையத்தில் நடாத்துவதாகும் இதனை மின்கடைத்தொகுதி (Electronic mall/cyber mall/ e-mall) எனலாம். இது தனித்தனி விற்பனை நிலையங்களின் தொகுதி ஒரே இணையத்தளத்தில் காணப்படுதலைக் குறிக்கும் பல்வேறுதரப்பட்ட உலகளாவிய விற்பனை நிலையங்கள் ஒரே கூரையில் இயங்குவதற்கு சமன். இதற்கு சிறந்த உதாரணமாக shopping.yahoo.com இனை கூறலாம்

அடுத்தது மின் சந்தை (Electronic Market plaće/e- Market place) ஆகும்.இது ஒரு வகையான மெய்நிகர்(Virtual) இணைய சந்தையாகும் இங்கு பலதரப்பட்ட விற்பனையாளர்களும் கொள்வனவாளர்களும் பொருட்களையும் சேவைகளையும் வாங்கல் விற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவர். மேற்கண்ட நான்கு முக்கிய பொறிமுறைகளே இந்த மின்வணிகத்தில் காணப்படுகின்றன.

## பணப்பரிமாற்ற முறைகள்

அனைத்து வணிகநடவடிக்கைகளும் இலத்திரனியல் வடிவத்தில் மேற் கொள்ளப்படுகையில் குறித்த நடவடிக்கைளின்போது எவ்வகையான பணப்பரிமாற்றத்தினை மேற்கொள்ள முடியும் என்பது இயல்பாகவே உங்களிடத்தில் எழுந்திருக்கவேண்டிய கேள்வி ஆகும் தகவல்தொழில்நுட்பம் எதற்கும் சளைத்தது இல்லை இலத்திரனியல் வங்கி பணமாற்றல் சேவை (Wire Transfer) இலத்திரனியல் காசோலை(Electronic Cheque) கடனட்டை(Credit Card) வரவு அட்டை(Debit card) போன்ற வழிகளில் பணம் பரிமாற்றப்படுகிறது இந்நடவடிக்கைகளில் அங்கீகாரம்பெற்ற சர்வதேச முகவர்கள் சம்பந்தப்பட்டிருப்பார்கள் பாதுகாப்பான முறையில் இம்முறைகளை உபயோகிப்பதன் மூலம் சிறந்த மின்வணிக நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும். இருந்தாலும் ஏமாறுபவர்கள் இருக்குவரை ஏமாற்றுபவர்களும் இருந்துகொண்டுதான் இருப்பார்கள் இவ்விடயத்தில் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் கவனமாக கையாள வேண்டியது நமது கடமையாகும்

## மின்வணிகத்தின் நன்மைகளும் எதிர்நோக்கும் தடைகளும்!

### நன்மைகள்

நிறுவனங்களைப்பொறுத்தவரையில் தேசிய சர்வதேச சந்தைகளை அணுகுவதற்கு இது வாய்ப்பாக இருக்கும் அத்துடன் தகவல்களை பெற்றுகொள்ளுதல் விநியோக நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை கையாள்வதற்கு ஆகும் செலவு குறைவாகும். பொருட்களை சேவைகளை பௌதீக வளங்களினூடாக காட்சிப்படுத்த வேண்டிய தேவை இல்லை. விபரங்களை இணையத்தளத்தினுடாக காட்சிப்படுத்திய பின்னர் நுகர்வோரின் விருப்பிற்கேற்ப பெற்று அனுப்பிட அல்லது வழங்கிட முடிகிறது.

நுகர்வோரைப்பொறுத்த வரையில் மிகப்பெருமளவிலான பொருட்களையும் சேவைகளையும் எந்நேரமும்(24/7) வாங்கிட அல்லது அவைபற்றி அறிந்துகொள்ள முடிகிறது. அத்துடன் எப்பொருளாயினும் சேவையாயினும் தேவையானதை நியாய விலையில் இருந்த இடத்தில் இருந்துகொண்டே பெற்றுக்கொள்ள முடிகிறது. பொதுவாக நுகர்வோர் அவர்கள் எந்த நாட்டில் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களை குறித்த பொருள் சேவை பற்றிய தகவல்கள் யாவும் சென்றடையவும் அவற்றை அவர்கள் பெற்றுக்கொள்ளவும் மின்வணிகம் வழிவகுக்கிறது

**தடைக்கற்கள்**

தொழிநுட்பரீதியில் நோக்குகையில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு தரநிர்ணய முறைகளில் காணப்படும் குறைபாடுகள். தொலைத்தொடர்பு துறையில் காணப்படும் தரவுப்பரிமாற்ற வேகப்பற்றாக்குறைகள். (நம்மூரில் இது மிகமிக பின் தங்கிய நிலையில் உள்ளது) ஒரு பரிமாற்றத்தினை மேற்கொள்ளும்போது அது இடையில் தடைப்படுவது பாரிய சிக்கலை தோற்றுவிக்கும். மின்வணிகமொன்றை ஒருவர் ஏற்படுத்துவதற்கு செலவு செய்யவேண்டிய தொகை அதிகமானதாக இருத்தல் மிகப்பெரிய தடைக்கல்லாகும் மின்வணிகம் பாதுகாப்பற்றது என்று பொதுவாக நிலவுகின்ற அபிப்பிராயம். மற்றும் இன்னமும் தீர்க்கப்பட முடியாதிருகின்ற சட்டப்பிரச்சனைகள் ,ஆபத்தான விற்பனையாளர்கள் நுகர்வோர்கள் போன்றவர்களின் விரும்பத்தகாத ஏமாற்று நடவடிக்கைகள் போன்றவை மின்வணிகத்தில் எதிர்நோக்கப்படும் தடைக்கற்கள் ஆகும்.

## முக்கியமானவை மூன்று

**மதிக்க வேண்டிய மூன்று – முதுமையானோர், மார்க்கம், சட்டம்**
**நேசிக்க வேண்டிய மூன்று – நேர்மை, தூய்மை , கடின உழைப்பு**
**போற்ற வேண்டிய மூன்று – அறிவு, அழகு, பண்பு**
**பேணி வளர்க்க வேண்டிய மூன்று – திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி**
**அடக்க வேண்டிய மூன்று – நா, சோதனை, கோபம் கட்டாயம் கவனிக்க**
**வேண்டிய மூன்று – பேச்சு, நடைமுறை, செயல்கள்**
**ஆதரிக்க வேண்டிய மூன்று – வாக்குறுதி, நட்பு ,அன்பு**
**ஒழிக்க வேண்டிய மூன்று – திருட்டு, சோம்பல், பொய்**
**வெறுக்க வேண்டிய மூன்று – பெருமை, அநீதி, வாக்குமீறல்**
**தப்பிக் கொள்ள வேண்டிய மூன்று – தீய எண்ணம், பொறாமை, பிடிவாதம்**

# மத்திய வங்கியின் நாணயத் தாள்கள்



G. Maginthan
A/L 2008 Commerce
Jaffna Hindu College



இலங்கை மத்திய வங்கியானது பொதுமக்களது சுற்றோட்டத்திற்காக தாள் குற்றி நாணயங்களை வெளியிடும்போது அவை பற்றிய விடயங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் நோக்கப்படுகின்றது.

1) நாணயத்தாள்களில் பண்புகள்
2) வடிவமைப்பும் உற்பத்தியும்
3) பகிர்ந்தளிப்பு
4) போலி நாணயதாள்கள்
5) நாணயத்தாள்களின் பாதுகாப்பு

## நாணயத்தாள்களின் பண்புகள் *(Features of Currency Notes)*

### i. தாளின் சேர்க்கை

எல்லா வங்கித் தாள்களும் 100% ஆன பருத்திக்களியில் ஆன தார் படையில் அச்சிடப்படுகின்றன. அதே நேரம் 200% ஞாபகார்த்தத் தார்பெலிமர் படையில் அச்சிடப்பட்டுள்ளது.

### ii. தாளினது உணர்வு (Feel of the paper)

வங்கிப்பணத்தாளில் உங்களது விரலை வைத்துத் தடவினால் அதில்ப்பழக்கமான ஓர் உணர்வு ஏற்படும். மிக அதிகளவில் அச்சிடப்பட்ட பகுதிகளில் இலேசான முரட்டுத் தன்மை தெரியும். அத்துடன் விரல் நுனிகளில் அதன் அதிகரித்த பண்புகளின் உணர்வு ஏற்படும். இத்தொழில்நுட்பத்தினை "இன்ரக்ஸ்லியோ" அச்சிடுதல் என்பர். ஓர் உண்மையானதாள் பள்ளம் திட்டியுடனோ அல்லது பளபளப்புடனனோ அல்லது ஒட்டுத்தன்மையாகவோ காணப்படமாட்டாது.

### iii. தண்ணீர் குறி (Water mark)

தாள் வெளிச்சத்தில்ப் பார்த்தாலன்றி மிகத்தெளிவாக வரையறுக்கப்பட்ட சிங்கத்தினது நீர்வரி அடையாளம் மிக அருமையாகவே கவனிக்கக் கூடியதாக இருக்கும். பிரகடனப்படுத்தப்பட்ட சிங்கம் இலங்கை தேசிய கொடியில் வாளை வைத்திருப்பதனை காட்டுகின்றது.

### iv. பாதுகாப்பு நூலிழை (Security Thread)

10/-, 20/=, 50/=, 100/= நாணயத்தாள் இனங்களில் தாளிப் பாதுகாப்பு நூலிழை சேர்க்கப்பட்டுள்ளது. இது "இலங்கை மத்தியவங்கி" என்ற சொற்களில் மிகச்சிறிய எழுத்துக்களுடன் 'பொலியஸ்ரர்" நூலிழையில் சேர்க்கப்பட்டுள்ளது. 500/=, 1000/= தாள்களில் வெள்ளிநூல் இழைகள் விடுபட்ட கோடுகள் போல் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தாழினை வெளிச்சத்தில்ப் பறிக்கும்போது தொடர்ச்சியான நிலைக்குத்துக்கோடுபோல் நூலிழை தெரியும். இந்நூலிழை "ஸ்ரார்வைட்" என அழைக்கப்படுகின்றது. இது 500/= தாளில் தளை அகலமாகவும் 1000/= தாளில் 4mmஅகலமாகவும் உள்ளது. இத்துடன் உலோகமற்ற தெளிவான சொற்களைக் கொண்டநூல் இழையுடன் 500/= இல் இலங்கை மேடைகளின் வடிவம் உள்ளது.

1000/= இல் இழைக்கப்பட்ட கூடையின் வடிவமும் உள்ளது 2000/= நாணயத்தின் 2006 இல் வெளியிடப்பட்டது. இதில் ஸ்ராகுரோம் என அழைக்கப்படும் 4mm அகலமான பாதுகாப்பு நூல் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் வர்ணம் தாளினை மேல் கீழாக அசைக்கும்போது சிவப்பிலிருந்து பச்சையாக மாறுகிறது. ரூபா 2000 இலக்கத்தில் வண்ணத்துப்பூச்சி போன்று உந்துசக்தி தென்படும். புதிய 500/= தாளில் 3mm அகலமான ஸ்ராவைப் பாதுகாப்புநூல் 3mm அகலமான ஸ்ராகுரோம் நூலினை 2006ம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

### v. பார்க்கக் கூடிய பண்பு See thorough feature

தாளை வெளிச்சத்தில் பிடிக்கும்போது தாளின் முன்பக்கமும் பின்பக்கமும் ஒரே மாதிரியான உருவம் / வடிவம் (பதிவில்) இணையாக இருக்கும். போலியான தாளில் முன்பின் பக்கங்கட்கிடையிலே சரியாக பதிக்கப்பட்டிருப்பதனை காண முடியாது இந்த வேறுபாட்டினை அடையாளம் காணும் பொருட்டு தாளினை வெளிச்சத்தில் பிடித்துக் கொண்டு மிக அவதானமாக பரீட்சிக்க வேண்டும்.

### iv. பல படைகளாக மறைந்திருக்கும் பிரதிமை Indecent Band

தாளினைக் கண்மட்டத்திற்கு கிடையாக சரித்துப் பிடிக்கும் போது தான் இனத்தின் இலக்கங்கள் உள்ளடக்கிய ஒரு சின்னம் மறைந்திருப்பதை காணலாம் இந்தப்பண்பினை வழக்கமாக வங்கித்தாளில் கீழ் மத்திய பகுதியில் வெறுபாட்டையுடைய வடிவங்களுடன் காணலாம்.

### vii.நுணுக்கமான எழுத்துக்கள்

எல்லா வங்கித் தாள்களிலும்முன் பக்கமாக மேல் உள்ள எல்லைக்கோட்டில் இலங்கை மத்திய வங்கிஎன மிக சிறிய எழுத்துக்களில் இருப்பதை பூதகண்ணாடி மூலம் காணலாம்.

## வடிவமைப்பும் உற்பத்தியும் *Design and Production*

புதிய தொடராக இருக்கும்போது தாள்கள் / நாணயங்களை வடிவமைக்க பலமாதங்கள் எடுக்கும். தாள்கள் / நாணயங்களை தான் அச்சிடுவோர் / குத்தியை வார்ப்போர் வடிவமைக்கின்றனர்.

வங்கித் தாள்கட்கு அவற்றின் இனங்கள், வடிவம் மற்றும் ஏனைய பண்புகளும், குத்திகளுக்கு அவற்றின் குறிப்பிட்ட உலோகங்கள், நிறை அளவு, வடிவமைப்பு, இனங்கள் என்பனவும் முறையே உற்பத்தி செய்யப்படுவதற்கும் வார்ப்பதற்கும் மத்தியவங்கியின் நாணயச்சபையின் அதிகாரம் பெறப்படுவது கட்டாயமாக இருப்பதோடு நிதி அமைச்சரின் இணை அங்கீகாரமும் பெறப்படவேண்டும். வடிவமைப்புக்கள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்வனவு நடைமுறைக் வழிகாட்டல்கள் என்பவற்றினைப் பின்பற்றி தாள் அச்சிடும் குத்தி வார்க்கும் கம்பனியுடன் தாள்களை அச்சிடுவதற்கும் குத்திகளை வார்ப்பதற்பதற்கும் வங்கி ஒப்பந்தமொன்றினை மேற்கொள்ளும்.

## பகிர்வு *(Distribution)*

கேள்வியை எதிர்கொள்ளும் வகையில் இலங்கை மத்திய வங்கி போதியளவு வங்கித்தாள்களையும் குத்திகளையும் வணிக வங்கிகட்கு வழங்க வேண்டும். வணிக வங்கிககள் மத்தியவங்கியிடமிருந்து தாள்களையும் குற்றிகளையும் பொதுமக்கள் மற்றும் வர்த்தக நிலைய்ங்களுக்கு விநியோகிப்பதற்காக பெற்று பின்னர் அதனை வங்கி வைப்புக்கள் வடிவில் மத்திய வங்கிக்கு திருப்பி அனுப்புகின்றன. இத்தகைய வங்கித்தாள்கள் உயர்ந்த, வேகமான தாள் செயல்முறைப்படுத்தும் இயந்திரத்தின் ஊடாக சரி பார்க்கபபட்டு எண்ணப்பட்டு மற்றும் தரப் படுத்தப்படுவதுடன் தாள்கள் உடனேயே சிறுதுண்டுகளாக கிழிக்கப்படுகின்றன. பயன் படுத்தக்கூடியதாள்கள் பயன்படுத்தப்பட முடியாத அதே நேரத்திலேயே செயல்முறையில் எடுக்கப்பட்டு வணிக வங்கிகட்கு மீண்டும் வழங்கப்படுகின்றன. தாள்கள் மேசைமீது வைக்கப்பட்டுள்ள எண்ணும் இயந்திரங்கள் மூலம் காசாளர்களினால் எண்ணப்பட்ட வணிகவங்கிகட்கு விநியோகத்துக்காக வழங்கப்படுகின்றன. அதே நேரம் பயன்படுத்த முடியாத தாள்கள் வங்கியினால் அழிக்கப்படுகின்றன.

### பொதுமக்கட்கான நாணயமாற்று நிலையம்

பொதுமக்களுக்காக நாணயமாற்று நிலையம் ஒன்று கொழும்பு 11 இல் அமைந்து உள்ள இலங்கை வங்கியின் புறக் கோட்டைக் கிளையில் பேணப்படுகின்றது. பொதுமக்கள் தாள், குற்றிகளை இதில் பெறுவதுடன் சிறிதளவான மாற்றிய நாணயத்தாள்கள் / குற்றிகளை இங்கு பெறலாம்.

### போலித்தாள்கள; *(Counterfeit note)*

சந்தேகப்படும் போலித்தாள்களை என்னசெய்ய வேண்டும்?

What to fo with suspected counterfeit note

சந்தேகப்படும் தாளை உண்மையானது எனக் கருதப்படும் தாளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். உங்களுக்குப் பழக்கமாகவுள்ள ஒன்றிற்கு மேற்பாதுகாப்புப் பண்புகளை பார்க்க வேண்டும். விசேடமாக மேலே கூறப்பட்ட எளிய படிமுறைகளை நீங்கள் பின்பற்றினால் உண்மையான இலங்கை நாணயத்தாள்களை அடையாளம் காணலாம். போலித்தாள்கட்கு எதுவித பெறுமதியும் இல்லை.

i. சந்தேகப்படும் தாளை உண்மையான தாளுடன் ஒப்பிடல்
ii. போலித்தாள் கொண்டு வருபவரின் விபர ங்களை குறித்து வையுங்கள்
iii. வங்கித்தாளின் விபரத்தை குறித்து வையுங்கள் (நாணயவகை, தொடர் இலக்கம்)
iv. அண்மையிலுள்ள பொலிஸ்நிலையத்துடன் தொடர்பு கொண்டு சந்தேகமான தாளை கையளிப்பதுடன் பொலிசுக்கு தேவையான தகவலையும் வழங்கவும்.

போலித்தாள் என தெரிந்தும் வைத்திருப்பது / மற்றவர்களிடம் கைமாறுவது சட்டப்படி குற்றமாகும்.

**நாணயத்தாள்களின் பாதுகாப்பு**

ஒரு நாணயத்தாளினை நான் மீண்டும் உற்பத்தி செய்யலாமா?

Can reproduce a note?

நாணயச்சட்ட விதியின் பிரிவு 58(ஈ) இன் கீழ் நாணயத்தினை மீள உற்பத்தி செய்வது ஒரு குற்றமாகும். இச்சட்டத்தின்படி நாணயச்சபையின் அனுமதியில்லாமல் /அங்கீகாரமில்லாமல் ஒரு நபர்:-

1) ஏதாவது ஒரு நாணயத்தை வெட்டுதல், துவராமிடல், ஏதாவது ஒருவகையில் உருவத்தை மாற்றுதல்
2) ஏதாவது ஒரு நாணயத்தில் அச்சிடுதல், முத்திரையிடுதல், ஏதாவது வரைதல் முத்திகுத்துதல் / அடையாளமிடுதல்
3) நாணயத்தின் பண்புக்கு முரணாக ஏதாவது செய்தல்
4) ஏதாவது ஒரு நாணயதாளை மீள உற்பத்தி செய்தல் / தொலைநகலில் அனுப்பல் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்.

**சிதைவடைந்த தாளினை மீட்டலில் வங்கியின் பங்கு என்ன?**

What is the Banks role in mulilated note redemption?

பழுதடைந்த தாள் மீட்சிப் பணியினை வங்கி இலவசமாக வழங்குகின்றது. இதில் அனுபவமிக்க அதிகாரிகளினால் பழுதடைந்த தாள்கள் மிக அவதானமாக பரீட்சிப்பதும் உள்ளடங்கும். சிதைந்த/ பழுதடைந்த தாள்கட்கான கொடுப்பனவு நாணயச் சட்டவிதிகளில் உள்ள நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ளது. இச்சட்டத்தில் உள்ளடப்பட்ட அறிவுறுத்தல்கட்கமய பெறுமதிக் கொடுப்பனவு மிக இறுக்கமாக மேற்கொள்ளப்படும்.

**சிதைந்த / பழுதடைந் தாள்என்றால் என்ன?**

What is a mutilated / Damaged note?

ஒரு வங்கித்தாள் சிதைவடைந்திருக்கும்போது அதன் பெறுமதியினை நிர்ணயிப்பதற்கு அதன் நிலையினை மிகச்சிறப்பாகப் பரீட்சிக்க வேண்டும். அத்தகைய தாள்கள் எரிக்கப்பட்டோ, கிழிக்கப்பட்டோ, பழுதடைந்தே , சிறுதுண்டாக்கப்பட்டோ சிதைவடைந்து இருக்கலாம்.

**சிதைந்த / பழுதடைந்த தாளினை என்ன செய்ய வேண்டும்.**

what should I do if I have a multilated or damaged note?

பொது மக்கள் சிதைவடைந்த தாள்களை இலங்கை மத்திய வங்கிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அல்லது மத்திய வங்கியின் பணம் செலுத்தும் பீடத்தில் உள்ள ஒருவரிடம் ஒப்படைக்கலாம். அத்தகைய தாள்கள் வங்கி விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் 9.00மணி தொடக்கம் 12.00மணிவரை திங்கள் முதல் வெள்ளிவரை கொழும்பிலுள்ள மத்திய வங்கியில் தலைமையகத்தில் காசு செலுத்தும் பீடத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

இத்தகைய தாளினை அனுப்புவதற்கு / நாணயம் தொடர்பான தகவல்கட்காக வங்கியில் தொடர்பு விலாசம்.

நாணயக்கணிப்பாளர்
இலங்கை மத்தியவங்கி
த.பெ. இல. 590
கலாநிதி மாவத்தை
கொழும்பு-01
தொலைபேசி:- 941124 77363, 9411 2477028, 941124 77055

*Reference:- www.cnsl.gob.ik.*

# ஆசியாவின் ஆலயங்களும் அமெரிக்காவின் ஆலைகளும்



S.Mathanagobi
A/L 2008 Commerce
Jaffna Hindu College



ஆசியாக் கண்டத்தைப் பொறுத்தவகையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளையே தன்னகத்தே கொண்டுள்ளது. அதன் காரணமாக இங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரம் குறைவாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக பல்வேறு வகையான மூடநம்பிக்கைக்கும் பல்வேறு வகையான பழக்க வழக்க வழக்கங்களும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன இதன் காரணமாக குறிப்பிட்ட நாடுகளின் பொருளாதாரம் அந்நாட்டு மக்களுக்கு தெரியாமலே அவர்களாலேயே அழிக்கப்படுகின்றன. மேலும் அவர்களின் அறியாமையைப் பயன்படுத்தி சில தீயசக்திகளால் குறிப்பிட்ட நாடுகளின் பொருளாதாரம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது.

இவ்வாறு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஒரு ஊருக்கு 10-15வணக்கஸ்தலங்களிற்கு மேல் அமைக்கப்பட்டிருக்கின்றது. மேலும் பல வணக்கஸ்தலங்கள் அமைக்கப்பட்டு கொண்டிருக்கிறது. இதனால் அதற்காகப் பல கோடிக்கணக்கான பணம் செலவிடப்படுகின்றது. இதன் மூலமாகச் சிலர் நன்மை அடைகிறார்கள். வணக்கஸ்தலங்கள் என்பது ஊரில் வாழும் மக்களுடைய ஆன்மாக்களை அமைதி அடையச் செய்யும் வகையிலே உருவாக்கப்பட்டு உள்ளது. ஒரு ஊரில் சில குறிப்பிட்டளவு வணக்கஸ்தலங்கள் இருந்தால் மட்டும் போதுமானது அதற்காக 10-15வரையான வணக்கஸ்தலங்கள் தேவைதானா?

ஒரு ஊரில் பல வணக்கஸ்தலங்கள் காணப்படுவதன் மூலமாக பல விழாக்கள் நடைபெறுகின்றன. இதன் காரணமாகப் பலர் தமது உற்பத்தி நடவடிக்கைகளைக் கைவிட்டு விட்டு இவ்வணக்கஸ்தலங்களில் தமது பொழுதைக் கழிக்கின்றனர். இதன் மூலமாக ஊழிய வளம் நிறை தொழில் மட்டத்தில்

பயன்படுத்தப்படாமல் போகின்றது.இவ்வாறு உற்பத்தியின் அளவு குறைவடைவதால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைகின்றது.

மேலும் ஆசிய நாடுகளில் அரச அதிகாரிகளினால் வணக்கஸ்தலம் அமைக்கவும் அவற்றின் விஸ்தரிப்புக்காகவும் பல கோடிக் கணக்கான பணத்தினை ஒதுக்குகின்றனர். இவ்வாறு ஒதுக்கப்படும் நிதியினை ஒரு தொழிலில் அரசாங்கம் உட்பட்ட ஏனைய அமைப்புக்கள் முதலீடு செய்யுமாக இருந்தால் அதன் மூலமாகக் குறிப்பிட்ட தொகைப் பணத்தினை இலாபமாகப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் அரசும் தமக்குத் தேவையான வரி வருமானத்தை பெற்றுக் கொள்ள முடிவதுடன் அந்நாட்டின் தேசிய உற்பத்தி அதிகரிக்கின்றது. இதன் மூலமாக அந்நாடுகளை பொருளாதாரத்தில் உறுதிநிலை அடையச் செய்ய முடியும்.

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் ஆசிய நாடுகளைப் போன்று பெருமளவு வணக்கஸ்தலங்கள் அமைக்கப்படவும் இல்லை அதற்காகப் பெருமளவு நிதிகள் ஒதுக்கப் படுவதுமில்லை. அதற்கு மாறாக அமெரிக்கா போன்ற 1ம் மண்டல நாடுகள் அந்நிதியினை ஏனைய முதலீட்டு வாய்ப்புக்களிலே முதலிடுகின்ற இதன் மூலமாக அவை பொருளாதாரத்தில் மேலும் உறுதிநிலை அடைகின்றது. உலகின் பொலிஸ்காரன் எனும் அளவிற்கு அமெரிக்கா அனைத்து துறைகளிலும் முன்னிலை அடைந்ததிற்கு அதன் திட்டமிட்ட முதலீடுகளே மூல காரணமாக அமைகின்றன என்பதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. மேலும் அந்நாடுகள் தங்கள் நாட்டில் முதலிட்டு விட்டு மேலதிக முதலீட்டை இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் முதலிடுகின்றன.

மேலும் நாங்கள் தற்போது 21ம் நூற்றாண்டிலே வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். தற்போது வணிக உலகில் கணனிப் பயன்பாடும் மேலும் பல இலத்திரனியல் சாரனங்களின் பயன்பாடும் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் மட்டும் அல்லது பிறநாடுகளுடன் தொடர்பு கொள்ள உலகப் பொது மொழியான ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் தற்போது உரணப் படுகின்றது இவை அனைத்தும் இருந்தால் மட்டுமே நவீன உலகில் போட்டி போட்டு ஆசிய நாடுகளும் பொருளாதாரத்தில் உறுதி நிலை அடையப் பெற முடியும் இதற்காக உரிய அதிகாரிகள் வணக்க தலம் மீதான தமது முதலீட்டைக் குறைத்து மேற்கூறப்பட்ட முதலீட்டில் முதலிடுவார்களா?

மேலும் அமெரிக்கா போன்ற நாடுகளை உதாரணமாகக் கொண்டு ஆசிய நாடுகளும் தமது வணக்கஸ்தலம் மீதான முதலீட்டைக் குறைத்து அதனை ஆலைகள் அமைப்பதில் ஈடுபடுத்த முடியும். ஒரு ஆலையை அமை ப்பதால் 100 வணக்கஸ்தலங்களைக் கட்டிய மன அமைதி ஏற்படும் (அந்நாட்டின் மக்களின் பொருளாராத்தை வளப்படுத்துவதன் மூலம்) எனவே தயவு செய்து இதனை உரிய தரப்பினர் ஏற்று செயல்வடிவம் கொடுக்க முன்வர வேண்டும். அவ்வா.று செய்தவன் மூலமாக 1ம் மண்டல நாடுகளின் விண்வெளி வீரர்கள் விண்வெளியிலிருந்து நத்தார் தின வாழ்த்து அனுப்பியது போலவே 2015ம் ஆண்டளவில் எமது ஆசிய நாடான இலங்கையின் விண்வெளி வீரர்களும் விண்வெளியிலிருந்து பூமியில் உள்ளவர்களிற்கு வாழ்த்து அனுப்பும் காலம் மலரும் எனவே இவை அனைத்திற்கும் அத்திவாரமாக எமது ஆசிய நாடுகள் மேற்கொள்ளும் அனைத்துச் செலவுகளையும் ஆலை அமைப்புக்கும் ஆராய்ச்சி அபிவிருத்திக்கும் கணனிக்கல்விக்கும் முதலிட்டால் ஆசிய நாடுகள் அமெரிக்கா போன்று வல்லரசு ஆகும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

# ஹற்றன் நஷனல் வங்கியின் கடன் திட்டங்கள்



V.Thamonuthan
A/L 2008 Commerce
Jaffna Hindu College



1) சாந்தி வீடமைப்புக் கடன் திட்டம் (Shanthi home Loans)
2) தனிநபர் கடன்திட்டம் (Personal Loans)
3) வாகனக் கடன்கள் (Vehicle Loans)
4) கல்விக்கான கடன்கள் (Educational Loans)

### சாந்தி வீடமைப்புக் கடன் திட்டம்

இக்கடன் திட்டமானது நிலம், வீடுகளை கொள்வனவு செய்தல், வீடுகளை நிர்மாணித்தல், பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை பூர்த்தி செய்தல் போன்ற பல திட்டங்களுக்கு பயன்படுகிறது.

இக் கடன் திட்டத்தில் கடன் பெறுவதற்கு பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

1) அரச / தனியார் பகுதியில் தொழிலாளராக இருத்தல் வேண்டும்.
2) முயற்சியாளராக இருத்தல்
3) வேலைவாய்ப்புடையவராக இருத்தல் வேண்டும்
4) சீரான மாத வருமானம் பெறும் இலங்கையராக இருத்தல் வேண்டும்
5) இக்கடனை தனியாக அல்லது கூட்டாக பெற்றுக் கொள்ள முடியும்.

### இக்கடன் திட்டத்தின் அறிவுறுத்தல்கள்

1) சாந்தி வீடமைப்புக் கடன் திட்டத்தில் யாராவது வாடிக்கையாளர் ஒரு மில்லியனிற்கு மேல் கடன் பெறுவாராயின் அவ் வாடிக்கையாளர் தனது பிள்ளைகளுக்கு சி.றுவர் சேமிப்பான சிங்கிதி சேமிப்புக் கணக்கை திறந்து கொள்ள வேண்டும். அதில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் பணத்தை வைப்புச் செய்ய வேண்டும். இச் சேமிப்பானது அவர்களது குழந்தை களின்12வயதிற்குள் மட்டுமே செல்லுபடியாகும்.

2) போட்டி அடிப்படையில் நிலையான அல்லது மாறும் வட்டிவீதம் வழங்கப்படும்.
3) கடன் மீள்செலுத்தும் காலம் 25 வருடத்திற்கு உட்பட்டதாக காணப்படும்.
4) 12மாதங்களுக்கு உட்பட்டதான கடன் மீள்செலுத்தும் தயைகாலம் வழங்கப்படும்.

## தனிநபர் கடன்திட்டம்

ஹற்றன் நஷனல் வங்கியானது சுபஸ்ரீ கடன்திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இக் கடன் திட்டத்தில் கடன்பெறுவதற்கு பின்வரும்தகைமைகள் காணப்பட வேண்டும்

1) கடன்பெறுபவர் 24-50வயதிற்கு இடைப்பட்டவராக இருக்க வேண்டும்.
2) நல்ல நிலையிலுள்ள நிறுவனமொன்றின் ஊழியராக அல்லது உரிமையாளராக இருத்தல் வேண்டும்.
3) தேறிய மாத வருமானமாக குறைந்தது 20000/= உழைக்க வேண்டும்.
4) கடனுக்கான பாதுகாப்பிற்காக தனிப்பட்ட உத்தரவாதமாக இரு நபர்கள் உத்தரவாதம் வழங்க வேண்டும்.

இக் கடன் திட்டத்தின் மூலம் திருமணம், வாகனங்கள், கொள்வனவு, பயணங்கள், கல்வி, வீடு அபிவிருத்தி போன்றவற்றுக்கு கடன் பெற்றுக் கொள்ள முடியும்.

### இத்திட்டத்தில் கடன் பெறுவதாயின்

1) கடன் பெறும் அளவு 50000ற்கு மேலாக இருக்க வேண்டும்
2) நான்கு வருடங்களினுள் மீளச் செலுத்த வேண்டும்
3) கவர்ச்சி கரமான வட்டி
4) சமமான தவணைக் கொடுப்பனவு முறையில் கடன் செலுத்தலாம். வட்டி குறைந்து செல்மீதி முறையில் கணிக்கப்படும்.

இந் நிபந்தனைகளுக்கு உடன்படின் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அதனுடன் பின்வரும் ஆவணங்களையும் ஒப்படைக்க வேண்டும்.

1) தொழில் வழங்குனர் உறுதிப்படுத்திய சம்பளத்துண்டு
2) தொழில் வழங்குனரிடம் இருந்து தொழில் தொடர்பான விபரங்களைஉள்ளடக்கிய கடிதம்
3) தேசிய அடையாள அட்டை / சாரதி அனுமதிப் பத்திரம் / கடவுச்சீட்டினது பிரதி ஒப்படைக்கப்பட வேண்டும்.
4) கடந்த ஆறு மாதங்களுக்கான வங்கிக் கூற்று ஒப்படைக்க வேண்டும்.
5) உங்கள் வதிவிட முகவரியை உறுதிப்படுத்திய நீங்கள் உபயோகப்படுத்துகின்ற தொலைபேசி மின்சாரப் பற்றுச்சீட்டின் பிரதி

## கல்விக்கான கடன்திட்டம்

இத்திட்டமானது பல வகையான கல்வித்தேவைகளுக்கு உதவுகிறது. இத்திட்டம் மூலம் பட்டம் பெறாத மாணவர்கள், பட்டம் பெற்றோர், தொழில் புரியும் மாணவர்கள், பெற்றோர்களுக்கு எதிர்கால வேலைவாய்ப்புக்களுக்காக வசதிகளை கொடுத்து வருகிறது. இத் திட்டத்தில் பெற்றோர்களுடன் இணைந்து அல்லது தனியாக அல்லது பெற்றோர் ஒருவர் கடன் பெறுவதற்கு தனது கடன் தேவைக்கு பொருத்தமான அளவில் கடன் மீளச் செலுத்தும் அளவினை உறுதிப்படுத்த வேண்டும்.

இக்கடன் திட்டத்தில் கடன் பெறுவதற்கு பின்வரும் தகுதிகள் தேவைப்படலாம்.


1) 18வயதிற்கு மேற்பட்ட மாணவராயின் குறைந்தது இரு வருடங்கள் வேலை செய்து இருக்க வேண்டும். அத்துடன் கடன் மீளச் செலுத்தும் ஆற்றலை நிரூபிக்க வேண்டும்.
2) பெற்றோராயின் 2 வருடங்களுக்கு மேலாக தொழில் புரிய வேண்டும். அத்துடன் தனது வருமானத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

இக்கடனைப் பெற்றவர்கள் 5 வருடங்களுக்குள் கடனை மீளச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தில் 300000/= வரை கடன் பெறுவதாயின் ஏற்றுக் கொள்ளப்பட்ட 2 நபர்கள் வங்கிக்கு உறுதிப்படுத்த வேண்டும். 300000/=க்கு அதிகமாயின் திடமான பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

# 'Swot' ஆய்வு



K.Mahindan
A/L 2009 Commerce
Jaffna Hindu College



நிறுவனமொன்றின் அகச் சூழலிலும் புறச்சூழலிலும் காணப்படும் பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் எவையென இனங்கண்டு கொள்ளும் ஆய்வு Swot ஆய்வு ஆகும். ஆகவே Swot ஆய்வு ஆனது

**S** treanths
**W** eakness
**O** pportunities
**T** hreats

என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்தலேயாகும்.

நிறுவனத்தின் பலம், பலவீனம் என்பவற்றினை ஆய்வு செய்வது உள்ளக சூழலாய்விலும் வாய்ப்பு, அச்சுறுத்தல் என்பவற்றினை ஆய்வு செய்வது வெளியக சூழலாய்விலும் அடங்கும். இதன் மூலமாக நிறுவனத்துக்கு நன்மை தரக் கூடிய வகையில் ஏற்படும் வாய்ப்புக்களை கண்டறியவும் நிறுவனத்துக்கு ஏற்படும் அச்சுறுத்தலை இனங்கண்டு அதனைத் தவிர்த்து நிலைக்கும் வழிகளை செய்வதற்கும் உதவுகிறது.

நிறுவனமொன்றுக்கு அகச் சூழலில் பலமாக அமையும் விடயங்கள்

- பயிற்சிபெற்ற ஊழியர்
- பேரளவான மூலதனம்
- சிறந்த முகாமைத்துவம்
- ஆரோக்கியமான வேலைச் சூழல்

- நிறுவனமொன்றுக்கு அகச் சூழலில் பலவீனமாக அமையும் விடயங்கள்
  - மூலதனப்பற்றாக்குறை
  - ஊழியர் பற்றாக்குறை
  - திறனற்ற முகாமைத்துவம்
  - தொழில் தகராறுகள்

நிறுவனமொன்றுக்கு புறச் சூழலில் வாய்ப்பாக அமையும் விடயங்கள்

- மானியம் வழங்கல்
- அமைதியான அரசியல் சூழல்
- சாதகமான காலநிலை
- கடன்களுக்கான குறைந்தவட்டி

புறச்சூழலில் அச்சுறுத்தலாக அமையும் விடயங்கள்

- அரசு வரிவிதித்தல்
- யுத்த நிலைமைகள்
- பணவீக்கம்
- இயற்கை அழிவுகள்

## SWOT ஆய்வின் பகுதிகள்

**I. பலங்கள்**
முயற்சியாளரால் கட்டுப்படுத்தக் கூடியதும் பலவீனங்களை குறைப்பதற்கு பயன்படுத்தப் படுபவையும் பலங்கள் ஆகும்.

**II. பலவீனங்கள்:**
முயற்சியாளரால் கட்டுப்படுத்தக் கூடியதும் அவரினால் குறைக்கப்பட வேண்டியதுமான அம்சங்கள் பலவீனங்களாகும்.

**III. சந்தர்ப்பங்கள்:**
முயற்சியாளருக்கு நன்மையை பெற்றுத்தரக் கூடியதும் அவரினால் கட்டுப்படுத்த முடியாததுமான காரணிகள் சந்தர்ப்பங்கள் ஆகும்.

**IV. அச்சுறுத்தல்கள்:**
சூழலில் காணப்படும் எதிர்மறையான நிறுவனத்தினால் கட்டுப்படுத்த முடியாத நிறுவனத்துக்கு தீங்கிழைக்க கூடிய காரணிகள் அச்சுறுத்தல்களாகும்.

முயற்சியாளர் உற்பத்திப் பொருளுக்கான SWOT ஆய்வினை மேற்கொள்ளும் போது உள்ளடக்க வேண்டிய அம்சங்கள்

i. நிறுவனத்தின் நிதிசார் அம்சம்
ii. பௌதீக வளங்கள்
iii. நிறுவன முகாமைத்துவம்
iv. சந்தையும் உற்பத்தி பொருட்களும்
v. மூலப்பொருள் வழங்கல்
vi. சமூகச்சூழல் காரணிகள்

## SWOT ஆய்வின் உபயோகங்கள்:-

i. உற்பத்தி பொருட்களை இனங்காணல்
ii. செயற்திட்டத்தினை இனங்காணல்
iii ஆற்றல்களை இனங்காணல்

உசாத்துணை : தேனமுதம் 2000

# வணிக துளிகள்



T.Piranavan
A/L 2008 Commerce
Jaffna Hindu College

**பாவனையாளன்**

உற்பத்தியாளரால் அல்லது வியாபாரியால் பிரதிபயனுக்காக கிடைக்க செய்யப்படும் எவையேனும் பண்டங்களின் அல்லது சேவைகளின் உண்மையான அல்லது எதிர்கால பயன்படுத்துனரே பாவனையாளராவார். அதிகாரசபை சட்டத்தில் தரப்பட்டுள்ள இந்த விளக்கத்தின்படி எல்லோருமே பாவனையாளர்கள் தான்.

**நுகர்வோர் என்றால் யார்?**
**<u>சட்ட பொருள் கோடல்</u> என்ன?**

வியாபாரியாலோ அல்லது உற்பத்தியாளராலோ விலை ஒன்று நிர்ணயிக்கப்பட்ட பொருள் ஒன்றை அல்லது சேவை ஒன்றை கொள்முதல் செய்து பயன்படுத்துபவன் அல்லது பயன்படுத்துவான் என்று எதிர்பார்க்கப்படுபவன் நுகர்வோன் என்று இனங் காணப்படுகிறான் என்று சட்டம் நுகர்வாளன் தொடர்பில் <u>பொருள் கோடல் செய்கிறது.</u>

**நுகர்வாளர் உரிமை தொடர்பான சட்டங்களின்படி பின்வரும் உரிமைகளும், பாதுகாப்புக்களும் பாவனையாளர்களுக்கு உள்ளன.**

- உடல்நலம் தொடர்பான பாதுகாப்புக்கான உரிமை
- தகவல் பெற்றுக் கொள்வதற்கான உரிமை
- தெரிவு செய்வதற்கான உரிமை
- நுகர்வோர் சங்கங்கள் உண்டாக்கி தனது கருத்துக்களை வெளிப்படுத்தவும், பரிமாறிக்கொள்ளவும் உள்ளஉரிமை

- நுகர்வோர் கல்வி பெறுவதற்கான உரிமை
- ஏதேனும் சலுகைகள் கழிவுகள் பெறுவதற்கான உரிமை
- அடிப்படை உரிமைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான உரிமை
- சூழல் பாதுகாப்பை பெற்றுக்கொள்வதற்கான உரிமை

### ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் வழிகாட்டி ஆலோசனை விதிகள்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் 1985ம் ஆண்டு ஏப்ரல் 9ம் திகதி நுகர்வாளரின் பாதுகாப்பு தொடர்பில் சர்வதேசரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க வழிகாட்டி, ஆலோசனை விதிகள் பலநாடுகளினதும் இணக்கப்பாட்டுடன் ஏற்படுத்தப்பட்டது.

இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு அங்கத்துவ நாடாக இருப்பதினால் இதனை ஏற்று நடக்க வேண்டும் என்ற கடப்பாட்டினை கொண்டுள்ளது. இந்த வழிகாட்டி விதிகள் பின்வரும் நோக்கங்களை கொண்டுள்ளன.

01. மக்களுக்கு, நுகர்வோருக்கான பாதுகாப்பினை பெற்றுக் கொடுப்பதும் அத்தகைய பாதுகாப்பினை நற்பிரஜைகளுக்கு பெற்றுகொடுக்கும் நாடுகளுக்கு உதவி செய்தல்

02. சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில்இடம்பெறும் வர்த்தக நடவடிக்கைகளின் போது நுகர்வோன் மீது அநீதியான முறையில் இடம்பெறும் வர்த்தக அத்துமீறல்களை தடுக்கும் செயற்பாடுகளில் நாடுகளுக்கு உதவுதல்.

03. நுகர்வோனை பாதுகாப்பது தொடர்பில் சர்வதேச ஒத்துழைப்பை அதிகரிக்க செய்தல்

### பாவனையாளர்கள் பாதுகாப்பு தொடர்பில் உருவாக்கப்பட்ட சட்டங்கள்

- 1950ஆம் ஆண்டின் 29ம் இலக்க விலைச்சட்டம் :
  இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட முதலாவது சட்டம் இதுவாகும்.

- 2003ம் ஆண்டு 9ம் இலக்க நுகர்வோர் விவாகாரத்துக்கான அதிகாரசபை சட்டம் :
  இலங்கையின் பொருளாதாரத்தினை முற்றுமுழுதான ஒரு திறந்த சந்தை வர்த்தக பொருளாதாரமாக மாற்றியமைப்பதினை நோக்கமாக கொண்டு இச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

  இதில் 2 பிரதான அம்சம் காணப்பட்டன.
  01) நுகர்வோனை பாதுகாத்தல்
  02) நியாய வர்த்தக நிலமையை தோற்றுவித்தல்

  இவை 2 சட்டங்கள் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்பட்டன.
  01. நுகர்வோன் பாதுகாப்பு சட்டம்
  02. நியாய வர்த்தக ஆணைக்குழு சட்டம்

### நுகர்வோன் விவாகாரங்களுக்கான அதிகாரசபை :

- இவ் அதிகாரசபை கூட்டுத்தாபனத்தை ஒத்த அமைப்பாக காணப்படுகிறது.
- ஒரு தலைவரையும் 10 அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது.

## நோக்கம் :

1) நுகர்வாளனின் உயிர் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தும் வகையி பண்டங்கள் சேவை விற்பனை செய்தலுக்கு எதிராக நுகர்வோனை பாதுகாத்தல்
2) அநீதியான வர்த்தக கொள்கையிலிருந்து நுகர்வோரை பாதுகாத்தலும், மற்றும் நுகர்வோன் உரிமைகளை பாதுகாத்தலை அத்தாட்சிபடுத்தல்
3) கூடுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் நுகர்வாளனுக்கு நியாயமான விலையில் பண்டங்கள் சேவைகளை பெற்றுக் கொடுத்தல்
4) நியாயமற்ற வர்த்தக கொள்கை, வரையறுக்கப்பட்ட வர்த்தககொள்கை மற்றும் வர்த்தகர்களால் மேற்கொள்ளப்படும் சுரண்டல் நடவடிக்கைகள் முதலானவற்றிற்கு எதிராக பரிகாரம் பெற்றுக் கொடுத்தல்.

## தேசிய தரவாரம் (8 - 14 October)

**தரத்தின் விபரம்:**

01) தரம் என்பது வாடிக்கையாளரின் திருப்தி
02) தரம் என்பது குறிப்பிட்ட தேவைகளை நிறைவு செய்தல்
03) தரம் என்பது பாவனைக்கான உறுதி
04) தரம் என்பது பணத்திற்கான பெறுமதியாகும்.
05) தரம் என்பது பிழைகள் இல்லையென காட்டுவதாகும்.
06) தரம் என்பது நம்பிக்கைக்குரிய உத்தரவாதம்
07) தரம் என்பது திறமை, மற்றும், உற்பத்தி திறமையாகும்
08) தரம் என்பது இலாபத்திற்கான முதலீடாகும்
09) தரம் என்பது திறமைக்கான மறையான முயற்சியாகும்.

- தரங்களுக்கான சர்வதேச நிறுவனம் (ISO)
- சர்வதேச தொலைத் தொடர்பு யூனியன் (ITU)
- தொனிப்பொருள் "தரமும் மக்களும், சமூகத்திற்கான பங்களிப்பும்"

Address:-

இலங்கை கட்டளை பணியகம்
17 விக்டோரியா பிளேஸ், எல்லிட்டிகல
மாவத்தை, கொழும்பு -8

- பசுமை மாதம் Oct - 15 - Nov 15 ஆக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**நுகர்வோன் பாதுகாப்புச்சட்ட திருத்தம் :**

விற்பனைச் சந்தையில் ஏக போகத்தை கொண்டுள்ள வர்த்தக நிறுவனங்களின் திடீர் விலை அதிகரிப்பை மேற்கொள்வதை தடுப்பதற்காக சபைக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- உள்ளூர் விவசாயிகளின் நலனுக்காக 5ம் ஆண்டு திட்டம் நடைமுறைக்கு வருகிறது.
- Pc house நிறுவனம் : இலங்கையில் முன்னணி தகவல் தொழில்நுட்ப தீர்வு வழங்குனராக காணப்படுகின்றது (IT)

- Srilanka Telecom(SLT) இன் "அகன்ற பட்டை" உற்பத்திகள் (Broad band)
  1. Entree பொதி 2. Home express 3. Office express
- வறுமை ஒழிப்பு தினம் :- October - 16
- ச.தொ. செயலக கட்டடம்
  27, லொக்ஷோல் வீதி
  Colombo 2

## பௌதீக திட்டமிடலுக்கான முக்கிய காரணம்:

01) உலகமயமாக்கலில் இலங்கையின் நிலையை தாபித்தல்
02) ஏற்றுமதி
03) தாங்கக்கூடிய
04) ஒன்றிணைந்த சமூகத்தினரின் குடியமர்வுகளின் வலைப்பின்னல்
05) அழியத்தக்க பகுதிகளை பாதுகாத்தல்
06) இயற்கை அனர்த்தங்களின் தாக்கங்களை குறைத்தல்
07) வலிமைமிக்க பாரிய பிராந்திய நகரங்களின் வளர்ச்சி
08) ஆதார அமைப்பு மற்றும் சேவைகளை அளித்தல்
09) காணி பாவனை, போக்குவரத்து மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை ஒன்றிணைத்தல்
10) பிராந்திய ஒப்புநிலையற்ற தன்மையினை குறைத்தல்

- 2003ம் ஆண்டு 3ம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தினால், பாவனையாளர் அதிகாரசபையானது ஸ்தாபிக்கப்பட்டு 2003ம் ஆண்டு July மாதம் 1ம் திகதி நடைமுறைக்கு வந்தது.

## "ஹலால்" சான்றிதழ்

<u>2003ம் ஆண்டு 9ம் இலக்க</u> பாவனையாளர் விவகார அதிகார சட்டம் 10இன்படி 1ம், 2ம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினால் நுர்வோர் விவகார அதிகாரசபையானது ஒரு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் "ஹலால்" என உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் பெற்றுக் கொள்ளாவிட்டால் எந்த உற்பத்தியாளரோ, விற்பனையாளரோ, விநியோகஸ்தரோ "ஹலோ" என்ற சொற்பதத்தை அல்லது அத்தகைய அர்த்தத்தை கொடுக்கும் விளக்கபடத்தை அல்லது அடையாளத்தை கொண்ட உணவு வகை அல்லது குளிர்பானவகை உற்பத்தி செய்யவோ, விற்பனை செய்யவோ, விநியோகம் செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ முடியாது என அறிவுத்துள்ளது.

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின்:

27வது சரத் :- வியாபார நிறுவனம் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என குறிப்பிடுகின்றது.

28வது சரத் :- வியாபாரிகள் பொருள் விற்பனையின் போது பற்றுச்சீட்டு வழங்குதலை குறிப்பிடுகின்றது.
இதன் நோக்கம்: பாவனையாளரை ஊழல் மோசடியிலிருந்து பாதுகாக்க சான்று பொருள் ஆகும்.

13(அ) பிரிவு : பொருளின் தரம், நியமம் பற்றி குறிப்பிடுகின்றது.
S : சீமெந்து, Tin fish, தீப்பெட்டி

இலங்கையின் தகவல் தொழில்நுட்ப தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் தேசிய IT - BPO மாநாடு 2007ற்கு Microsoft ஆதரவு அளிக்கின்றது.

- தகவல் தொழில்நுடபத்தில் காணப்படும் Digital இடைவெளியினை ஈடுசெய்து கொள்ளளவினை கட்டியெழுப்பும் நோக்கோடு August 31 2007ல் இடம்பெற்ற தேசிய தகவல் தொடர்பாடல் கொள்ளளவு மாநாட்டை தொடர்ந்து 2007 Sep 1,2 வரை IT-BPO தொழில் வாழ்க்கை வழிகாட்டி சந்தை இடம்பெற்றது.

**நோக்கம்:**

01) தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பதுறையில் மனிதவள கொள்ளளவினை மேம்படுத்தும் தேவையினை பூர்த்தி செய்தல்

02) நாட்டில் தற்போது காணப்படும் ஆற்றலின் முகமாக உயர்ந்த பட்ச பயனை அறுவடை செய்யதல்

03) இதில் உள்ள மகத்தான வாய்ப்புகளை மாணவவரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, இத்துறைக்கு இளம் தலைமுறையை கவர்ந்திருப்பதாகும்.

- பற்று சீட்டுக்களில் காணப்படும் தகவல்கள் : (சட்டத்தின் பரிவு 8)

01) விற்பனை திகதி

02) விற்பனை செய்த பண்டங்களின் அளவு

03) அத்தகைய அளவுக்கு செலுத்தப்பட்ட விலை

04) கொடுக்கல் வாங்கல்களின் தன்மை (மொத்த விற்பனையா, சில்லறை விலையா)

- தொழில்சார் அமைப்புகளின் ஒன்றியம் (OPA)
  இணைப்பு காரியாலயம் (Laision Office)

- நுகர்வோரின் வழக்குகளை விசாரிப்பதற்கென தனியான ஒரு நீதிமன்றத்தை அமைக்கப் போவதாக "நுகர்வோர் செயற்பாட்டு அதிகாரசபை" கூறியுள்ளது (Radio News- 30.11.2007)

- (Srilanka Telecom) இலங்கையில் தொலைத்தொடர்பாடல் துறையின் 150 ஆண்டு பூர்த்தியை கொண்டாடும் முகமாக 'Making the Connection- SLT, 150 years of Tele communicatiuon in Srilanka என்ற நூலை வெளியிட்டுள்ளது.

- முன்னணி விநியோகிஸ்தவர்களுக்கு சியெட் "Ceat" ரயர் உற்பத்தி நிறுவனம் கௌரவம் **(நாட்டின் முன்னணி வாயு மூலமான ரயர் உற்பத்தி நிறுவனம்)**
  இலங்கைக்கான பிராந்திய விநியோகிஸ்தராக "ஐகன் ரிசோர்ஸஸ்" நிறுவனம் AMD ஆல் நியமனம் பெற்றுள்ளது.

- கணனி கிரபிக்ஸ் மற்றும் நுகர்வோன் இலத்திரன் சந்தையில் புதுமை மிக்க செயன்முறை தீர்வை வழங்கும் உலகின் முன்னணி நிறுவனமான AMD (Advanced Micro Devices) இலங்கை, பங்களாதேஸ், மற்றும் நேபாள் ஆகிய நாடுகளுக்கிடையிலான தனது பிராந்திய முகவராக "ஐகன் ரிசோர்ஸஸ் அன்ட் டெக்னொலாஜிஸ்" நிறுவனத்தை நியமித்துள்ளதை அறியத்தருகின்றது.
-
- செலான் மோச்சன்ட் லீஸிங் லிமிட்டெட் (SMLL) ஆனது இலங்கையில் முன்னொரு பொதும் இல்லாதவாறு தமது ஆயிரக்கணக்கான வாடிக்கையார்களுக்கு "Visa ATM" அட்டை வசதியை வழங்கும் முதலாவது நிதி கம்பனியாக இன்று மாறியுள்ளது. இதனது "Super Saving" சேமிப்பு கணக்கினை பேணும் அனைத்து வாடிக்கையாளருக்கும் இந்த சேவையை விஸ்தரித்துள்ளது.

**பாவனையாளர்கள் கடமைகள் பொறுப்புகள் பற்றி "சர்வதேச பாவனையாளர் அமைப்பு" கூறியுள்ளது விடயங்களானः**

i. புரிந்துணர்வு
ii. செயலூக்கம்
iii. சினேகதன்மை
i. சூழல் பற்றிய புரிந்துணர்வு
v. சகோதரத்துவம்
vi. பாவனையாளர் விழிப்புணர்வு

**வியாபாரி என்பவர் யார்?**

அ) பண்டங்களை மொத்தமாக வேறு ஆட்களுக்கு விற்பனை செய்கின்ற அல்லது வழங்குகின்ற
ஆ) சில்லறை வீதங்களில் பாவனையாளர்களுக்கு பண்டங்களை விற்பனை செய்கின்ற அல்லது வழங்குகின்ற
இ) விற்பனை அல்லது வழங்கல் நோக்கததிற்காக பண்டங்களை இறக்குமதி செய்கின்ற
ஈ) பிரதி பயனுக்காக சேவைகளை ஏற்பாடு செய்கின்ற

எவரேனும் ஒரு ஆள் பாவனையாளர் விவகார அதிகார சபை சட்டத்தின்படி வியாபாரி என கருதப்படுகின்றது.

**பாவனையாளர் விவகார அதிகாரசபையின் குறிக்கோள்கள் யாவை?**

01. பாவனையார்களின் உயிருக்கும் ஆதனத்துக்கும் தீங்கு விளைவிப்பதான பண்டங்களை சந்தைப்படுத்துவதற்கெதிராக அல்லது சேவைகளை வழங்குவதற் கெதிராக பாவனையாளர்களை பாதுகாத்தல்
02. நியாயமற்ற வியாபார பழக்கங்களுக்கு எதிராக பாவனையாளர்களை பாதுகாத்தல், மேலும், பாவனையாளர் நலனுக்கு போதியளவு கவனஞ் செலுத்தப்படுமென்பதற்கு உத்தரவாதமளித்தல்
03. இயலுமான விடத்தெல்லாம் பாவனையாளர்கள்நியாயமான விலைகளில் பண்டங்களையும் சேவைகளையும் போதியளவு பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துதல்
04. நியாயமற்ற வியாபார பழக்கங்கள், மட்டுப்படுத்தப்பட்டவியாபார பழக்கங்கள், அல்லது வேறு வகைப்பட்ட வழிகளில் வியாபாரிகளினால் பாவனையாளர் சுரண்டப்படுதல் என்பவற்றுக்கு எதிராக நிவாரணம் தேடுதல்.

- **இலங்கையின் முதல்தர குத்தகை கம்பனி எது?**
  PeopleLeasing Company (PLC)
  இந்நிறுவனம் மக்கள் வங்கியின் இணை நிறுவனமாகும்.

- தேசிய சமுர்த்தி முகாமை சங்கத்தின் 11வது மாநாடு இலங்கையில் நடைபெறுகின்றது.

- சர்வதேச மூலதன சந்தையில் புதிய எந்தவொரு நாடும் தனக்கு உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக அத்துறையில் தரமான அனுபவம் வாய்ந்த சர்வதேச பல நிறுவனங்களின் உதவிகளையும், அறிவுரைகளையும் பெறுவது விதியாகும்.


அவ்வாறு இலங்கை உதவி பெறும் நிறுவனங்கள்?

ஜேபி மோகன் நிறுவனம்
H.S.B.C Bank
பாக்லேஸ் மூலதன நிறுவனம்
Bank of Ceylon

# காசுப் பாய்ச்சல் கூற்று
# Cash Flow Statement



T. Nirojan
A/L 2008 Commerce
Jaffna Hindu College



K.Asok
A/L 2008 Commerce
Jaffna Hindu College

## 01. அறிமுகம் – *Introduction*

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம் வெளியிட்டுள்ள இலங்கைகணக்கீட்டு நியமம் 09 இன் **(S.L.A.S - 09)** அடிப்படையில் 1995ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து கம்பனிகளின் நிதியறிக்கைகளில் ஒன்றாக காசுப்பாய்ச்சல் கூற்றும் அறிக்கையிடப்பட வேண்டும் என கூறப்படுகின்றது. 1995இற்கு முன்பு காசுப்பாய்ச்சில் கூற்றுக்கு பதிலாக நிதியப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு வந்தது ஆனால் நிதிப்பாய்ச்சல் கூற்று எதிர்பார்க்கப்பட்ட விடயங்களை பூர்த்தி செய்வதற்கு போதிய தகவல்களை வழங்குவதாக அமையவில்லை. எனவே இலங்கை கணக்கீட்டு நியமம் -09.1994ம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டு அதற்கமைவான காசுப்பாய்ச்சில் கூற்று தயாரிக்கப்படுகிறது.

## 02. காசுப்பாய்ச்சல் (Cast Flow)

காசுப்பாய்ச்சல் என்பது காசும் காசுக்குச் சமனானவற்றினதும் உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல் ஆகும்.

## 03. காசு (Cash)

S.L.A.S - 09 இற்கமைய காசு என்பது கையில் உள்ள காசினையும் கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கியதாகும்.

## 04. காசுக்கு சமனானவை (Cash Equivalents)

**உயர்ந்த திரவத்தன்மை உடையதும் விரைவாக பணமாக மாறக் கூடியதும் அவ்வாறு பணமாக மாற்றும் போது ஆபத்துக் குறைவானதுமான குறுங்கால முதலீடுகளே காசுக்குச் சமனானவை எனப்படும்.**

**(உ+ம்) 1) திறைசேரி உண்டியல்**
**2) வருமதி உண்டியல்**

## 05. காசுப் பாய்ச்சல் கூற்று - வரைவிலக்கணம்

நிறுவனம் ஒன்றின் குறிப்பிட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற காசுபெறுவனவுகளையும் காசக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியதே காசுப் பாய்ச்சல் கூற்று ஆகும்.

## 06. காசுப்பாய்ச்சல் நடவடிக்கைகள்

S.L.A.S 09இன் படி காசுப்பாய்ச்சல் நடவடிக்கைகளை பின்வருமாறு 03 வகைப்படுத்த முடியும். அவை வருமாறு

1) செயற்பாட்டு நடவடிக்கைகள்
2) முதலீட்டு நடவடிக்கைகள்
3) நிதியிடல் நடவடிக்கைகள்

### (6.1) செயற்பாட்டு நடவடிக்கைகள் (Operating Activities)

நிறுவனத்தின் பிரதான வருமானத்தினை தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் இருந்து உருவாக்கப்படும் நடவடிக்கையே செயற்பாட்டு நடவடிக்கைகள் எனப்படும்.

**(உ + ம்)**

1) பொருட்கள் சேவைகள் விற்பனை மூலம் பெறப்படும் தொகை
2) ஊழியர்களுக்கான சம்பளம்
3) பொருள் சேவை வழங்கும் கடன் கொடுநர் கொடுப்பனவு
4) தனியுரிமைக்கட்டணம், தரகுகள் போன்ற வருமானம்

### (6.2) முதலீட்டு நடவடிக்கைகள் (Investment activities)

நீண்டகால சொத்துக்கள் காசுக்கு சமனற்ற முதலீடுகள் என்பவற்றின் கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகள் முதலீட்டு நடவடிக்கைகள் எனப்படும்.

**(உ + ம்)**

1) நிலையான சொத்து கொள்வனவு, விற்பனவுடன் தொடர்புபட்ட நடவடிக்கை
2) ஆதனம், பொறி இயந்திரங்கள், அருவச்சொத்துக்கள் வேறு நீண்ட காலச் சொத்துக்கள் விற்பதனால் பெறப்பட்ட காசுப் பெறுவனவுகள்

### (6.3) நிதியிடல் நடவடிக்கைகள் (Financing Activities)

நிறுவனம் ஒன்றின் உரிமை மூலதனம் மற்றும் கடன் மூலதனம் என்பவற்றின் அளவிலும் அதன் கட்டமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையே நிதியிடல் நடவடிக்கை எனப்படும்.

**(உ + ம்)**

1) பங்கு வழங்கல் மூலம் பெறப்படும் காசு, முன்னுரிமைப்பங்கு மீட்புக்கு கொடுத்த காசு
2) நீண்டகால, குறுங்கால கடன் பொறுப்புக்களைத்தீர்ப்பதற்கான காசுக் கொடுப்பனவுகள்
3) நிதிக்குத்தகை தொடர்பான குத்தகைக் கட்டணங்கள்

**07. காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் முறைகள்**

நிறுவனம் ஒன்றின் காசுப் பாய்வுக் கூற்று பின்வரும் இரண்டு முறைகளில் தயாரிக்கலாம்.

1) நேர் முறை
2) நேரில் முறை

**7.1 நேர்முறையில் காசுப்பாய்ச்சல் கூற்று**

இம்முறையில் மொத்தக் காசுக் கொடுப்பனவு விடயங்களையும் மொத்தக் காசுப் பெறுவனவு விடயங்களையும் உள்ளடக்கியதாக தயாரிக்கப்படும் கூற்று நேர்முறையான காசுப்பாய்ச்சில் கூற்றாகும்.

**நேர் முறையில் காசு பாய்ச்சல் கூற்றின்மாதிரி அமைப்பு**

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| **செயற்பாட்டுநடவடிக்கைகள்** | | |
| வாடிக்கையாளரிடம் பெற்ற காசு | | XXX |
| காசுக்கு விற்பனை | | XX |
| | | XXX |
| வழங்குனருக்கு கொடுத்த காசு | XXX | |
| காசுக் கொள்வனவு | XXX | |
| செலுத்திய செயற்பாட்டுச் செலவுகள் | XX | (XXX) |
| செயற்பாட்டிலிருந்து உருவானகாசு | | XXX |
| செலுத்திய வட்டி | XX | |
| செலுத்திய வரி | XX | |
| செலுத்திய பங்குலாபம் | XX | (XX) |
| அசாதாரண விடயங்களுக்கு முன் தேறியலாபம் | | XXX |
| +/- அசாதாரண விடய இலாபம் /நட்டம் | | XX |
| செயற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறியகாசு | | XXX |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | |
| நிலையான சொத்து கொள்வனவு | (XX) | |
| நிலையான சொத்துக்களின்விற்பனை | XX | |
| முதலீடு கொள்வனவு | (XX) | |
| முதலீட்டு வருமானம் | XX | |
| முதலீட்டு நடவடிக்கையால் தேறியகாசு | | XXX |
| **நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| பங்கு வழங்கி பெற்ற காசு | XX | |
| முன்னுரிமை பங்கு மீட்டல் | (XX) | |
| நீண்டகால கடன் வழங்கல் | XX | |
| நீண்டகால கடன் மீட்பு | (XX) | |

| | |
|---|---|
| நிதி நடவடிக்கை மூலம் தேறியகாசு | XXX |
| காசும் காசுக்கு சமமானவைகளின் அதிகரிப்பு/குறைவு | XXX |
| +ஆரம்ப காசும் காசுக்கு சமமானவை | XX |
| இறுதிக்காசும் காசுக்கு சமமானவை | XXX |

I. i) பின்வரும் உதாரணக் கணக்கின் மூலம் நேர்முறையில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுவதை காட்டலாம்.

வரை - சாரங்கன் கம்பனியின்

**31/டிசம்பர் /2007இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக்கணக்கு**

| | |
|---|---|
| விற்பனைகள் | 500,000 |
| (-)விற்பனைக்கிரயம் | (200,000) |
| மொத்தலாபம் | 300,000 |
| செயற்பாட்டுச்செலவுகள் | (100,000) |
| (பெறுமானத்தேய்வு 10000 உட்பட) | |
| செயற்பாட்டு இலாபம் | 200,000 |
| வட்டிச்செலவு | (30,000) |
| தேறியலாபம் | 170,000 |
| வருமான வரி | (70,000) |
| பகிரப்படாத இலாபம் | 100,000 |

**II. 31டிசம்பர் 2007இல்உள்ளபடியான ஐந்தொகை**

| | 2006 | 2007 |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 300,000 | 400,000 |
| (-) பெறுமானத்தேய்வு ஏற்பாடு | (70,000) | (80,000) |
| | 230,000 | 320,000 |
| முதலீடு | 50000 | 80000 |
| இருப்பு | 50,000 | 60,000 |
| கடன்பட்டோர் | 20,000 | 30,000 |
| காசு | 70,000 | 150,000 |
| | 420,000 | 640,000 |
| பங்குமூலதனம் | 200,000 | 250,000 |
| பகிரப்படாத இலாபம் | 20,000 | 120,000 |
| 15% திபெஞ்சர்கள் | 150,000 | 200,000 |
| கடன்கொடுநர் | 20,000 | 40,000 |
| வரிசென்மதி | 30,000 | 30,000 |
| | 420,000 | 640,000 |

**வேண்டப்படுவது:- 31டிசம்பர் 2007இல் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று**

வரை - சாரங்கன் கம்பனியின்

31டிசம்பர் 2007இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| **விபரம்** | **தொகை** | **தொகை** |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் | | |
| வாடிக்கையாளரிடம் பெற்றகாசு | | 490,000 |
| கடன்கொடுநருக்கு கொடுத்தகாசு | 190,000 | |
| செலுத்திய செயற்பாட்டுச்செலவு | 90,000 | (280000) |
| செயற்பாட்டிலிருந்து உருவானகாசு | | 210,000 |

| | | |
|---|---|---|
| செலுத்திய வட்டி | 30,000 | |
| செலுத்திய வரி | 70,000 | (100,000) |
| செயற்பாட்டு நடவடிக்கைமூலம் தேறியகாசு | | 110,000 |

**முதலீட்டு நடவடிக்கைகள்**

| | | |
|---|---|---|
| நிலையான சொத்துக் கொள்வனவு | (100 000) | |
| முதலீடு செய்தது | (30000) | |
| முதலீட்டு நடவடிக்கை மூலம் தேறியகாசு | | (130,000) |
| நிதியிடல் நடவடிக்கைகள் | | |
| பங்கு வழங்கி பெற்றகாசு | 50,000 | |
| திபெஞ்சர் வழங்கல் | 50,000 | |
| நிதியிடல் நடவடிக்கை மூலம் தேறியகாசு | | 100,000 |
| தேறியகாசு அதிகரிப்பு | | 80,000 |
| +ஆரம்ப காசும் காசுக்கு சமமானவை | | 70,000 |
| இறுதி காசும் காசுக்கு சமமானவை | | 150,000 |

**செய்முறை விளக்கம்**

**கடன்பட்டோர் க/கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 20,000 | காசு | 490,000 |
| விற்பனை | 500,000 | | |
| | | மீசெ | 30,000 |
| | 520,000 | | 520,000 |

**வருமான வரி கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| காசு | 70,000 | மீ/வ | 300,000 |
| | | இ/ந/பகிர் க/கு | 70,000 |
| மீ/செ | 30,000 | | |
| | 100,000 | | 100,000 |

**காசுக்கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 70,000 | செயற்பாட்டுசெலவு | 90,000 |
| கடன்பட்டோர் | 490,000 | வட்டிச்செலவு | 30,000 |
| பங்கு வழங்கல் | 50,000 | செலுத்தியவரி | 70,000 |
| திபெஞ்சர் வழங்கல் | | நிலையான சொத்து கொள்வனவு | 100,000 |
| | | முதலீடு செய்தது | 30,000 |
| | | கடன்கொடுநர் | 190,000 |
| | | மீ/செ | 150,000 |
| | 660,000 | | 660,000 |

## 02. நேரில் முறையில் காசுப்பாய்ச்சில் கூற்று தயாரித்தர்

இங்கு வரி வட்டிக்கு முன் தேறிய இலாபத்தில் இருந்து காசுத்தன்மை அற்ற விடயங்கள் தொழிற்படு மூலதனக் கூறுகள் முதலீட்டு நிதி. நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் சீராக்கப்பட்டு தயாரிக்கப்படும் காசுப்பாய்ச்சல் / கூற்றே நேரில் முறையிலான காசுப்பாய்ச்சல் கூற்றாகும்.

### மாதிரி அமைப்பு

வரை – சனா கம்பனியின் 31மார்ச் 2007இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல்

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்** | | |
| வரிவட்டிக்கு முன் இலாபம் | XXX | |
| சீராக்கல்:- பெறுமானத்தேய்வு | XX | |
| நிலையான சொத்துவிற்பனை இலாபம் | (XX) | |
| நிலையான சொத்து விற்பனை நட்டம் | XX | |
| | XXX | |
| கையிருப்பு அதிகரிப்பு | (XX) | |
| கடன்பட்டோர் குறைவு | XX | |
| கடன் கொடுநர் அதிகரிப்பு | XX | |
| செயற்பாட்டிலிருந்து உருவான காசு | XXX | |
| செலுத்திய வட்டி | (XX) | |
| செலுத்திய வரி | (XX) | |
| செயற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசு | | XXX |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | |
| நிலையான சொத்து கொள்வனவு | (XX) | |
| நிலையான சொத்து விற்பனை | XX | |
| பெற்றவட்டி, முதலீட்டு வருமானம் | XX | |
| முதலீடு செய்தது | (XX) | |
| முதலீட்டு நடவடிக்கை மூலம் தேறியகாசு | | XXX |
| **நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| பங்கு வழங்கல் | XXX | |
| செலுத்திய பங்குலாபம் | (XX) | |
| தொகுதிக்கடன்மீட்பு | (XX) | |
| தொகுதிக்கடன் விநியோகம் | XX | |
| நிதியிடல் நடவடிக்கை மூலம் தேறியகாசு | | XXX |
| தேறியகாசு அதிகரிப்பு / குறைவு | | XXX |
| +ஆரம்பகாசும் காசுக்கு சமமானவை | | XX |
| இறுதி காசும் காசுக்கு சமமானவை | | XX |

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்** | | |
| வரிவட்டிக்குமுன் இலாபம் | 200,000 | |
| **சீராக்கல் :** பெறுமானத்தேய்வு | 10,000 | |
| | 21,0000 | |
| கடன்கொடுநர் அதிகரிப்பு | 20,000 | |
| கடன்பட்டோர் அதிகரிப்பு | (10,000) | |
| இருப்பு அதிகரிப்பு | (10,000) | |
| செயற்பாட்டிலிருந்து உருவான காசு | 210,000 | |
| செலுத்தியவட்டி | (30,000) | |
| செலுத்திய வரி | (70,000) | |
| செயற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசு | | 110,000 |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | |
| நிலையான சொத்து கொள்வனவு | (100000) | |
| முதலீடு செய்தது | (30,000) | |
| முதலீட்டு நடவடிக்கை மூலம் தேறியகாசு | | (130,000) |
| **நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| பங்கு வழங்கி பெற்ற காசு | 50,000 | 50,000 |
| திபெஞ்சர் வழங்கல் | 50,000 | |
| நிதியிடல் நடவடிக்கை மூலம் தேறியகாச | | 100,000 |
| தேறியகாசு அதிகரிப்பு | | 80000 |
| +ஆரம்ப காசும் காசுக்கு சமமான | | 70,000 |
| இறுதிகாசும் காசுக்கு சமமானவை | | 150,000 |


**காசுப்பாய்ச்சல் கூற்றின் குறிக்கோள்கள்**

1) நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் தொடர்பான அக்கறை உடையவாக்ளுக்கு தகவல்களை வழங்கல்
2) காசு முகாமை தொடர்பான திட்டமிடல், தீர்மானம் எடுத்தல், கட்டுப்படுத்தல் போன்ற கருமங்களை ஆற்றுவதற்கான தகவல்களை வழங்கல்
3) காசும் காசுக்கு சமமானவை உருவாக்கப்படும் மூலங்களையும் அவைபயன்படுத்தப்படும் வழிகளையும் இனங்காணல்

**உசாத்துணை நூல்கள்**

1) இலங்கை கணக்கீட்டு நிதியம்
2) Business Accounting - Frank - wood -


சீமாட்டி
(புடைவைக்கடல்)
அனைத்துப்புடைவைகளின்
மொத்த சில்லறை வியாபாரிகள்
SEEMATI
Dealers in Textiles & Fancy Goods
No. 122, Power House Road, Jaffna
Tel: 021-2222196, Fax: 021-2222102
Branch : Mangai Silks, Modern Market,
No.15 Power House Road, Jaffna


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம
For Modern
And Distinctive
SRIE NAGA BOMBAY DESIGN
AND CUTTING CENTRE
BOMBAY DESIGN & CUTTING CENTRE
288, Kasthuriar Road, Jaffna
0776147358


வேலவன்
மிக்சர்
உங்கள் வைபவங்களுக்கு
தேவையான சுவை மிக்க
◎ மிக்சர்
◎ கேக்
◎ பகோடா
◎ பிஸ்கட்
◎ பூந்தி
◎ சொக்லட்
◎ மஸ்கட்
வகைகளை எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்
வேலவன் மிக்சர்
630,பருத்தித்துறை வீதி
நல்லூர்


யாழ் இந்து வர்த்தக மாணவர்
ஒன்றியத்தின் வரவு இதழை
வாழ்த்தும்
தணிலீஸ்
ரெக்ஸ்
மூத்தநயினார் கோவிலடி,
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை

யாழ் இந்து வர்த்தக மாணவர்
ஒன்றியத்தின் **வரவு** இதழை
வாழ்த்தும்

# DMI
## JAFFNA

Stanly Road, Jaffna


# NAGESWARY MOTORS


Repairs of Diesel Lorries, Petrol Vehicles & Minibuses
Specialist in Hydrolics Works, Generator, Injector Pumps &
Nozzle - Body Building, Tinkering, Rewinding & Painting also undertaken



797, K.K.S Road, Jafffna
Dial:021-2222839


THAYA
NAGAI
POONGA
JEWEL MERCHANT
Articles are all guaranteed &
Genuine for Quality Jewels
213C, Kasthuriar Road, Jaffna


வி.எம்.கே.
ஜுவல்லறி
உங்களது பழைய நகைகளைக்கொடுத்து
உடனுக்குடன் புதுப் பொலிவுடன் திகழ
அசல் 22கரட் தங்க நகைகளைத் தெரிவு
செய்ய இன்றே நீங்கள் நாடவேண்டிய இடம்
VMK
Jewellery
Dealers in
22Gt. Gold Jewelleries
Gems & Jewellers
Customers Satisfaction is Our Destination
105, Power House Road, Jaffna
105, மின்சார வீதி, யாழ்ப்பாணம்.


GANESAN
CENTRE
Dealers In Textiles
and fancy goods
K.K.S Road,
Inuvil.

யாழ் இந்து வர்த்தக மாணவர்
ஒன்றியத்தின் **வரவு** இதழை
வாழ்த்தும்

# Duco Traders

**Dealers in Building Materials**

# டியூக்கோ ரேடர்ஸ்

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**Manipay Road Jaffna.**

# SIVAN MOTOR STORES

4 LITRES

ICI

**Dulux Pentalite Plus**

LOW SHEEN EMULSION

EXTRA HIDING

Strategic Sponsors
of the
SRI LANKA INSTITUTE OF ARCHITECTS

## Distributors for C.I.C Paints (pvt) Ltd

*Duco* *Glidden* *Palette*
*Dulex* *Necol* *Autra*

CIC

No. 70/1, Manipay Road, Jaffna

# தலைமையின் சில துளிர்



S. Pangayan
A/L 2008 Commerce
Jaffna Hindu College



ஒழுங்கமைத்தல் ஒன்று சிறப்பாக செயற்படுவதற்கு வழிநடத்தல் மிக அவசியமானதாகும் எனவே வழிநடத்தல் ஒன்றின் பிரதானகூறுகளாக மூன்று விடயங்கள் காணப்படுகிறது.

**தலைமைத்துவம்**
**தொடர்பாடல்**
**தூண்டல்**

இதன் வகையில் தலைமைத்துவம் ஆனது அமைப்பு ஒன்று தனது நோக்கத்தை பயனுறுதி மிக்கதாக மாற்றுவதற்கு சிறந்த தலைமை அவசியமாகும். இத்தகைய தலைமைத்துவப் போக்கே நிறுவன வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கும் மிகப் பிரதான காரணியாகும். இத்தலைமைத்துவம் என்பதை பின்வருமாறு ஒர் வரைவிலக்கணம் கூறலாம்.

நிறுவனம் ஒன்றின் நோக்கத்தை பூர்த்தி செய்து கொள்வதற்கு தனிநபர், குழுக்களின் நடத்தையில் செல்வாக்கு செலுத்தக்கூடிய ஆற்றல் தலைமைத்துவம் ஆகும். ஏனையவர்களுக்கு முன் மாதிரியாக செயற்படுபவரே தலைவர் ஆவார். ஆளுமை என்ற நோக்கில் தலைவர்கள் பின்வரும் தலைமைத்துவ பண்புகளை கொண்டிருத்தல் வேண்டும்.

i) **புருடத்துவ தன்மை:** இது அச்சமின்மையை எந்தசூழ்நிலையிலும் எதிர் கொள்ளும் தற்துணிவை தலைமைக்கு வழங்கும்.

ii) **மனித நடத்தை:** ஏனையோரது கருத்துக்கு மதிப்பளித்து அவர்களது ஒத்துழைப்பினை பெற வேண்டும்.

iii) **விமர்சனங்களை ஏற்கும் பண்பு:** இது கட்டாயமாக இருக்க வேண்டிய பண்பு ஆகும். விமர்சனம் மூலம் குறைகளை களைந்து நிறைவான செயற்பாட்டிற்கு அடி கோலும்

iv) **தீர்மானம் எடுக்கும் ஆற்றல்:** தனது நிலையில் இருந்து மட்டும் சிந்திக்காது அச் செயற்பாட்டுடன் தொடர்புடையவரது நிலையில் விரைவாகவும், விவேகமாகவும் தீர்மானம் எடுத்தல்.

v) **பேச்சாற்றல்:** தலைவர் சிறந்த பேச்சாற்றல் கொண்டிருக்க வேண்டும் கருமத்தை சீராக ஆற்றல் ஏதுவாக அமையும்.

vi) நேர்மை: கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நிலையில் நேர்மை என்ற எண்ணக்கருவினூடாக வெளிப்படுத்துபவராக இருக்க வேண்டும்.

vii) **மைய நோக்கம்** காணப்பட வேண்டும். மேலும் தொழில் நுட்பத்திறன், விசுவாசம், அறிவுத்திறன், ஒத்துழைப்பு, ஊக்கப்படுத்தும் திறன், உணர்வு கட்டுப்பாடு என்பவற்றுடன் தலைமைத்துவ நடத்தைகளாக அறிவித்தல் நடத்தை, கலந்தாலோசித்தல் நடத்தை, இணைதல் நடத்தை ஆகும். நடத்தைக் கோலங்களை கொண்டு மற்றவர்களக்கு முன் மாதிரியான தலைவராக மிளிர வேண்டும்.

viii) முன்னிற்க கூடிய ஆறிறவை கொண்டிருத்தல்

ix) வியாபார வாய்ப்புக்களை என கூட்டியே அறிந்துகொள்ள கூடிய ஆற்றலை கொண்டிருத்தல்.

**பாடசாலை தலைமைத்துவத்தின் சிறப்பியல்பு**

i) பாடசாலைகளுக்கு பொருத்தமான நோக்கக் கூற்றுகளை தெளிவாக வரையறுத்து அவற்றினை அடைய கூடிய வகையில் செயற்பாடுகளை வடிவமைத்து, அமுல்படுத்த கூடிய அர்ப்பணிப்பு இருத்தல் வேண்டும்.

ii) செய்கின்ற தொழில் மீது விருப்புடையவராகவும், தனக்கு கீழ் சேவையாற்றுகின்றவர் மீது நம்பிக்கை இருத்தல் வேண்டும்.

iii) சவால்களை எதிர் கொள்ள கூடியதாகவும், ஆக்க பூர்வமானதாகவும், புத்தாக்கமுடையதாகவும் காணப்பட வேண்டும்.

iv) தொடர்பயிற்சியூடாக தனது தலைமைத்துவத்தை தொடர்ச்சியாக பெற்று மேம்பாடு அடைய உள ரீதியான மனவெளிச்சி, சமநிலை தன்மை உடையதாக இருத்தல் வேண்டும்.


பாடசாலைகளில் பல்வேறு வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக ஆரம்பித்து தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவற்கு பிரதான காரணி அதிபரின் அர்ப்பணிப்புடன் கூடிய தலைமைத்துவம் ஆகும். நிர்வாக தலைமைத்துவத்தினை விட பரந்த நோக்குடன் செயற்படும் கற்பித்தல், தலைமைத்துவம் பாடசாலை கல்வித்தர விருத்திக்கு அவசியம் ஆகும்.

**உசாத்துணை** : வணிகக்கல்வி
சிவநேசராசா

# உள்ளக கணக்காய்வு
# Internal Auditing



M.Suman
A/L 2008 Commerce
Jaffna Hindu College



Internal auditing is an independent appraisal activity within an organization for the review of accounting, financial and other operations as a basis for the service to management. It is a managerial control which function by measuring and evaluating the effectiveness of other controls.

## Objective and Scope of internal auditing

The attainment of the objective of service of management should involve such activities as:

- Reviewing and appraising the soundness, adequacy and application of accounting, financial and operating controls;
- Ascertaining the extent, of compliance with established policies plans and procedures;
- Ascertaining the extent to which organizations assets are accounted for, and save guarded from losses of all kinds;
- Ascertaining the reliability of accounting and other data developed within the organization;
- Appraising the quality of performance in carrying out assigned responsibilities

## Authority and Responsibility

Internal auditing is a staff function rather than a line function.

His freedom to review and appraise policies, plans, procedures and records does not is any way relieve other persons in organization of the responsibilities assigned to them.

Since complete objectivity is essential to the audit install procedures, prepare records or engage in any other activity which they normally would be expected to review and appraise.

4phases of an Internal Auditors Assignment

1) Familiarization
2) Verification
3) Evaluation and
4) Report writing

## Distinction between internal check and internal auditing

Internal check involves a sub-division of duties by means of which no one person is entirely responsible for one transaction.

Ib control to internal checks which are infect an integral part of the organization itself, internal audit is an independent review of the financial operation and records undertaken by the management through the medium of specifically assigned staff who function by evaluation and measuring the effectiveness of other controls.

The main object of internal audit is to assure the management that the internal checks and accounting system are effective both in design and operation.

## Modern Concept of Internal Auditing

Internal auditing is not a more clerical process nor is it a system of internal check. If internal auditing is organized as a routine ticking activity then not only will the quality of internal audit staff deteriorate for want of opportunity to exercise their intelligence but the management also cannot expect anything very valuable or useful from it.

On the other hand if internal auditing is recognized for what it actually is as, a work requiring certain professional and technical skills and calling for exercising judgement and if internal auditing function is organized on that basis, then it can become available instrument for efficiency in administration

## Internal Auditing is an Appraisal Activity

The meaning of appraisal is to judge or estimate the quality or value of

anything. Internal audit appraisals must, therefore, be based on evidence and not on auditors personal reactions, Considerable time should be spent in verifying analyzing records, observing and carrying on discussions with a variety of people to reach an unbiased conclusion. (Please refer to 4 phases of internal auditors assignments above)

'Appraisals' would also include constructive suggestions and recommendation for the consideration needs strengthening

## Essential differences between Internal and External Audit


The prime purpose of external audit is to ascertain and report that the publishes accounts of an organizations are completed in accordance with statutory regulations and with generally accepted accounting principles so as to give a true and fair view of the financial position of the organization and its operation results.

The internal audit approach is through the organization chart and procedures manual It is through a careful study of the organization and procedures that weaknesses in internal check and accounting practices can be detected and remedied

## விமானத்தையே வீழ்த்தும் பறவைகள்

தகாதகாலநிலை மாற்றங்களாலும் உணவு இனப்பெருக்க வாய்ப்புக்களிற்காகவும் பறவைகள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கோ அல்லது ஒரு துருவத்திலிருந்து வேறு பிரதேசங்களிற்கோ குடிபெயர்வது வழமையானது. இப்பறவைகள் பொதுவாக இடம்பெயரும் போது 90 மீற்றர் உயரமளவிலும் சில அதற்கு மேலாலும் பறக்கின்றன. இவ்வாறாக இவை பறக்கின்ற போது விமானங்களுடன் மோதி அவற்றை வீழ்த்துவது பல தடவை நிகழ்ந்துள்ளன. 1973ம் ஆண்டு நவம்பர் 29ம் திகதி ஜவரிக் கோப்ரில் வானில் பறந்து கொண்டிருந்து வர்த்தக விமானமொன்று வல்லூறு இனபறவையுடன் மோதி விபத்துக்குள்ளாகியது இதனால் விமானத்தில் ஓர் இயந்திரம் சீர்குலைந்து இருந்தும்மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.

# Commercial Related URLs



S.Sujeevan
A/L 2008 Commerce
Jaffna Hindu College



*Economics*
www.Nationalacdemies.org
www.Intute.ac.uk
www.Econ.stanford.Edu
www.Economicsnetwork.ac.uk
www.virted.org
www.umass.edu

*micro Economics*
www.econphd.net
www. college board.com

*macro Economics*
www.Amazon.com/macroecnomics
www.oced.org/economics

*Fiscal policy*
www.fiscalpolicy.org
www.finpipe.com
www.Infestopedia.com
www.dctpi.gov
www.econlip.org
www.Indianafiscal.org
www.cato.org/research/fiscal

www.The canadinencylopedia.com
www.Canadineconomy.gc.ca/english/economy/fiscal
www.austrlianreview
www.ecb.int/pub/pdf/scpuups/ecbwp 582/fdf

*Accounting*

www.accounting.com
www.quickmba.com/accounting
www.careers.in.accounting
www.dmoz.org/Business/Accounting
www.lib.isu.edu/bus/account.html
www.proznet.com
www.bls.gov/oco/ocosool.htm
www.jasb.org.
www.fasb.org
www.ventureline.com/glossary.asp
www.accountingeducation.com
www.accountingweb.com.co.uk
www.geekinterview.com/interview questions/Acconting
www.aat.co.uk
www.taxsites.com
www.Staffs.ac.uk.
www.ssrn.com/arn/index.html
www.eaa.online.org.
www.acsbcanada.org
www.gnucash. org
www.Simplyaccounting.com
www.gao.gov
www.accjobs.com
www.accountinglibrary.com
www.aasb.com.au
www.middlecity.com
www.iasplus.com/standard/standard.com
www.masb.org.my
www.aiaponline.com
www.accounting software.net
www.catusaccounting.com
www.gwagner.com/work/green accounting.html
www.smartpros.com
www.accountingaccess.com
www.afaanz.org
www.indiana.edu/ai department of accounting
www.gasb.org

www.cba.ufl.edu/fsoa/
www.plattsburg.edu/academics/accounting
www.cica.ca chartered accounts of canada
www.accresources.com
www.taxgst.com
www.ilog.com/solutions/business/accounting
www.iasb.org/ International accounting standard board
www.fasb.org/financialaccounting standards board(fasb)

*Commerce*

www.commerceonline.com
www.commerce.gov
www.oscommerce.com
www.forbes.com/commerce/
www.chamber.il ceylon chamber of commerce
www.commerce.com.tw/asian B2B
www.iccwbo.org international chamber of commerce
www.commerce.net
www.commercetxedc.org commerce economics development corporation
www.commerce.gov.sb/ Department of commerce
www.comcom.govt.nz commerce commission
www.intracen.org/international Trade centre (JTC)
www.commerce.uct.ac.za faculty of commerce
www.internetnews.com./ec-news/e.commerce.
www.2010commercecentre-gov.bc.ca/ 2010 commerce centre
www.bbc.co.uk/1/hi/business/e-commerce/defult.stm

*Business web's*

www.bussiness objects.com/
www.nytimes.com businessnews
www.businessweek.com/ businessnewsfrom world eids
www.blogbusiness world.blogspot.com/
www.bsa.org/BSA (Businesssoftware alliance)
www.redift.com/money/Indian business news
www.entrepreneur.com/business and small business
www.hp.com/sbso/small and medium business
www.wbesd.org/world business council for sustainable development(WBCSD)
www.ni.gov.njbusiness/
www.unitedstatesvisas. gov/business.html doing business and working temporarily in USA.

# Mediquick Diagnostics

## LONDON MEDICK



மருந்து வகைகள்
பாமா
ஆய்வு கூட
வசதி

56, Clock Towel
Road, Jaffna.
T.P: 021 222 2960

metropolitan


மெற்றோ பொலிற்ரன் நிறுவனத்தின்
யாழ்.மாவட்ட ஏக முகவர்


navahala

# நவகலா





200, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5462



கனொன் போட்டோகொப்பிஇயந்திரம்,
பக்ஸ் இயந்திரம், கனொன் பிறிண்டர்ஸ்,
ரோணியோ மெசின் இவற்றின் Original
உதிரிப்பாகங்கள், ரோணர் வகைகள்
**IBM Computer, ACER Computer** அனைத்தையும்
Canon ஒரே இடத்தில் விற்பனைக்குப் பிந்திய சேவையுடனும்
உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ளலாம்.
imageRUNNER 2016J/2020J
மற்றும் Double A e-Newsletter A4, A3 Paper மொத்தமாகவும்
சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



Best Wishes for "VARAVU" from
KARAN ELECTRICAL
Dealers for Electrical Materials
and
P.V.C. Materials
760, K.K.S. Road, Jaffna.



விவேகானந்தா
அச்சகம்
Offset Printing,
Screen Printing
10–14, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0602216172,
0777222531

இ.ச.பேரம்பலம் சகநிறுவனம்

E.S.PERAMPALAM & CO

E.S.P. NAGARATNAM
*Partner*

ESP & CO
51 YEARS

ESTD. 1953

*Distributors for;*

CIC PAINT (PVT) LTD.

OLE SPRINGS BOTTLERS (PVT) LTD.

எம்மிடம் லுமாலா ஹீரோ சைக்கிள்கள் உதிரிப்பாகங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

இல 50, 52, 54 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

T.P: 021 2222988, 021 222 3096

SRI KUMARAN

HARDWARES

DELEARS IN:

BUILDING MATERIALS AND
RHINO ASBESTOS PRODUCTS

*Asbester sheets, Cements,.*
*Round iron, Tore steel,*
*Angle iron, Flat iron, G.I. Pipes*

STANLY ROAD, JAFFNA.
T.P: 2798, 8304

# அண்ணா தயாரிப்பு

## நாளெல்லாம் புத்துணர்ச்சியுடன்
## இருக்க அருந்துங்கள்

**ஜீவாகாரம்**

உங்கள் சமையலை இலகுவாக்கி விரைவாக உணவு தயாரிக்க
அண்ணாவின் தயாரிப்புக்கள்

போஷாக்குக்
குறைவு,
வளரும் குழந்தைகளுக்கும்,
கர்ப்பிணித் தாய்மாருக்கும்
சிறந்த போஷாக்கு மிக்க
உணவு ஜீவாகாரம்

**அண்ணா பற்பொடி**

உங்களின் பற்களின் வெண்மைக்கும்,
உறுதிக்கும், பற்களை பளபளக்க வைக்கும்



தோசை
உழுந்து மா
வறுத்த உழுந்துமா
சிவப்பு அரிசி மா
ஆட்டாமா
குரக்கன் மா
கடலை மா
கறி மிளகாய்த்தூள்
தனி மிளகாய்த்தூள்
சரக்குத் தூள்
துண்டு மிளகாய்
மஞ்சள் தூள்
மிளகு தூள்
சீரகத் தூள்

## புளும் டல்கம் பவுடர்

உங்கள் ஆலயங்களிலும் இல்லங்களிலும் நறுமணம் கமழ
அண்ணாவின் உற்பத்திகள் ரோஸ் பத்தி, மதுரங்கா பத்தி,
சுகந்தமல்லி பத்தி, துர்க்கா பத்தி இவை அனைத்தையும்
இன்றே நாடுங்கள்

MANUFACTURED AND MARKETED BY:

**ANNA INDUSTRY**


INUVIL

T.P: 021 - 222 3565

# நிதிச்சந்தை
# Financial Market




K. Ajith
A/L 2008 Commerce
Jaffna Hindu College



நுகர்வுப் பொருட்கள், சேவைகளிற்கு காரணம் சந்தைகள் போன்று நிதிக்கும் சந்தைகள் காணப்படுகின்றது.இங்கு நிதிச்சந்தை என்பது பணத்தையோ அல்லது நிதிச்சொத்துக்களையோ கொள்வனவு, விற்பனை செய்வதற்காக கேள்வியாளரும் நிரம்பலாளரும் ஒன்று கூடும் பொதுவானதோர் இடம் அல்லது அமைப்பு ஆகும். இது பரிமாற்றம் செய்து முடிக்கக் கூடிய நவீன தொடர்பு சாதனமாகவும். அமையலாம். இச்சந்தை பொதுவாக 2 வகைப்படும்.

1) பணச்சந்தை (Money Market)
2) மூலதனச்சந்தை (Capital Market)




## பணச்சந்தை *(Money Market)*

அரசாங்கத்திற்கான குறுங்கால நிதியினைப் பெற்றுத் தரக் கூடிய நிதி வளங்கள் இதுவாகும். இலங்கையின் பணச் சந்தையில் ஒழுங்குபடுத்தப்பட்ட குறுங்காலக்கடன் சந்தையாக அழைப்புக்கடன், திறைசேரி, திறைசேரி உண்டியல்களுக்கான சந்தை என்பன குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைக் கண்டுள்ளன.

## அழைப்பு பணச் சந்தை *(Call money market)*

இந்த சந்தையில் பங்கு பற்றுபவர்கள் பெரும்பாலும் வங்கிகளாக இருப்பதனால் இதனை

வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தை எனவும் அழைப்பர் இச்சந்தையில் வணிக வங்கிகளே முதன்மை வகிக்கின்றன.

மேலும் இச்சந்தையில் பணம் பெறுபவர்கள் தற்காலிகமாக பணக்குறையினைக் கொண்டிருக்கும் வங்கிகளாகும் பணத்தினை கொடுப்பவர்கள் தற்காலிகமாக பணமிகையினைக் கொண்டிருப்பவர்களாகவும்இருப்பர். மத்திய வங்கியானது வணிக வங்கிகளுக்கு இறுதிக்கடன் ஈவோனாக தொழிற்படுவது போல அழைப்புப் பணச்சந்தை ஆனது ஒரு இடைநிலை அமைப்பாகவும் மிகவும் குறுகிய காலத்திற்கு வங்கிகளின் தற்காலிப் பணத்தேவையினைப் இனைப்பூர்த்தி செய்யும் ஓர் மூலாதாரமாகவும் விளங்குகின்றது பொதுவாக எவ்வித பொறுப்புக்களும் இன்றியே வங்கிகளிற்கிடையிலான இக்கொடுப்பனவு, பெறுவனவுகள் இடம் பெறுகின்றன.

ஆனால் பணமிகையினை கொண்டிருக்கும் வங்கிக்கும் பணக்குறை இனைக் கொண்ட வங்கிக்கும் இடையிலான இணைப்பினை ஏற்படுத்துவதில்பணத்தரகர் நிறவனங்கள் முக்கிய பாங்கினை வகிக்கின்றன.

## திறைசேரி உண்டியல் சந்தை (Treasury Bill market)

திறைசேரி உண்டியல்கள் அரசாங்கத்தின் குறுங்கால பொறுப்புக்களாகும் ஆரம்பத்தில் 3மாத காலமுதிர்வு உண்டியல்களே வழங்கப்பட்டன தற்போது. 3, 6, 12. முதிர்வு காலத்தை கொண்ட உண்டியல்களும் அரசாங்கத்தினுடைய சார்பில் மத்திய வங்கியினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றது. இத்திறைசேரி உண்டியல் சந்தை இனை 2வகையாகப் பிரித்து நோக்கலாம்.

1) 1ம் தர திறைசேரி உண்டியல் சந்தை
2) 2ம் தர திசைசேரி உண்டியல் சந்தை

1ம் திறைசேரி உண்டியல் சந்தை என்பது அரசாங்கத்தின் பெயரில் மத்திய வங்கியினால் விற்பனை செய்யப்படுகின்ற நிதிச்சொத்துக்களினை முதல் தரவணிகர் என்ற அடிப்படையில் வணிக வங்கிகள் கொடுப்பனவு செய்யும் நிலையே ஆகும்.

2ம் தர திறைசேரி உண்டியல் சந்தை என்பது வணிக வங்கியினால் மத்திய வங்கியிடம் கொள்வனவு செய்யப்பட்ட நிதிச்சொத்துக்கள் மக்களுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களிற்கும் விற்பனை செய்யப்படும் செயற்பாடு ஆகும். இந்த சந்தையில் திறைசேரி உண்டியல்களின் அவசியமாகும். இதன் மூலம் சிறிய முதலீட்டாளர்கள் முதலிட வழி ஏற்படுகின்றது. சிறிய அளவிலான சேமிப்புக்களை ஒன்று திரட்ட பெரிதும் உதவும் அதே போன்று முதலீட்டாளர்கள் உடனடியாக நிதி தேவைப்படும் போது மீள் கழிவு செய்து பணத்தினைப்பெறவும் பெரிதும் உதவும்.

## மூலதனச் சந்தை *(Capital market)*

மூலதனச் சந்தை ஆனது நீண்டகாலநிதி வளங்களினை கையாளுகின்றது. அதாவது அரசாங்கத்திற்கு நீண்டகாலத்தில் நிதியினைப் பெற்றுக் கொடுக்கும் சந்தையாகும் இம் மூலதனச் சந்தைக் கருவிகளுள் பங்குச்சந்தை இனை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

## பங்குச்சந்தை *(Share Market)*

நீண்டகாலத்தில் நிதியினைப் பெற்றுக்கொடுக்கின்ற மூலகங்களில் பங்கு சந்தை முக்கிய இடம் பெறுகின்றது. இப்பங்கு சந்தையில் முதலீடு செய்த முதலீட்டாளர்கள் கம்பனி பங்கு இலாபம் வழங்கத்தீர்மானிக்கும் போது, பங்கு இலாபத்தைப் பெற்றுக் கொள்வர்.

அத்துடன் பங்குகளின் சந்தை விலைகள் உயரும் போது பங்குகளை விற்பனை செய்வதனால் இட்ட முதலீட்டினை விட கூடிய தொகை வருமானமாக பெற்றுக் கொள்ள முடியும் பங்குகள் முதன்முறையாக வழங்கப்படும் போது அது மூல வளங்கள் எனப்படும். அனுமதித்த மூலதனத்தின் ஓர்பகுதியினை மட்டும் வழங்கி மிகுதியை அடுத்த கட்டமாக வழங்கும் நிலையில் அவற்றை முதலில் கொள்வனவு செய்பவர்களிற்கு வழங்குவது எனத் தீர்மானித்து வழங்கும் போது உரிமை வழங்கல் எனப்படும். இவ்வாறு வழங்கும் போது கம்பனி ஒதுக்கமாக பேணிய நிதியை முதலிட தீர்மானித்துஅதற்கு பங்கு தரகர்களுக்கு பங்குகளை ஒதுக்கும் போது அது உபகாரப்பங்கு வழங்கல் எனப்படும். மேலும் திறைசேரி உண்டியல்களுக்கு காணப்படுவது போல பங்குச்சந்தை இலும் முதல் தரச்சந்தை 2ம் தரச் சந்தை எனவும் பிரிக்கப்படும்.

முதல்தரச்சந்தை என்பது புதிதாக பங்குகள் வழங்கல் அல்லது மூல வளங்கள் தொடர்பான நடவடிக்கைகள் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள் என்பவற்றினை இது குறித்து நிற்கும்.

2ம் நிலைச்சந்தை என்பது முன்னர் வழங்கப்பட்ட பங்குகளுக்கு உடனடித் திரவத்தன்மையை ஏற்படுத்தி கொடுக்கும் அமைப்புக்களைக் கொண்டதாக இருக்கும் ஒருவர் ஒரு சந்தர்ப்பத்தில் மிகையாகக் காணப்படும் பணத்தினை நீண்டகால முதலீடுகளில் முதலிட்டால் பணம் தேவைப்படும் போது முதல் நட்டமின்றி பணமாக பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் இருந்தால் மட்டுமே நீண்டகால முதலீடுகளை திரட்டுவது சாத்தியமாகும். எனவே 2ம் தர சந்தையின் ஒழுங்கமைப்பும், வினைத்திறனும் மூலதன சந்தையின் வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகும் மேலும் 2ம் தர சந்தையில் கைமாறும் பங்குகளின் பெறுமதி அவற்றின் விலைகளின் போக்கு என்பவை ஒரு நாட்டினது முதலீட்டு சூழலை எடுத்துக் காட்ட கூடிய குறிகாட்டியாகும்.

# எமது நன்றிகள் இவர்களுக்கு.....

எமது செயற்பாடுகளுக்கு தூண்களாக ஆசி கூறிய

அதிபர், பொறுப்பாசிரியர்

எம் புத்தாயிரமாம் ஆண்டின் புதுமலருக்கு ஆக்கங்களைத்

தந்துதவிய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

எமக்கு பல்வேறு வழிகளில் ஆலோசனைகளை வழங்கிய

வணிகத்துறை ஆசிரியர்கள்

எமக்கு அவசியமான நிதிவளத்தை பெருக்க உதவிய

வணிகப் பெருமக்கள்

எமத மலரை அச்சேற்றிய தந்த

சிமாட் பிறின்டேஸினருக்கும்

மற்றும்

எம்மலர் வெளியாக தோளோடு தோள் உழைத்த தோழர்கள், மற்றும்

நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு வழிகளில் உதவிகளை

நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்

**வர்த்தக மாணவர் ஒன்றியம்**

COMMERCE STUDENTS' UNION

JHC




Smart Printers, 717, K.K.S Road, Jaffna